

## இந்தியப் பிரதமர் மோடி மார்ச்சில் இலங்கை விஜயம்

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 451 பிலவ வருடம், தை மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை (10.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 08, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோருக்கு தடியடிதான் ஒரே தீர்வு



திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி. கருத்து

02 பக்கம்

# தொழிற்சங்க நடவடிக்கையால் வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம்



## நோயாளர்களுக்கு பெரும் இன்னல்

•யோ.தர்மராஜ்

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்காதமையினால் இன்று (10) நான்காவது நாளாகவும் தொடரும் வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகள் முடங்கிப்போயுள்ளன. இதனால், சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இதேவேளை, தங்களுக்கான தீர்வைக்கோரி நேற்று (09) இரண்டாவது நாளாகவும் சுகாதார அமைச்சின் முன்னால் பாரியதொரு ஆர்ப்பாட்டத்தை தொழிற்சங்கங்கள் முன்னெடுத்தன. இதனால், சுகாதார அமைச்சின் முன்னால் பதற்றநிலைமையும் ஏற்பட்டது. 02 பக்கம்




## எரிபொருள் விலையை அதிகரிக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை

எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்காக எரிபொருள் விலையை அதிகரிப்பது தற்போதைக்கு அவசியமானது - என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார். நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த விஜேசிங்க,... 02 பக்கம்

## மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய நடவடிக்கை



### மருந்து உற்பத்தி, வழங்கல் இராஜாங்க அமைச்சு அறிவிப்பு

நாட்டில் மருந்து தட்டுப்பாட்டைத் தடுப்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறைக்கான இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. 02 பக்கம்



## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களா? வர்த்தமானியில் முக்கிய விடயங்கள் இல்லை!

ஐரோப்பிய ஒன்றியம் விசேட அறிவிப்பு

02 பக்கம்

## ஊழியர் சேமலாப நிதிக்கு வரி விதிப்பதை எதிர்க்கிறோம்!

### தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

ஊழியர் சேமலாப நிதிக்கு வரி விதிப்பதை தொழில் அமைச்சு கடுமையாக எதிர்ப்பதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மேலதிக வரிச் சட்டமூலத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட 25 வீத வரி தொடர்பில் அமைச்சரின் நிலைப்பாடு குறித்து கேள்வி எழுப்பினார். 02 பக்கம்

## இந்தியா வழங்கிய ஆதரவால் இலங்கையின் நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன



### வெளிநாட்டமைச்சர் பீரிஸ் புதுடில்லியில் கருத்து

பொருளாதார நெருக்கடிகொண்ட முக்கியமான தருணத்தில் இலங்கைக்கு இந்தியாவின் ஆதரவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. கடுமையாகவிருந்த நெருக்கடிகளை சமாளிப்பதற்கு இது உதவியுள்ளது.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது பேராசிரியர் பீரிஸ் ' இந்து' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

**கேள்வி:-** கடந்த சில மாதங்களாக இந்தியா வழங்கிவந்துள்ள ஆதரவு இலங் கையின் நிலை மையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா?... 07 பக்கம்

## ரிஷாட் வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி



02 பக்கம்



## நாணய நிதிய அறிக்கை பற்றிய விவாதம் தேவை

### ரணில் எம்.பி. சபையில் கோரிக்கை

சர்வதேச நாணய நிதியத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்தப்படவேண்டுமென முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எம்.பி. தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## ஆட்சியை சீர்குலைக்க பல்வேறு முயற்சிகள்!



### ஜனாதிபதி அநுராதபுரத்தில் தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

"நாட்டு மக்கள் எங்களுடன் இணையுங்கள். என் மீது நம்பிக்கை வையுங்கள். தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் ஆட்சியை சீர்குலைப்பதற்கு பல்வேறு முயற்சிகள்... 02 பக்கம்

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிப்பு



•ரஸீன் ரஸ்மின்

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்று புதன்கிழமை புத்தளம் மேல்நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

சுமார் 2 வருடங்கள் தடுப்புக்காவலில் இருந்துவந்த நிலையிலேயே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



எலெக்சனும் இல்ல... இப்போ பொதுக்கூட்டம் நடத்த வேண்டிய தேவை என்ன? மக்கள் ஆதரவை செக் பண்ணுறாங்கள் போல...

## பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தத்தில் மாற்றமில்லை

### சார்ள்ஸ் நிர்மலநாதனின் குற்றச்சாட்டுக்கு அமைதிகாத்த நீதியமைச்சர் அலி சப்ரி



இலங்கையின் நீதியமைச்சினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தத்திலும் முன்பிருந்த விதிகளே முன்கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்தக் குற்றச்சாட்டை நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## முனிதரனை விடுவித்த கொழும்பு நீதிமன்றம்

கொழும்பு, பொரளை சகல புனிதர்கள் தேவாலய வளாகத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த பிரான்சிஸ் முனிதரன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தேவாலயத்தில் பணிபுரியும் இவரே குறித்த தினத்தில் கைக்குண்டு வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்தார்.

எனினும், அவர் ஏழாவது சந்தேக நபராக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 02 பக்கம்



## கடற்றொழிலாளர் விவகாரத்தில் பொறுப்பற்ற முறையில் என்னால் கதையளக்க முடியாது

### நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

10 பக்கம்

## பரீட்சை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித்திகதி நீடிப்பு

2021 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித்திகதி எதிர்வரும் 17ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்கும் திகதி இன்றுடன் (10) நிறைவடையவிருந்த நிலையில், தற்போது காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரிகளுக்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் Exam SriLanka எனும் முகவரிக்கோ பிரவேசித்து சாதாரண தரப் பரீட்சைக்கு இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.




அரச ஊடகங்களின் உயர்பதவிகளில் அதிரடி மாற்றங்களை செய்ய தயாராகி வருகிறது அரச மேலிடம்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தவிர்ந்த இதர நிறுவனங்களில் இந்த மாற்றம் நடக்கவுள்ளது.

ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிதிநிலைமையை இலாவகமாக கையாண்டு வருவதால் அதில் மாற்றங்கள் தேவையில்லை என்பது அரச மேலிடத்தின் நிலைப்பாடாம்.

## "அபாயா" விடயத்தில் தமிழக அரசியல் தலைமைகளை முன்மாதிரியாக கொள்க!

### தமிழ் எம்.பிக்களிடம் ஹரீஸ் எம்.பி. வேண்டுகோள்



•நூருல் ஹுதா உமர்

தமிழக அரசியல் தலைமைகள் போன்று மிகத்தெளிவாக அச்சமின்றி சகோதர சமூகங்களின் உரிமை, கலாசார விடயங்களில் மனம் திறந்து பகிரங்கமாக பேசுங்கள். அப்போதுதான் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமை நிலவும். 07 பக்கம்

## ஆர்ப்பாட்டத்தில்...

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தடிகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார நிபுணர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள் ளதால் போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்தின் காரணமாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க, விஜித ஹேரத் ஆகியோர் முட்டை மற்றும் தடிகளால் தாக்கப் பட்டதையும் அவர் நினைவு கூர்ந்தார்.இது போன்ற போராட்டங்களில் பொதுமக்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த ஒரே வழி, தடியடிதான் என்றும் அவர் கூறினார்.

## ரிஷாட் வெளிநாடு...

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் இந்த அனுமதியை 03 மாத காலத்துக்கு வழங்கியுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன்படி, ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கு தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றமும், தனது வீட்டில் பணிப்பெண்ணாகப் பணியாற்றிய சிறுமி தீயில் எரிந்து உயிரிழந்த வழக்கு தொடர்பில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றமும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிணை வழங்கியிருந்தது.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்...

குறிப்பாக குற்ற ஒப்புதல் என்ற விடயத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை. சித்திரவதைகளுக்கு உட்பட்டுள்ள ஒருவர், அதிகாரிகளால் கூறப்படுகின்ற இடங்களில் கையொப்பமிடும் முறையே மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் இதனை கூறியபோது குறுக்கிட்ட நீதியமைச்சர் அலி சப்ரி, நல்லாட்சியில் செய்யாத பல விடயங்கள் இந்த திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனினும் அவருடன் வாதிட்ட நிர்மலநாதன், இது சர்வதேசத்தை ஏமாற்றும் வேலை என்று குறிப்பிட்டார். இதனையடுத்து, அலி சப்ரியினால் எதுவும் பேச முடியாத நிலையில் தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

## முனிதரனை விடுவித்த ...

இந்நிலையில், அவரை தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு போதிய குற்றச்சாட்டுகள் இல்லை என கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு நீதிமன்றுக்கு அறிவித்தது.

இதனையடுத்தே கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய அவரை விடுதலை செய்யுமாறு நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

ஏற்கனவே இவர் கடந்த சுதந்திர தினத்தன்று விடுவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அன்றைய தினம் விடுவிக்கப்படவில்லை.

## நாணய நிதிய அறிக்கை...

நேற்று நாடாளுமன்றத்தில் பேசிய முன்னாள் பிரதமர், பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் இலங்கையுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை 04ஆவது பிரிவு ஆலோசனை அறிக்கையை வெளியிடும் என்றார்.

இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சபைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் கோரிக்கை விடுத்தரணில், இதனை விவாதிப்பதற்கு மார்ச் மாதத்தில் திகதி கோரினார்.

இந்தக் கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் குணவர்தன, அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றார்.

விவாதத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அடுத்த நாடாளுமன்ற அமர்வில் கலந்துரையாடுவதற்கு இரண்டு நாள் விவாதத்தை ஐக்கிய மக்கள் சக்தி கோரியதாகவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

நிதியமைச்சர் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எவ்வித அறிக்கையும் வெளியிடவில்லை எனவும் அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்துகளை மாத்திரமே வழங்குவதாகவும் தெரிவித்தார்.

## மருந்து தட்டுப்பாட்டை...

தற்போதுள்ள மருந்துகளின் தேவையை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட கால அவகாசத்தின் அடிப்படையில், மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு டொலர்களின் தேவை குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரி செயலாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னைய அறிவிப்புகளின்படி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கி 07 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது என இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையை சமாளித்து மருந்து தட்டுப்பாட்டை குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள் விலையை...

அரசாங்க அதிகாரிகள் சிபெட்கோ எரிபொருட்களின் விலைகளை அதற்கேற்ப திருத்துவார்கள் என எதிர்பார்க்கின்றார்.

எரிபொருள் விலையை அதிகரிப்பது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முடிவெடுக்க முடியாத நிலையில், எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடமும் எரிசக்தி அமைச்சிடமும் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளது.

விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சர் அரசாங்கத்துக்கு அறிவிக்கும்போது ஏற்பட்ட இழப்புகள் குறித்து விடயத்துக்கு தொடர்பான அமைச்சருக்கு அறிவிக்கிறது என்றும் விஜேசிங்க மேலும் கூறினார்.

டிசம்பர் மற்றும் ஜனவரி மாத இறுதியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படாதபோதிலும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை கொள்வனவு செய்த நபர்கள், சி.பி.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்வதால், பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் இழப்புகள் அதிகரித்து வருவதாக சுமித் விஜேசிங்க மேலும் தெரிவித்தார்.

## இந்தியப் பிரதமர் மோடி...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக மோடி இலங்கைக்கு வர வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


இலங்கையுடனான தனது உறவை மேலும் வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த விஜயங்கள் பார்க்கப் படுகின்றன.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் புதுடில்லிக்கான தனித்தனியான விஜயங்களை முடித்துக்கொண்டுள்ளனர்.

தொடர் பேச்சுகளுக்காக பெசில் ராஜபக்ஷ மீண்டும் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸுடனான சந்திப்பைத் தொடர்ந்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ட்விட்டரில், இலங்கையை வலுப்படுத்தும் பொருளாதார மற்றும் முதலீட்டு முயற்சிகள் குறித்து அவர்கள் விவாதித்ததாகவும், இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான கூடுதல் நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தியதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மீனவர்கள் விவகாரம் தொடர்பாக இருதரப்பும் கருத்துகளை பரிமாறிக்கொண்டதுடன், இருதரப்பு வழிமுறைகள் விரைவில் சந்திக்க வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டனர்.






## பயங்கரவாத தடைச்சட்டத்தில்...

இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீதான திருத் தங்களை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம் , இது தொடர்பில் வெளியாகியுள்ள வர்த்தமானியில் முக்கிய விடயங்கள் இடம்பெற்றிருக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்பை, ஈடுபாட்டை தொடரவேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலுவானவிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்து வதை இலங்கை குறைக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் தங்களின் கூட்டு ஆணைக்குழுவின் 24ஆவது கூட்டத்தினை 8ஆம் திகதி பிரசல்ஸ்சில் நடத்தின.

சிநேகபூர்வ திறந்த சூழ்நிலையில் இடம்பெற்ற இந்த சந்திப்பு இருதரப்பு உறவுகள் குறித்தும், நல்லாட்சி, நல்லிணக்கம், மனித உரிமைகள், வர்த்தகம், காலநிலை மாற்றம், சூழல் பாதுகாப்பு, பயங்கரவாதம் உட்பட இரு தரப்பு நலன்களுடன் தொடர்புடைய பலதரப்பட்ட விடயங்கள் குறித்து கருத்துகளை பரிமாறியது.

கொவிட் -19 பெருந்தொற்றினை பொறுத்தவரை, இலங்கையின் சிறப்பான தொற்றுநோய் மூலோபாயத்துக்காக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை பாராட்டியது.

பெருந்தொற்றினால் தீவிரமடைந்துள்ள பலவீனங்கள், சமத்துவமின்மைகளுக்கு தீர்வை காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஐரோப்பிய ஒன்றியம், கொவிட் தடுப்பூசிகள், வருமானம் குறைந்த – நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு நியாயமான – சமமான முறையில் கிடைப்பதை உறுதி செய்வதற்கான தனது அர்ப்பணிப்பை வலியுறுத்தியது.

சர்வதேச தடுப்பூசி சமத்துவத்துக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பை இலங்கை வரவேற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திலும் இலங்கையிலும் உரிய நடவடிக்கைகள் மற்றும் சட்ட மூலங்கள் குறித்து தகவல்களை பரிமாறுவதற்கு இந்த சந்திப்பு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தது.

ஜனநாயகம், நல்லாட்சி சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள், கருத்து சுதந்திரம், ஒன்றுகூடுவதற் கான சுதந்திரம் போன்றவை குறித்து கலந்துரை யாடல்களின்போது கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை நல்லிணக்கம் மற்றும் சுயாதீன ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தது. குறிப்பாக காணாமல்போனவர்களின் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஐக்கியம் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், இலங்கையின் மனித உரிமை ஆணையகம் ஆகியவை குறித்து இலங்கை சுட்டிக்காட்டியது.

ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பொறிமுறை களுடன் ஈடுபாட்டை ஒத்துழைப்பை தொடரவேண்டும் என வலுவான விதத்தில் வலியுறுத்தியுள்ளது.

இந்த சூழமைவில் ஐரோப்பிய ஒன்றியம், சுயாதீன அமைப்புகள் சுதந்திரமாகவும் சிறப்பாகவும் செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

சிவில் சமூகத்தை வலுப்படுத்தவேண்டியதன், அது அதன் முழுமையான பன்முகத்தன்மையுடன் செயற்படுவதற்கான தளத்தை வழங்கவேண்டி யதன் முக்கியத்துவத்தை ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஏற்றுக்கொண்டன.

நீதிசீர்திருத்தம் மற்றும் நல்லிணக்கத்துக்கு இலங்கைக்கான தனது தொடர்ச்சியான ஆதரவை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் மீதான திருத் தங்கள் என சமர்ப்பிக்கப்பட்டவற்றை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது.

எனினும், வர்த்தமானியில் வெளியாகியுள்ள திருத்தப்பட்ட சட்டமூலத்தில் முக்கியமான கூறுகள் இடம்பெற்றிருக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தராதரத்திலானதாக மாற்றுவதற்காக எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த கருத்துகளை இலங்கை கருத்தில் எடுத்தது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை பயங்க ரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை குறைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள் ளவர்களை பிணையில் விடுதலை செய்வதற் கான நடைமுறை சாத்தியமான நிர்வாக நடவ டிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக்கொண் டுள்ளது.

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லா...

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டு சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் தற்போது சதி செய்தமை, சமூகங்களிடையே வெறுப்புணர்வை தூண்டிய குற்றச்சாட்டுகளின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சார்பில் அவரது சட்டத்தரணிகள் அவருக்கு பிணை வழங்குமாறு கோரியிருந்தனர்.

எனினும், பிணை வழங்கும் அதிகாரம் மேல்நீதிமன்றத்துக்கு இல்லை எனக் கூறி சட்டத்தரணி ஹிஜாஸ் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை கோரிக்கையை இரு முறை புத்தளம் மேல் நீதிமன்றம் மறுத்தது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிரான சாட்சி விசாரணைகள் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போதே ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் இந்திரதிஸ்ஸ முன்வைத்த பிணைக் கோரிக்கை குறித்த விவகாரம் தொடர்பிலான வழக்கை விசாரிக் கவென விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள சிலாபம் மேல் நீதிமன்றின் நீதிபதி குமாரி அபேவர் தனவினால் இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில், தனக்கு பிணை அளிக்க முடியாது என புத்தளம் மேல்நீதிமன்றம் கடந்த ஜனவரி 28ஆம் திகதி வழங்கிய உத்தரவை திருத்தி, தன்னை பிணையில் விடுதலை செய் யுமாறு கோரி சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சார்பில் மேன்முறையீட்டு நீதிமன் றத்தில் CA/PHC/APN/10/22 எனும் இலக்க சீராய்வு மனுவின் உத்தரவு கடந்த 07ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இதன்போது, சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் புத்தளம் மேல் நீதிமன்றத்துக்கு அன்றையதினமே அறிவித்தல் வழங்கியது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் சட்டத்தரணி ஹிஜாஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் உத்தரவாக இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளனர்.

அதன்படி குறித்த உத்தரவை உடனடியாக புத்தளம் மற்றும் சிலாபம் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்குமாறும், அங்கு பிணை நிபந்த னைகள் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

மேற்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இந்த பிணை உத்தரவின் பிரகாரம், உடனடியாக புத்தளம் மேல் நீதிமன்றில் விசாரணையில் உள்ள H.C / 78 / 2021 எனும் வழக்கை முன் கூட்டி விசாரணைக்கு அழைக்க சட்டத்தரணி ஹிஜாஸ் தரப்பால் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அது நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே, புத்தளம் மேல் நீதிமன்றத்துக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்திருந்த உத்தரவுக்கு அமைவாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்று (09) புத்தளம் மேல்நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.

தனக்கு பிறப்பிக்கப்பட்ட பிணை நிபந்தனை களை பூர்த்தி செய்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, நேற்று மாலை புத்தளம் மேல்நீதிமன்றத்திலிருந்து வெளியேறிச் சென்றார்.

எந்த குற்றமும் செய்யாமல் தடுத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் தனக்காகவும் தனது விடுதலைக்காகவும் பிரார்த்தனைகள் மற்றும் அனைத்து வழிகளிலும் முயற்சிகள் செய்த அனைவருக்கும் தனது நன்றியை தெரிவிப்பதாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, நீதிமன்றத்தில் இருந்து வெளியேறிச் செல்லும்போது குறிப்பிட்டார்.

இதேவேளை, மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமையை சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட மனித உரிமைகள் அமைப்புகள், பொது அமைப்புகள் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊழியர் சேமலாப நிதிக்கு...

பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தற்போது நாட்டில் உள்ள வெளிநாட்டு கையிருப்பு மூன்று வாரங்களுக்கு மட்டுமே போதுமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த விடயத்தை சபையில் எடுத்துரைக்க அரசாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகப்பெரிய நிதியான 03 டிரில்லியன் ரூபா பெறுமதியான ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது அரசாங்கம் 25 சதவீத வரியை விதித்துள்ளதாகவும் இதன் மூலம் சுமார் 250 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டப் படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

வரவு - செலவுத் திட்ட கிராம அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக ‘100,000 திட்டங்களை’ நடைமுறைப்படுத்துவதற்காக பொதுமக்களுக்குச் சொந்தமான நிதியை நிதியமைச்சர் முறைகேடாகப் பயன்படுத்த முயற்சிப்பதாகவும் சஜித் குற்றம் சுமத்தினார்.

ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 65 பில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்த முயல்கிறதா என்று அவர் தொழில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இச்சட்டம் ஆரம்பத்தில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தி னால் முன்வைக்கப்பட்ட விளக்கத்தின் ஊடாக உள்நாட்டு இறைவரி சட்டத்தின் விதிகளின்படி ஈ.பி.எவ். மூலம் ஈட்டப்படும் இலாபத்துக்கு வரி விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் விளக்கம் தவறானது என்று தொழில் அமைச்சு ஒரு கொள்கை முடிவை எட்டியுள்ளது என்று கூறிய அமைச்சர், அவர்கள் அந்த முடிவை திறைசேரிக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையருக்கும் அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் சரியான விளக்கத்தை வழங்க வேண்டும் என அமைச்சர் நிமல் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஈ.பி.எவ். பெறுபவர்கள் அந்த நிதியை திரும்பப் பெறும்போது மீண்டும் வரி விதிப்புக்குள்ளாகின்றார்கள். இதன் காரணமாக முதலீடுகள் மீது மீண்டும் இரட்டை வரி விதிக்கப்படும் என்பதால் இது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கோரினார்.

இரட்டை வரி விதிப்பு சட்டத்துக்கு எதிரானது என கிரியெல்ல எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆட்சியை சீர்குலைக்க...

முன்னெடுக்கப்படுகின்றன’ என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, உங்களுக்கு வழங்கிய வாக்குறுதி களை நான் நிறைவேற்றியுள்ளேன். 15 வருடங் களாக அமைச்சராக இருந்து எதனையும் செய்யா தவர்கள் இன்று மக்கள் மத்தியில் சென்று போலியான கருத்துகளை முன்வைக்கின்றனர். ஆனால், போலியான கருத்துகளுக்கு ஏமாந்து நாட்டை காட்டிக்கொடுக்க தயாராக வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று (09) இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாம் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

என்னுடைய முதல் தேர்தல் பிரசாரக் கூட்டத் தில் இலவசமாக உரம் வழங்குவதாகவும் நெல்லுக்கு நிர்ணய விலையையும் வழங்குவதாக கூறினேன். ஆட்சிக்கு வந்ததும் என்னுடைய முதல் செயற்பாடாக அதனையே செய்தேன். எனவே, உரமில்லாவிட்டாலும் விவசாயிகளின் வருமானத்தை நூறு வீதம் அதிகரிப்பேன் என்பதையும் உறுதியளிக்கின்றேன்.

மேலும், உங்களிடமிருந்து பறிக்கப்பட்ட இடங்களை மீளத் தருவதாக கூறினேன். அதனையும் செய்துள்ளேன். விவசாயிகளுக்காக எதனையும் செய்வதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

05 வருடங்களாக விவசாயத்துக்கு எதனையும் செய்யாதவர்கள், இன்று ஜனாதிபதியாகும் கனவில் விவசாயிகளுக்கு பொய்யான கருத்துகளை கூறி நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். அன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆட்சி அமைத்தனர். ஆனால், கடந்த 05 வருடங்களில் என்ன செய்தனர், நாங்கள் பலப்படுத்தியிருந்த தேசிய பாதுகாப்பை சீர்குலைத்தனர்.

இராணுவ வீரர்களை காட்டிக்கொடுத்தனர், சர்வதேசத்திடம் சென்று இறையாண்மையை காட்டிக்கொடுத்தனர். மத குருக்களை நீதிமன் றத்துக்குச் சென்றனர். அதனை எங்களுடைய ஆட்சியில் இல்லாது செய்துள்ளோம்.

இன்று தேசிய பாதுகாப்பை உறுதி செய்துள் ளோம். எனவே, போலிப் பிரசாரங்களுக்கு ஏமாந்து, நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டாம். 15 வருடங்களாக அமைச்சராக இருந்தவர்கள் இன்று மக்கள் மத்தியில் சென்று போலியான கருத்துகளை கூறுகின்றனர். ஆனால், நாங்கள் வேலைகளை செய்துவிட்டே மக்கள் மத்தியில் வருகின்றோம். எங்களுடைய கொள்கைகள் எதிர்கால தலைமுறையினரை சிந்தித்து முன்வைக் கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் எங்களுடன் இணையுங்கள். என் மீது நம்பிக்கை வையுங்கள். தேசிய மற்றும் சர்வதேசங்கள் இந்த ஆட்சியை சீர்குலைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை முன்னெடுக்கின்றன. வாக்குறுதியளித்த சுபீட்சத்தின் நோக்கு திட்டங்களை எதிர்வரும் வருடங்களில் நிறைவேற்றுவேன். எதிர்வரும் மூன்று வருடங்களில் அரச அதிகாரிகள் மக்களுக்காக செயற்பட வேண்டும் - என்றார்.

## தொழிற்சங்க நடவடிக்கையால்...

சம்பள முரண்பாடு உள்ளிட்ட 07 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 07ஆம் திகதி தொடக்கம் சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன்படி, இலங்கை தாதியர் சங்கம், சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் மற்றும் இடைநிலை வைத்தியர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு மத்தியில் தங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்குமாறு கோரி குறித்த தொழிற்சங்கங்களால் நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல மற்றும் குறித்த தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

எனினும், அந்தப் பேச்சுவார்த்தையில் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படாதமையினால் இரு நாட்களாக முன்னெடுத்துள்ள தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெ டுப்பதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. அதற்கமைய, நேற்று (09) மூன்றாவது நாளாகவும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்திருந்தது.

எனினும், நேற்று சுகாதார அமைச்சின் முன்னால் இரண்டாவது நாளாகவும் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த போதிலும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காதமையினால் இன்று (10) நான்காவது நாளாகவும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்கிறது. அதன்படி, 24 போதனா வைத்தியசாலைகள், 26 பொது வைத்தியசாலைகள், 46 பிரதான வைத்தியசாலைகள், 410 மாவட்ட வைத்தியசாலைகளில் இந்தப் போராட்டம் தொடர்கிறது.

இவர்களின் போராட்டத்தால் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகள் எவ்வித செயற்பாடுகளுமின்றி முடங்கிப் போயுள்ளன. இதனால், சிகிச்சைகளுக்காக வருகைதந்த நோயாளிகள் பெரும் நெருக்கடிகளுக்கும் அசௌ கரியங்களுக்கும் எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**10.02.2022 வியாழக்கிழமை தை 28**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: ரோகிணி** அ.கா. 12.23 - 11.02.2022 அதிகாலை 3.32 வரை

**யோகம்: மாகேந்திரம்** மாலை 6.50 வரை

**வைதிருதி** மாலை 6.50 - 11.02.2022 இரவு 7.50 வரை

**திதி: பூர்வ பட்ச நவமி** காலை 11.08 வரை

**பூர்வ பட்ச தசமி** காலை11.08 -11.02.2022 பிற்பகல் 1.52 வரை

**முற்கரணம்: கௌலவம்** காலை 11.08 வரை

**பிற்கரணம்: தைதுலம்** காலை 11.08 - 11.02.2022 அதிகாலை 12.30 வரை

**சுப நேரங்கள்** காலை 11.15 - பி.ப 12.25

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்** பிற்பகல் 1.54 - 3.23

**குளிகை காலம்** காலை 9.27 - 10.56

**எமகண்ட காலம்** காலை 6.29 - 7.58

**துர் முகூர்த்தம்** காலை 10.26 - 11.14 மாலை 3.11 - 3.59

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வாழ்க்கைத்துணையை மதிப்பாக வைத்திருப்பது நன்மை. மருத்துவ செலவுகள் ஏற்படலாம். புதிய வருவாய்க்கான நல்வழி கிடைக்கலாம். உங்கள் மீதான எதிர்ப்புகளில் கவனம் தேவைப்படலாம். இறைதியானம் நன்மை.

**ரிஷபம்:** சுப நிகழ்வுக்கான செலவுகள் ஏற்படலாம். இல்லத்தில் செழிப்புடன் அமைதியும் தோன்றலாம். புதிய நட்பு உண்டாகலாம். தடைப்பட்ட சில வேலைகளின் நிறைவேற்றம் ஏற்படலாம்.

**மிதுனம்:** அன்றாட செயல்கள் ஒழுங்கு பெறாமல் இருக்கலாம். தேவையற்ற அலைச்சல் ஏற்படலாம். சில கடந்த கால கசப்பான நினைவுகள் மனதில் கவலையை தோற்றுவிக்கலாம். குடும்பத்தினரின் உணர்வுகளை மதித்து அன்பை பகிர்தலால் உறவு மேம்படலாம். இறைதியானம் மன அமைதி தரும்.

**கடகம்:** பரம்பரை சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கலாம். வேலைத்தளத்தில் உற்சாகம் மேம்படும். சில அறியாத பய உணர்வுகள் நீங்கும். புதிய திட்டங்களில் உங்களுக்கு உற்சாகம் அதிகரிக்கலாம்.

**சிம்மம்:** பணியிடங்களில் உங்கள் மேலதிகாரிகளுக்கு உங்களால் மகிழ்ச்சி உண்டாகலாம். நிதி ஒப்பந்தங்களில் கவனம் தேவைப்படலாம். சில பழைய உறவுகள் மீண்டும் கிடைக்கலாம். கருத்துகளை புத்திசாதுரியத்துடன் சொல்வது நல்லது. வாழ்க்கைத்துணையுடன் நல்ல இணக்கம் நிலவும்.

**கன்னி:** தத்துவ ஆராய்ச்சி மேம்படும். வேலைத்தளத்தில் நீங்கள் எதிர்பார்த்த பொறுப்புகள் கிடைக்கலாம். ஆன்மீக நம்பிக்கை உயரலாம். சமூக மதிப்பு மேம்படும். தூர பயணத்தால் சோர்வு உண்டாகலாம்.

**துலாம்:** இல்லத்தில் அமைதியான சூழல் உருவாகும். சில செலவுகளால் கவலை உண்டாகலாம். பணியிடங்களில் கடின உழைப்புக்கு வெகுமதி கிடைக்கலாம். தியானத்தால் மன அமைதி ஏற்படும். பேசும் சொற்களில் கவனம் தேவைப்படலாம்.

சந்திராஷ்டமம்: சுவாதி நட்சத்திரத்திற்கு இரவு 8.44 வரை விசாகம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு இரவு 8.44 - 11.02.2022 மாலை 5.06 வரை.

**விருச்சிகம்:** பணிகளில் மன உறுதி மேம்படுவதுடன், பணி முறையிலும் மாற்றம் உண்டாகலாம். பிள்ளைகளுக்கு தேவையான நேரத்தை தருவது அவர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்தும். வணிகத்தில் உறுதித்தன்மை உருவாகலாம்.

**தனுசு:** மனதில் பல்வேறு திட்டங்கள் உருவாகலாம். பரம்பரை வணிகத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். உடல்நலம் சீராகும்.

**மகரம்:** தரகு சம்பந்தப்பட்ட வேலைகளில் இலாபங்கள் அதிகரிக்கலாம். தம்பதியரிடையே கருத்து வேறுபாடுகள் மறந்திருப்பது நன்மை. உங்கள் பேச்சில் யாராவது குறுக்கீடு செய்தால் கோபப்பட வேண்டாம்.

**கும்பம்:** வணிகத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். தொழில்நுட்ப வேலைகளில் நன்மை உண்டாகலாம். வேலைத்தளத்தில் மேலதிகாரிகளுடன் மரியாதையாக இருப்பது நன்மை தரும். புதிய கற்கைகளும் ஏற்படலாம்.

**மீனம்:** வாழ்க்கைத்துணையுடன் பயணம் உருவாகலாம். பண வரவு அதிர்ஷ்டம் ஏற்படலாம். புதிய நண்பர்களை நம்புவதில் கவனம் தேவைப்படலாம். கடந்த கால சில அனுபவங்கள் சாதகமானதாக அமையலாம்.

# இந்திய மீனவர்களின் படகுகள் ஏலம்: தமிழகத்திலிருந்து விசேட தூதுக்குழு

## இலங்கை வருவதற்கு ஏற்பாடுகள் நடப்பதாக தூதரகம் அறிவிப்பு

இந்திய மீனவர்களின் படகுகள் இலங்கையில் ஏலத்தில் விற்பனைசெய்யப்படுகின்றமை தொடர்பில் தமிழகத்திலிருந்து விசேட குழுவொன்று இலங்கைக்கு வருகைதருவதற்கு அவசியமான ஏற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்தியத் தூதரகத்தினால் நேற்று (09) வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இந்திய மீனவர்களின் படகுகள் ஏலம் விடப்படுவது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் பல்வேறு அறிக்கைகளையும் வெளியீடுகளையும் பார்த்துள்ளது.

இந்த விடயத்தில் இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்கனவே புரிந்துணர்வு இருப்பதாக ஆரம்பத்தில் வலியுறுத்தப்படுகிறது. இந்தப் புரிந்துணர்வுக்கிணங்க இலங்கையில் மீட்க முடியாத இந்திய மீன்பிடிப் படகுகளை அப்புறப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து விசேட குழு இலங்கைக்கு வருகைதரவிருந்தது.

தமிழகத்திலிருந்து விசேட குழுவொன்று இலங்கைக்கு வருகைதருவதற்கு அவசியமான ஏற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் கோரப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதுளை வைத்தியசாலையில் 15 வைத்தியர்களுக்கு கொரோனா

**பதுளை பொது மருத்துவமனையின் 15 வைத்தியர்கள் உள்ளிட்ட 55 மருத்துவமனை ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**இதனை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊவா மாகாண இணைப்பாளரும் பதுளை பொது மருத்துவமனையின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரியுமான மருத்துவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்த 09 மருத்துவர்களில் 06 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இரு தாதிகள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் பணிபுரியும் கனிஷ்ட ஊழியர் ஒருவரும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.**

# யாழ். பல்கலை சிரேஷ்ட மாணவர் மீது கல்லுண்டாயில் கடுமையான தாக்குதல்

## பல்கலைக்கழகத்தில் அரைக்காற்சட்டையுடன் நுழைந்தவரை கண்டித்ததன் விளைவென பொலிஸில் புகார்

அரைக்காற்சட்டையுடன் யாழ். பல்கலைக் கழகத்திற்குள் வந்த மாணவனை கண்டித்த சிரேஷ்ட மாணவன் யாழ். பல்கலைக்கு வெளியில் வைத்து தாக்கப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ். பல்கலைக்கழகத்தினுள் கனிஷ்ட மாணவன் ஒருவர், பல்கலைக்கழக மாணவன் அல்லாத தன்னுடைய நண்பர் ஒருவருடன் அரைக்காற்சட்டை அணிந்து பல்கலைக்கழக வளாகத்துக்கு கடந்த வாரம் வந்துள்ளார்.

அதனை அவதானித்த மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்கள் குறித்த மாணவனை அழைத்து அரைக்காற்சட்டையுடன் பல்கலை வளாகத்தினுள் நுழைந்தமையை கண்டித்து, பல்கலை வளாகத்தினை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

அதன்போது, மாணவனுடன் வந்த பல்கலைக்கழகம் சாராதவர், சிரேஷ்ட மாணவர்களுடன் முரண்பட்டுள்ளார். அதனையடுத்து அங்கு வந்திருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அரைக்காற்சட்டையுடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் நின்றவர்களை வெளியேற்றியிருந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற பின்னர், அரைக் காற்சட்டையுடன் வந்த நபர்களை கண்டித்த சிரேஷ்ட மாணவர் ஒருவர் கல்லுண்டாய் வெளி ஊடாக தனது நண்பர் ஒருவரின் முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை, முச்சக்கர வண்டியை கல்லுண்டாய் வெளியில் வழிமறித்த கும்பல் ஒன்று மாணவன் மீது சரமாரியாக தாக்குதலை நடாத்தி விட்டு தப்பி சென்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக ஒழுக்காற்று குழுவிற்கு தாக்குதலுக்கு இலக்கான மாணவன் முறையிட்டதை அடுத்து, பல்கலைக்கழகத்திற்கு வெளியே நடைபெற்ற சம்பவம் என்பதனால், அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக மாணவனால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஐ.தே.க. தேசிய அமைப்பாளராக

## சாகல ரத்நாயக்க நியமனம்



**ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.**

**சாகல ரத்நாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக உள்ளார். அவரை தேசிய அமைப்பாளராக நியமிப்பதற்காக கட்சியின் செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்படவுள்ளது.**

**எவ்வாறாயினும், ரத்நாயக்கவை அப்பதவிக்கு நியமிப்பதற்கு கட்சி நிர்வாகக் குழு அனுமதி வழங்கியுள்ளது.**

# பொரளை தேவாலயத்திலிருந்து கைக்குண்டு மீட்பு: விசாரணைகளை துரிதமாக நிறைவுசெய்ய பணிப்பு

## முன்னேற்ற அறிக்கையை மார்ச் 29இல் சமர்ப்பிக்க நீதிமன்று உத்தரவு

பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளை துரிதமாக நிறைவு செய்து மன்றில் விடயங்களை முன்வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு நேற்று (09) உத்தரவிட்டார்.

விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தேவாலய வளாகத்தில் கைக்குண்டு வைத்த சம்பவத்தின் பின்னணியில் மேலும் பலர் உள்ளமை விசாரணைகளில் புலனாவதாக மன்றில் தெரிவித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப்ப பீரிஸ், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகள் தொடர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விசாரணைகளை மேற்கொண்டு மன்றில் விடயங்களை முன்வைப்பதற்கு போதிய கால அவகாசத்தை வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தேவாலயத்தின் மற்றுமொரு ஊழியரையும் விடுதலைசெய்ய சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மன்றுக்கு அறிவித்தார்.

இதற்கமைய இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நால்வரும் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் குறித்த சந்தேகநபர்கள் எவ்விதத்திலும் தொடர்புபடவில்லையென்பது விசாரணைகளில் தெரியவந்ததால் அவர்களை விடுதலை செய்யுமாறு சட்ட மா அதிபர் வழங்கிய ஆலோசனையின் பேரில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வைத்தியர் ஷர்லி ஹேரத் தொடர்பிலான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து இதுவரை நீதிமன்றத்தில் விடயங்கள் முன்வைக்கப்படவில்லையென பிரதிவாதி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி சமிந்த அத்துகோரள தெரிவித்தார்.

சந்தேகநபரான குறித்த வைத்தியர் தொடர்பிலான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து மன்றில் விடயங்களை முன்வைக்குமாறு அவர் விசாரணை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த சம்பவத்துடன் தேவாலயத்தின் எந்த ஊழியரும் தொடர்புபடவில்லையென கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை விசாரணைகளின் ஆரம்பத்திலேயே தெரிவித்த விடயம், இன்றுவரை நிரூபணமாகியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி நெவில் அபேரத்ன இதன்போது குறிப்பிட்டார்.

# அம்பியூலன்ஸ் சாரதி மீது கொலை முயற்சி: பிரதான சந்தேகநபர் ஹெரோயினுடன் கைது

பாணந்துறை ஆதார வைத்தியசாலை முன்றலில் அம்பியூலன்ஸ் சாரதி மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொலை செய்ய முயற்சிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பாணந்துறை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்த 08 கிராம் ஹெரோயினும் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

குருப்புமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை தடுத்துவைத்து விசாரிப்பதற்கான உத்தரவை பாணந்துறை நீதவான் நீதிமன்றத்திடம் பெறுவதற்கு விசாரணை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் முன்றலில் கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

# பணவீக்கத்தினால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அரச தரப்பில் பொறுப்புக் கூற யாருமில்லை

## கபீர் ஹாசிம் எம்.பி. குற்றச்சாட்டு




நாட்டில் பணவீக்கம் அதிகரித்துவரும் இவ்வேளையில், அச்சிடலின் ஊடாக 25 வீதத்துக்கும் அதிகமான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் ஏற்பட்டுள்ளது. அத்துடன், உணவுப் பணவீக்கத்தை எவ்வாறு தடுப்பதென அரசாங்கத்திடம் கேட்கும்போது பதில் கிடைப்பதில்லை - என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நேற்றைய தினம் எதிர்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் முன்கூட்டியே அறிவித்து நிலையியற் கட்டளையின் கீழ் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் தொடர்பில் நிதி அமைச்சரிடம் கேள்விகளை கேட்டிருந்தார்.

அவர் எழுப்பிய கேள்வி ஒரு தீவிரமான பிரச்சினை. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அந்தக் கேள்வியைக் கேட்கிறார்.

ஒன்று பணவீக்கம் என்பது இந்த நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பாகும். அந்தக் காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் இலக்கை விட பத்து வீதத்திற்கும் அதிகமாக இருந்தால், அமைச்சர். நிதிச் சபையிடம் விளக்கம் கேட்க நிதிக்கு உரிமை உண்டு. நிதிச் சபை அதற்கு பதில் தெரிவிக்கவேண்டும். ஏன் வாழ்க்கைச் சுட்டெண் உயர்கிறது, பணப்புழக்கம் ஏன் உயர்கிறது, வாழ்க்கைச் செலவு ஏன் உயர்கிறது என்பதைச் சொல்லவேண்டிய பொறுப்பு நிதி அமைச்சருக்கு உண்டு.

எமது நாட்டின் வரலாற்றில் பாரதூரமான விடயம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

1980களில் சிம்பாப்வேயில் நடந்ததுதான் இன்று இலங்கையிலும் நடந்தது என்பது பலருக்கும் தெரியும். சிறு மற்றும் நடுத்தர சுயதொழில் செய்பவர்கள் தங்கள் தயாரிப்புகளை விற்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களால் வியாபாரம் செய்ய முடியாது. இப்படி ஒரு நாட்டிற்கு முன்செல்ல முடியாது. அதன் காரணமாகவே நேற்று எதிர்க்கட்சித் தலைவர் நிதியமைச்சரிடம் நிதிச் சட்டத்தின்கீழ் உள்ள உரிமைகள் தொடர்பில் கேள்விகள் கேட்டதற்கு பதிலளிக்க முடியாமல் போனது. சுருங்கக் கூறின், இந்நாட்டில் சிறுபான்மை மக்கள் கோடீஸ்வரர்கள் என்ற உண்மையை இந்நாட்டு மக்கள் பெரிதும் அறியாத நிலையில், பெரும்பான்மையினரைப் பறிகொடுக்கும் செயற்பாடு இன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பணவீக்கம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி, சிறிய மக்களின் வருமானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, தன் அன்றாடக் கூலியில் கிடைக்கும் பணத்தை பூஜ்ஜியமாகக் குறைக்கும் அரசாங்கமாக மாறி வருகிறது.

இன்றைக்கு 1000 ரூபா சம்பாதிக்கும் மனிதனுக்கு நாளை 1000 ரூபா இருக்காது. இன்னும் ஆயிரமோ இரண்டாயிரமோ கிடைக்க வேண்டும் பொருள் வாங்குவதற்கு என்ற நிலைமைகளிலும் இவ்வாறு நடப்பது இது ஒரு ஆபத்தான பிரச்சினையாகும்.

அது தொடர்பான உண்மைகளை அதற்கு பொறுப்பு இருக்கும் அமைச்சர் நாடாளுமன்றத்திற்கும் நாட்டிற்கும் தெரிவிக்க வேண்டும். டொலர் பற்றாக்குறை பிரச்சினை, நாட்டில் அப்படியொரு பிரச்சினை இருப்பதை ஹர்ஷ டி சில்வா நிரூபித்துள்ளார். மறுபுறம் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல மாட்டோம், ஒன்றுகூட இருக்காது என நிவார்ட் கப்ரால் அறிக்கை விடுகின்றார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தை உருவாக்கி சர்வதேச அரங்கில் இந்த நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியது சர்வதேச அரங்கில் நற்பெயரை களங்கப்படுத்தியது இவர்களே இன்று விற்றுத் தீர்த்து விட்டனர்.

நம்மிடம் உள்ள தங்கத்தை எல்லாம் விற்று, நாட்டின் இறையாண்மையையெல்லாம் விற்று, மொத்த தேசத்தின் இறையாண்மையை விற்றுவிட்டு, டொலர்களை தேடுகிறார்கள்.

மறுபுறம் இனி டொலர்கள் இல்லை என்ற நிலையில், இந்த அரசாங்கத்திற்கு இந்த நாட்டை ஆள தகுதியில்லை. நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு பதிலளிக்கத் தவறியதால், அரசாங்கத்திடம் இதற்கான பதிலை எதிர்பார்க்கிறோம் - என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 10ஆம் திகதி, வியாழக்கிழமை

# உக்ரைன் பதற்றம்!

உக்ரைன் எல்லையருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்துள்ளது. உக்ரைன் மீது படையெடுத்து அந்த நாட்டைத் தன்னுடன் இணைத்துக்கொள்வதற்காக ரஷ்யா படைக்குவிப்பில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கும் ரஷ்யா, உக்ரைன்தான் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லையருகே படைகளைக் குவித்து வருவதாகவும், அதற்குப் பதிலடியாகவே தாங்கள் படைக்குவிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறி வருகிறது.

கிழக்கு ஐரோப்பாவில் போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் நிலைமை காணப்படுகிறது. இதுவரை துப்பாக்கியிலிருந்து ஒரு ரவைகூட சுடப்படவில்லை என்றாலும், உக்ரைன் போருக்குத் தயாராகவே இருக்கிறது.

உக்ரைனில் போர் நடக்கிறதோ, இல்லையோ, அந்த நாட்டுக்கான அந்நிய முதலீடுகளை நிறுத்திவைக்கும் முயற்சியில் ரஷ்யா வெற்றிபெற்றிருக்கிறது. அதனால்தான் உக்ரைன் ஜனாதிபதி வொலோதிமீர் ஸெலென்ஸ்கி விசனம் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உக்ரைனின் வடக்கு, கிழக்கு எல்லைகளிலும், ரஷ்ய ஆதரவிலான கிரீமியாவிலும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான துருப்புகளைக் குவித்திருக்கிறது ரஷ்யா. அது எப்போது வேண்டுமானாலும் இரட்டிப்பாகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யத் துருப்புகள் போருக்கு ஆயத்தமாக இருப்பது மட்டுமல்லாமல், உக்ரைனின் வடக்கில் இருக்கும் பெலாரஸ் நாட்டு இராணுவத்துடன் இணைந்து அணிவகுப்பு நடத்திக்கொண்டிருக்கிறது என்கிற செய்தியும் வெளியாகியிருக்கிறது.

உக்ரைனின் வேண்டுகோளின்படி, மேலை நாடுகள் கடந்த சில வாரங்களாக ஆயுதங்களையும், தளவாடங்களையும், ஏவுகணைகளையும் வழங்கி வருகின்றன. ஐரோப்பிய யூனியன் 100 கோடி டொலருக்கும் அதிகமான அளவில் உதவிசெய்ய உறுதியளித்திருக்கிறது. சுருக்கமாக சொல்வதாக இருந்தால், மோதலுக்குத் தயாரான நிலையில், இருதரப்புப் படைகளும் நின்றுகொண்டிருக்கும் பதற்றமான சூழல் உருவாகியிருப்பது நிஜம். அதே நேரத்தில், இரண்டு தரப்பினரும் மோதுவதற்குத் தயாரா என்று கேட்டால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

உக்ரைன் பிரச்சினை இன்று, நேற்று தொடங்கியதல்ல. 1991இல் அன்றைய சோவியத் யூனியன் உடைந்து சிதறியதிலிருந்து தொடங்குகிறது. முன்னாள் சோவியத் யூனியனில் ரஷ்யாவுக்கு அடுத்தபடியான பெரிய பகுதியாக இருந்தது உக்ரைன். உக்ரைனின் பகுதியாக இருந்த ஜோர்ஜியாவில் 2008இல் பிரிவினைப் போராட்டம் தலையெடுத்தபோது, ரஷ்யா அதற்கு உதவியாக இருந்தது. இப்போது அது தனி நாடாக ரஷ்யாவின் ஆதரவுடன் இயங்குகிறது. 2014இல் உக்ரைனின் பகுதியான கிரீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்து தன்னுடன் இணைத்துக்கொண்டது. உக்ரைனின் உள்நாட்டுக் குழப்பத்துக்கும் ரஷ்யாவே காரணம். ஒரு பிரிவினர் மேலை நாடுகளுக்கு ஆதரவாகவும், உக்ரைனின் இன்னொரு பிரிவினர் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் இயங்குகின்றனர்.

சோவியத் யூனியன் அணியிலிருந்த பல கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ நாடுகள் ஜனநாயக நாடுகளாக மாறின. எஸ்தோனியா, லட்வியா, லுத்வேனியா உள்ளிட்ட பால்டிக் நாடுகள் 2004இல் அமெரிக்காவின் நேட்டோ கூட்டணியிலும் இணைந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பியக் கூட்டமைப்பில் இணைந்துவிட்ட நிலையில், ரஷ்யா தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதுகிறது.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த மத்திய ஆசிய நாடுகள், அமெரிக்கா பக்கமோ, ரஷ்யா பக்கமோ சாயாமல் தனித்து இயங்குகின்றன. அந்த நாடுகளில் இப்போதும்கூட ரஷ்யமொழியே தொடர்பு மொழியாக இருப்பதால், ரஷ்யாவுடனான அவர்களது உறவு சுமுகமாகவே தொடர்கிறது. அதே நேரத்தில், மேலை நாடுகளுடனும் அவை இணக்கமான உறவைக் கடைப்பிடிக்கின்றன.

உக்ரைனும், ஜோர்ஜியாவும் ரஷ்யாவைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. அந்த நாடுகளிலுள்ள இளைஞர்கள் மத்தியில் தேசிய உணர்வும், வெளிநாட்டுத் தலையீட்டுக்கு எதிரான மனோபாவமும் காணப்படுகின்றன. தற்போதைய உக்ரைன் தலைமை, மேலை நாடுகள், அதிலும் குறிப்பாக, அமெரிக்கா சார்ந்ததாகவும், ஜோர்ஜியா ரஷ்யாவுக்கு அணுக்கமாகவும் இருந்துவருகின்றன.

அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையேயான பனிப்போர் முடிவுக்கு வந்து மேற்கு, கிழக்கு ஜேர்மனிகள் இணைந்தபோது ஒரு வாய்மொழி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அமெரிக்காவோ, அதன் நேட்டோ கூட்டாளிகளோ ரஷ்யாவின் எல்லைப் பகுதி நாடுகளில் நுழையமாட்டார்கள் என்பதுதான் அது.

நேட்டோ அணியில் உக்ரைன் இணையுமானால், மொஸ்கோவிலிருந்து 300 மைலுக்கும் குறைவான தூரத்தில் அமெரிக்கப் படைகள் முகாமிடக் கூடும். அது ரஷ்யாவின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் கருதுகிறார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, பயமுறுத்துகிறதே தவிர, இன்றைய நிலையில் எந்தவித நேரடி இராணுவ தலையீட்டுக்கும் தயாராகாது. அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இதுவரை எட்டு டிரில்லியன் டொலர் அளவில் செலவளித்திருக்கிறது. எந்தவொரு தலையீட்டிலும் முழு வெற்றியும் அடையவில்லை. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை விட உணர்ச்சிவசப்படாத தலைவராக தற்போதைய ஜனாதிபதி பைடன் பார்க்கப்படுவதால் பெரும் நாசகார அல்லது விபரீத தீர்மானங்களுக்கு அவர் போகும் வாய்ப்பில்லை. ஆனால், அவரின் தனித் தீர்மானம் மட்டும் இதில் வகிபாகமாக இருக்காது.

1979இல் அன்றைய சோவியத் யூனியன், ஆப்கானிஸ்தான் மீது நடத்திய படையெடுப்பின் விளைவால்தான் சோவியத் யூனியனே பிளவுபட நேர்ந்தது என்பது வரலாறு. அதனால் மீண்டும் அதுபோன்ற ஒரு விஷப்பரீட்சையில் இறங்க ரஷ்யாவும் தயங்கும் என்பதுதான் யதார்த்த நிலை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இப்போது பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலவீனமாக இருக்கும் நேரம், அதனைப் பயன்படுத்திக்கொண்டு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின், ரஷ்யாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகிறார். உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளைக் குவித்திருப்பதும், வீர வசனம் பேசுவதும் தனது கொல்லைப்புறத்தில், நேட்டோ மூலமாக அமெரிக்கா மூக்கை நுழைத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். இது அமெரிக்காவுக்கும் தெரியும்.

எவ்வாறு இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே சிலசமயம் போர் வந்துவிடும் என்ற நிலைமை உருவாகி பின்னர் அது ஏதோ ஒருவகையில் தணிந்துபோகுமோ, அப்படித்தான் உக்ரைன் விவகாரமும். தற்போது பேசப்படும் அளவுக்கு பூதாகரமாகும் சூழ்நிலை இல்லை. எல்லாவற்றையும் மீறி போர் ஒன்று இப்போது வருமானால் அது எவருக்கும் நன்மையைத் தராது. ஆயுத வியாபாரிகளைத் தவிர...

# கோபம்

## ஒரு சங்கிலித் தொடர்

சிரிப்பு, துயரம், அருவருப்பு, வியப்பு, பயம், பெருமை, கோபம், இன்பம் என்பன எண் வகை மெய்ப்பாடுகளாகும். மெய்யில் (உடலில்) தென்படுவது மெய்ப்பாடு. அதாவது, மனித உள்ளத்தின் உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்ப்பாடு என்று பொருள்படும். தொல்காப்பியம் உரைக்கும் எட்டுவகை மெய்ப்பாடுகளில் ஏழாவதாக, சுட்டும் கோபத்தால் மனிதகுலம் இன்று பல பிரச்சினைகளை எதிர்கொண்டு, இறுதியில் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறது. உலக மக்களிடையே நிலவும் ஒற்றுமையின்மைக்கும், பெரும்பாலான பிரச்சினைகளுக்கும், தீமைகளுக்கும், வன்முறைகளுக்கும் கோபமே காரணமாக உள்ளது.

உள்ளத்தின் உணர்ச்சி கொந்தளிப்பின் வெளிப்பாடாக ஒருவருக்குக் கோபம் ஏற்படுகிறது. வெறுப்பு, நம்பிக்கையின்மை, பயம், அறியாமை, பொறாமை, ஆணவம், அகங்காரம் முதலியவை கோபம் உருவாகக் காரணமாகின்றன. பிறர் மீது ஒருவர் காட்டும் கோபம் தற்கொலையாகவோ, கொலையாகவோ கூட முடியலாம். அதுமட்டுமல்ல, மனிதர்களிடையே தீராப் பகையைக்கூட உருவாக்கும்.

கணவன், மனைவி மீது கொள்ளும் கோபம், இறுதியில் மணமுறிவு வரை, அதையும் மீறி தற்போது கொலையில் முடிகிறது. குடும்பத்தினரிடையே ஏற்படும் கோபம், குடும்பத்தின் அமைதி, நிம்மதி, மகிழ்ச்சியைக் கெடுக்கும். குழந்தைகளிடையே பெற்றோர் காட்டும் கோபம், அவர்களை அழிவுப் பாதைக்கே இட்டுச்செல்லும்.

கோபத்தினால் பிறர் செய்த தவறுக்காக நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். நண்பர்களுக்கிடையேயான சண்டை, இரு பிரிவினருக்கிடையே மோதல், கலவரம், பழிவாங்கும் உணர்வு, கொலை, ஆயுள்வரை பகை, போர் எல்லாம் கோபத்தின் வெளிப்பாடுகளே.

> “என்னை யார் தோற்கடித்ததென்று கோபத்துடன் பார்த்தேன். வேறு யாருமில்லை. கோபம்தான் என்னைத் தோற்கடித்தது’’



இராமகிருஷ்ண பரமஹம்சர், “கோபம் ஒரு குறுகியகால பைத்தியகாரத்தனம். அதை நீ கட்டுப்படுத்தாவிடில் அது உன்னைக் கட்டுப்படுத்திவிடும்” என்கிறார். “ஒரு கணநேரம் கோபத்தை அடக்கிவைப்பவன் ஒரு நாளின் துயரத்தை அடக்கியவனாவான். கோபம் நல்லவர்களைக்கூட குற்றவாளிகளாக்கும்.

கோபப்படும் மனிதனால் அதிகளவு சிறப்பாக வேலைகளை செய்யமுடியாது. அமைதியான, மன்னிக்கக்கூடிய சம நோக்குடைய நிலைகுலையாத மனமுடையவனே அதிக அளவு சிறப்பாக செயலாற்ற முடியும்”என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சேர்ந்தாரைப் பிரிக்கும் தீய குணங்களில் உயர்ந்து குன்றாய் நிற்பது கோபம். பிறரை வீழ்த்துபவன் வீரனல்ல. கோபம் ஏற்படும்போது தன்னை அடக்கி ஆள்பவனே வீரன். எண்ணிய இலட்சியத்தை அடைய விலக்கவேண்டியது கோபம். தன்னைக் காத்து தரணியில் உயர உழைப்பவன் அயராது கோபத்தை அடக்க வேண்டும். சிறிய தீப்பொறி பெரிதாகி பெருங்காட்டை அழிப்பதுபோல் ஒருவரின் சிறு கோபம், சமூகத்தை அழிக்கும் வல்லமை படைத்தது. அதாவது, பிறர் செய்த தவறுக்காக நமக்கு நாமே கொடுக்கும் தண்டனைதான் கோபம்.

சமைக்கும் உணவில் முறை மாறி அமையும்போது அமிர்தமும் நஞ்சாகிறது. மனித மனமும் அமிர்த சொரூபம். அது கோபம் கொள்ளும்போது நஞ்சாக மாறுகிறது. ஒருவர் கோபத்தில் இருக்கும்போது எண்ணுகிற எண்ணம் கொடியது. மேலும், உடல் முழுவதும் அப்போது கொடியதாகிறது. உண்ணுகிற உணவும் நஞ்சாகிறது. தற்காலிகமாக அமையும் பைத்தியம் எனப்படுகிறது கோபம்.

எனவேதான், திருவள்ளுவரும், “நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற” என்கிறார்.

மனிதன் எத்தனை செல்வம் பெற்றிருந்தாலும், ஞானம், அறிவு, கலைகளில் மேன்மை இருந்தாலும், தன்னிடம் கோபம் எனும் கொடிய மிருகத்தை அவன் தலைதூக்கவிட்டால் அவனிடமிருந்து அனைத்து செல்வமும், செல்வாக்கும், நட்புகளும், உறவுகளும், உற்சாகமும், மகிழ்ச்சியும் மறைந்தோடிவிடும். பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு இளைய பருவத்திலேயே கோபத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கற்றுத்தர வேண்டும்.

ஓர் இளைஞன் அதிகம் கோபம் கொள்பவனாக இருந்தான். எதற்கெடுத்தாலும் பட்டென கோபம் கொள்வான். இதனால் அவன் அனைவரிடமும் கெட்டபெயரையே சம்பாதித்தான். அதைக் கண்டு வருந்திய அவனது தந்தை, அவனிடம் ஒரு சுத்தியலையும், நிறைய ஆணிகளையும் கொடுத்து, “இனிமேல் உனக்குக் கோபம் வரும்போதெல்லாம் வீட்டின் கொல்லைப்புறத்திலுள்ள காய்ந்த மரத்தில் இந்த ஆணிகளை அடி” என்று கூறினார்.

முதல் நாள் பத்து ஆணி, மறு நாள் ஏழு, பின் ஐந்து, இரண்டு என படிப்படியாக ஆணி குறைந்தது. ஒரு நாள் ஒரே ஒரு ஆணிதான் அடித்தான். மற்றொரு நாள் எவ்வித ஆணியும் அடிக்கவில்லை. மொத்தமாக 50 ஆணிகள் வரை அடித்திருந்தான். அவன் தன் தந்தையிடம், “இனி கோபம் எனக்கு வராது” என்று கூறினான்.“இனிமேல் கோபம் வராத நாட்களில் நீ ஒவ்வொரு ஆணியாகப் பிடுங்கி விடு” என்றார். அதனை ஏற்று, அவன் தன் தந்தையிடம், “அடித்த 50 ஆணிகளையும் பிடுங்கிவிட்டேன்” என பெருமையுடன் தந்தையை அழைத்துக் காட்டினான்.

உடனே தந்தை சொன்னார், “ஆணிகளைப் பிடுங்கிவிட்டாய். அதனால் மரத்தில் ஏற்பட்ட துளைகளை என்ன செய்வாய்? உன் கோபம் இதுபோல் பலரை காயப்படுத்தியிருக்கும் அல்லவா? நீ பிறரிடம் காட்டிய கோபம் அவர்களை காயப்படுத்தியிருக்கும். அவர்கள் உன்னை மன்னித்தாலும், அந்த ரணம் ஆறாது என்பதை மறந்துவிடாதே. எனவே, யாரிடமும் கோபம் கொள்ளாதே” என்றார்.

கோபத்தைக் கட்டுப்படுத்துபவன், இந்த சமுதாயத்திற்கு நல்லது செய்பவனாகிறான். கோபம் மனிதனின் நல்ல குணத்தையும் அழித்துவிடும். ஒருவர் எத்தகைய ஆற்றலைப் பெற்றிருப்பினும், தன்னைக் காக்க கோபத்தை ஆயுதமாக கொள்வானாயின், அதுவே அவனை அழித்துவிடும். புன்னகை ஒரு தொற்றுநோய் என்றால், கோபம் ஒரு சங்கிலித்தொடர். அதன் கண்ணியை உடைப்பதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. கோபத்தை விட்டொழித்து உலகில் மிகவும் தெய்வீகமானதும், உன்னதமானதுமான அன்பையும், இரக்கத்தையும் அனைவரிடமும் பரப்புவோம்.

• பாறப்புறத் இராதாகிருஷ்ணன்



# ட்ரகன் தீவு

கிழக்காசிய நாடுகளில் ஒன்றான, இந்தோனேஷியாவில் இருக்கிறது, கொமோடோ தீவு. கொமோடோ ட்ரகன் என அழைக்கப்படும் இராட்சதப் பல்லிகள் ஏராளமாக வாழும் தீவு என்பதால், இப்பெயர் ஏற்பட்டது. காட்டுப் பகுதியில் கூட்டமாக வாழும் இந்த இராட்சதப் பல்லிகள், மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் புகுந்து அட்டகாசம் செய்கின்றன. ஊருக்குள் புகுந்து ஆடு, மாடு, எருமை, நாய் போன்றவற்றை அடித்துச் சாப்பிட்டாலும், இவற்றைக் கொல்லவோ, துன்புறுத்தவோ கூடாதென அரசு கடுமையான சட்டம் விதித்துள்ளது. அதனை மீறுவோர் தண்டனைக்குள்ளாவர். ட்ரகன்கள் ஊருக்குள் புகுந்தால் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டும், பட்டாசுகள் வெடித்தும் துரத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ட்ரகன்கள் வருகையால் இங்குள்ள மக்கள் அமைதியின்றித் தவிக்கின்றனர்.

# இன்றைய நாளில்...

* 1815 – கண்டி இராச்சியத்தை கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.
* 1840 – ஐக்கிய இராச்சியத்தின் விக்டோரியா மகாராணி இளவரசர் எல்பேர்ட்டைத் திருமணம் புரிந்தார்.
* 1897 – மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.
* 1948 – இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் குளொஸ்டர் கோமகன் இளவரசர் ஹென்றியினால் கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.
* 1969 – தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.கருணாநிதி தெரிவுசெய்யப்பட்டார்.
* 1991 – வன்னி மீதான இலங்கை இராணுவத்தினரின் வன்னி விக்கிரம படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதுடன், உலங்குவானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.
* 2009 – தகவல் தொடர்பு செயற்கை கோள்களான இரிடியம்-33, கொஸ்மசஸ்-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.
* 2013 – இந்தியாவின் அலகாபாத் நகரில் கும்பமேளா திருவிழாவின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 36 பேர் உயிரிழந்தனர்.

# நக்கல் நமசிவாயம்

கூட்டம் கூட்டமா சேர்ந்து இருக்கக் கூடாதென்று சொல்லிப்போட்டு அநுராதபுரத்தில் பொதுக்கூட்டம் நடத்துற ஆட்சியாளர்கள்...! ஊருக்குத்தான் உபதேசம் போல...!



# இந்திய கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸுடன் கலந்துரையாடல்

## இலங்கை கடல்வளம் அழிவதற்கு இடமளிக்க முடியாதென அமைச்சர் திட்டவட்டமாக தெரிவிப்பு



இந்திய கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடியுள்ளனர். தமிழகத்தில் அமைந்துள்ள இந்தியாவிற்கான இலங்கை துணைத் தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

தமிழகத்துடனான தொப்புள்கொடி உறவினைப் பலப்படுத்த விரும்புகின்ற அதேவேளை, இலங்கை கடற்பரப்பில் இழுவைமடி வலைத் தொழிலில் ஈடுபடுவதை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மேலும், கைப்பற்றப்பட்டுள்ள தங்களின் மீன்பிடிப் படகுகளை ஏலத்தில் விற்பனை செய்கின்ற செயற்பாடுகளையும் மீள் பரிசீலனை செய்யுமாறும் கோரப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பண்பாட்டு கலாசார ரீதியாகவும் பல்வேறு தேவைகள் காரணமாகவும் தமிழக உறவுகளுடனான தொப்புள்கொடி உறவு வலுப்படுத்த வேண்டும் என்பதை உளமார தான் எதிர்பார்ப்பதாகவும், அதற்காக இலங்கையின் கடல் வளம் அழிந்துபோவதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் இந்தியக் கடற்றொழிலாளர்களினால் கைவிடப்பட்ட மீன்பிடிப் படகுகளே ஏலமிடப்படுவதாகவும் தெளிவுபடுத்தினார்.

மேலும், பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு சுமுகமான தீர்வினை காண்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வினை எட்டுவது ஒருபுறமிருக்க, இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து சட்டவிரோத தொழிலில் ஈடுபடுவதை இந்தியக் கடற்றொழிலாளர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முன்பதாக இழுவைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சின் முன்பாக தென்னிலங்கை கடற்றொழிலாளர்களினால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களை நேரடியாகச் சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

**09.02.2022 நாணய மாற்று வீதம்**

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 3541 | 035 30 1 |
| கனேடியன் டொலர் | 044 0 43 | 05 8525 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 8006 | 21 0614 |
| யூரோ | 115 36 | 124 477 |
| ஜப்பான் யென் | 0 6 87 | 0 6627 |
| சிங்கப்பூர் டொலர் | 036 10 | 040 8458 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 63 1 | 165 1 20 |
| சுவிஸ் பிராங்க் | 102 17 2 | 11 7386 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 11 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 425 7332 |
| குவைட் | குவைட் தினார் | 558 6741 |
| ஓமான் | ஓமான் றியால் | 414 6200 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 2638 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 8402 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 0 54 |

# உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

2021 உயர்தரப் பரீட்சைக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவது தொடர்பில் பொலிஸ் மா அதிபரால் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் விசேட ஆலோசனை அடங்கிய சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தொகுதிக்கு பொறுப்பான அதிகாரிக்கு தமது பிரிவில் பரீட்சைக்காக இணைப்பு உதவி பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக பரீட்சை நடைபெறும் மத்திய நிலையங்களுக்கு பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, கொழும்பில் அமைந்துள்ள விடை பத்திரங்களை சேகரிக்கும் மத்திய நிலையங்களுக்கும் உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் விசேட பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.







நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று (09) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# கம்பளையில் காணாமல்போன சிறுமி நீர்கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டார்

## பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை

கம்பளையில் காணாமற்போன 12 வயதான சிறுமி நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் (08) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியைக் காணவில்லையென கம்பளை மற்றும் கலஹா பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கம்பளை நில்ஓய காரியாலய சந்தி பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்ட சிறுமியே காணாமல்போன நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிறுமி தனது சித்தியின் வீட்டுக்குச் சென்றிருந்தபோதே, இவ்வாறு காணாமற் போயுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். சிறுமியின் தந்தை கண்டி பொதுச் சந்தையில் கடமையாற்றுகின்றார். தாய், தன்னுடைய பெற்றோரின் வீட்டுக்குச் சென்றிருந்துள்ளார். அதனால், அவர்களின் பிள்ளைகள் மூவரும் சித்தியின் வீட்டிலேயே இருந்துள்ளனர்.

சித்தியின் பிள்ளைகள் இருவரும் இந்த சிறுவர்கள் மூவரும் இணைந்து விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அவ்வாறு விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளிடம் பாடம் கற்கவேண்டுமென சித்தி எச்சரித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், கடந்த 07ஆம் திகதி இரவு, தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்தபோதே, சிறுமி காணாமல்போனமை தெரியவந்துள்ளது. அதனையடுத்து, சிறுமியை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கிராமத்தவர்கள் அனைவரும் இணைந்து அருகிலிருக்கும் வீடுகள் மற்றும் பிரதேசங்கள், பற்றைக்காடுகளில் தேடியுள்ளனர். சிறுமி தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கிடைக்காமையால், சின்னம்மாவால் சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விரைந்து செயற்பட்ட பொலிஸார், பொலிஸ் நாயின் உதவியுடன் சிறுமியை தேடும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதற்கமைய, நேற்று இரவு நீர்கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுமி தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் நாய், கிராமத்திலிருந்து பிரதான வீதி வரையிலும் வந்து நின்றுகொண்டது. இதனால், பொலிஸார் தமது விசாரணைகளை திசை திருப்பியபோது, வீட்டில் காணப்பட்ட பிரச்சினை காரணமாக ஓட்டோவொன்றில் கம்பளைக்குச் சென்று அங்கிருந்து பல இடங்களுக்குச் சென்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# 925 டெங்கு நோயாளர்கள் ஒரு வாரத்தில் அடையாளம்

நாட்டில் கடந்த வாரத்தில் 925 டெங்கு நோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 220 பேர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 96 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 70 நோயாளர்களும், காலி மாவட்டத்தில் 62 நோயாளர்களும் இவ்வாறு காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக இந்த வருடத்தில் கடந்த 5 வார காலப்பகுதியில் பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 15 என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

# தபால் திணைக்களத்தில் ஆளணி பற்றாக்குறை

தபால் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள ஊழியர்கள் தட்டுப்பாடு காரணமாக பெருமளவு தபால் காரியாலங்களை மூடவேண்டிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரையில் திணைக்களத்தில் அலுவலக பொறுப்பதிகாரிகள் மற்றும் சாதாரண தபால் ஊழியர்கள் என 1,600 பேர் வரையில் ஆளணி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடுபூராகவும் அண்ணளவாக 6 ஆயிரம் பேர் வரையில் தபால் ஊழியர்கள் தேவைபடுகின்றபோதிலும், தற்போது நாட்டில் 4 ஆயிரம் ஊழியர்களே சேவையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

2018ஆம் ஆண்டிலிருந்து ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தாலும், இதுவரையில் அரசாங்கத்தினால் அதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லை என குறிப்பிடப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைக்கு தற்காலிக தீர்வாக ஓய்வுபெற்ற தபால் அதிகாரிகள் 500 பேரை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தாலும், அந்த யோசனை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தபால் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் கொழும்பு நகரில் அமைந்துள்ள பொரளை தபால் காரியாலயத்தில் 35 ஊழியர்கள் சேவையில் இருக்கவேண்டுமென்றாலும், தற்போது 7 பேர் மாத்திரமே சேவை புரிகின்றனர்.

ஒருசில தபால் காரியால அதிகாரிகள் மகப்பேற்று விடுமுறை பெற்றுள்ளமையினால் அந்த காரியாலங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்த வருடத்தில் 900 கோடி ரூபா இலாபத்தை பெற்றுக்கொள்ளவேணடும் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதிலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.







பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் பசுமை விவசாய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் அறிவுரைக்கமைய கந்தகாடு இராணுவப் பண்ணையின் 100 ஏக்கர் பரப்பில் மிளகாய்ச் செய்கையை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (08) கந்தகாடு பண்ணையின் கட்டளை அதிகாரி லெப்டினன் கேர்ணல் நிஷாந்த முத்தந்திரிகேயின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதை நிறுத்தக்கோரி ஹட்டன் தொழில் திணைக்களத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

## ஆணையாளரிடம் மகஜர் கையளிப்பு






(க.கிஷாந்தன்)

தொழிலாளர்களின் நலன் கருதி கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனக்கோரி பெருந்தோட்ட தொழிலாளர்கள் நேற்று (09) ஹட்டனில் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களின் உரிமைசார் விடயங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கமும், இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனமும், தொழிலாளர்களுடன் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஹட்டனில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த போராட்டத்தில் சுமார் 50இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின்போது, “தொழில் திணைக்களமே தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மீறப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்து, தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு நிபந்தனைகள் இன்றி வழங்கப்பட வேண்டும், தொழில் அமைச்சரே கூட்டு ஒப்பந்தம் உடனடியாக மீண்டும் கைச்சாத்திடப்பட வேண்டும்” போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதன் பிறகு தொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் தொழில் ஆணையாளரிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பிரதேச செயலகங்களை நிறுவக்கோரி நுவரெலியாவில் மக்கள் போராட்டம்




(டி.சந்ரு, செ.திவாகரன்)

2019ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல்படி, உடனடியாக பிரதேச செயலகங்களை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி கிராம அபிவிருத்தி மன்றங்களின் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் போராட்டம் ஒன்றினை நேற்று (09) முன்னெடுத்தனர்.




நுவரெலியா பிரதேச செயலகங்களில் உப காரியாலயங்களில் பத்து பிரிப்பதற்கு 2019ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் தலவாக்கலை உப காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. அதற்கு ராகளையில் காரியாலயம் ஒன்று திறப்பதாக 2019 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.


எனினும், அவ்விடத்தில் பிரதேச செயலகம் ராகளையில் அமைக்காதலால் ராகளை பிரதேச மக்கள் நுவரெலியாவுக்கு வருவது பெரும் சிரமம் என்பதோடு, அவர்கள் நுவரெலியா அல்லது வலப்பனை பிரதேசங்களுக்கு செல்ல வேண்டும்.

அதிகமான தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாக ராகளை பிரதேசம் இருப்பதால் அப்பிரதேசங்களில் உள்ளவர்களில் கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராமத்தில் இருக்கும் பல சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று (09) பதாதைகளை ஏந்தியவாறு 60இற்கும் மேற்பட்டோர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் நுவரெலியா பிரதேச செயலாளர், மாவட்ட உப செயலாளர் சுஜிவ போதிமானிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மலையகத்தில் தொடரும் தீவைப்பு; எரிந்து நாசமாகும் காடுகள்





(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

மலையகத்தில் தொடரும் வறட்சி காலநிலையில் காடுகளுக்கு தீ வைக்கும் விஷமச்செயல் அதிகரித்துள்ளது. இந்நிலையில், காசல்ரீ, பொகவந்தலாவை பகுதிகளில் காட்டுத்தீயினால் சுமார் 15 ஏக்கர் புல்காடு எரிந்து நாசமாகியுள்ளது.

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்க கரையோரத்தை ஒட்டியதான வனராஜா பகுதியிலே நேற்று மாலை விஷமிகளினால் தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் விநியோக குழாய்கள் எரிந்து நாசமாகியதால் வனராஜா பகுதி குடியிருப்பாளர்கள் குடிநீரின்றி பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை, பொகவந்தலாவை பிரதேசத்திலும் தீப் பரவலினால் பல ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளது. எனவே, தொடர்ந்து, இவ்வாறு தீ வைக்கும் செயல் இடம்பெற்று வருவதனால் நீரேந்தும் பகுதியில் நீர் வற்றி காணப்படுகின்றது.

மேலும் காசல்ரீ, நோட்டன், மேல்கொத்மலை, கெனியன் நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய கராத்தே போட்டியில் தமிழ் மாணவன் சாதனை




(அவிசாவளை நிருபர்)

இலங்கை கராத்தே தோ சம்மேளனம் நடத்திய 2021ஆம் ஆண்டுக்கான தேசிய கராத்தே போட்டியில் புணாகோஷி சோத்தோகான் கராத்தே சங்கத்தின் எட்டியாந்தோட்டை கிளையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய பத்து கராத்தே வீர வீராங்கனைகளும் வெற்றிப் பெற்றுள்ளனர்.

தேசிய கராத்தே போட்டி கடந்த 05 மற்றும் 06ஆம் திகதிகளில் பண்டாரகம உள்ளக விளையாட்டரங்கில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிலையில், எட்டியாந்தோட்டை கிளையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய குழுவிலிருந்து ஒரே ஒரு தமிழ் மாணவராக களமிறங்கிய ஜீ.ஹேனொக்சான் மிகவும் திறமையாக போட்டியிட்டு தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டமை வரலாற்று சாதனையாகும்.

இவர் 09 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஊதாப்பட்டி பிரிவில் 25 எடைக்கு மேல் கும்தே போட்டியில் பங்குபற்றியதோடு, இவருக்கு கிடைத்த நான்கு தொடரையும் அதிகூடிய புள்ளியுடன் வெற்றிக் கொண்டமை விசேட அம்சமாகும்.

எட்டியாந்தோட்டை பிரதேச வரலாற்றில் தேசிய போட்டியில் வெற்றி பெற்ற முதல் தமிழ் கராத்தே வீரர் என்ற பெருமை இவரையே சாரும்.

கே/தெஹி/இராமகிருஷ்ணா ஆரம்ப பாடசாலையில் நான்காம் தரத்தில் கல்வி பயின்றுவரும் இம் மாணவன் எட்டியாந்தோட்டை மீபிட்டிகந்த தோட்டத்தில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இம் மாணவன் இவ்வருடத்தில் கறுப்புப்பட்டி டிப்ளோமா தேர்வுக்கு தெரிவாகியுள்ளார்.



**மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளராக (முஸ்லிம் பிரிவு) ஹுனைஸ் முஹம்மட் ஆரிப் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுமுன்தினம் மத்திய மாகாண கல்வித் திணைக்கள கண்டி காரியாலயத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.**

**(படம் : மாத்தளை நிருபர்)**

# உக்குவளை பிரதேசத்தில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(ஜலீல்)

உக்குவளை பிரதேசத்திலும் ஏனைய இடங்களிலுமுள்ள மருந்தகங்களிலும் கடைகளிலும் பெனடோல் மற்றும் பெரசிடமோல் போன்ற மருந்து குளிசைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மருந்தக உரிமையாளர்களும் மக்களும் தெரிவிக்கின்றனர்.

மருந்துப் பொருட்களை விநியோகம் செய்யும் குறிப்பிட்ட நிறுவனங்கள் ஆரம்பத்தை போன்று மருந்துவகைகளை சிறிய தொகையிலேயே மருந்தகங்களுக்கு விநியோகம் செய்வதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக மருந்தக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், மக்களுக்கு குறிப்பாக நோயாளிகளுக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் இவ்வாறான மருந்துவகைகளை அரசாங்கம் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மஸ்கெலியா – சாமிமலை பகுதியில் 448 கிலோ கழிவுத் தேயிலை திருட்டு;

## ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஸ்ரஸ்பி தோட்டத் தேயிலை தொழிற்சாலை களஞ்சியப் பகுதியில் இருந்த கழிவுத் தேயிலை 448 கிலோ காணாமல்போனதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு அமைய, சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி இவ்வாறு முறைப்பாடு ஒன்றை தோட்ட முகாமையாளர் நிசாந்த மகேஷ் ரணசிங்க பதிவு செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையின்பின், அதே தோட்டத்தைச் சேர்ந்த கந்தசாமி மகாராஜா என்பவர் சந்தேகத்தின்பேரில் நேற்றுமுன்தினம் (08) கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட அவர் நேற்று (09) ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

கழிவுத் தேயிலையின் பெறுமதி ஒரு இலட்சத்து 34ஆயிரம் ரூபா என தோட்ட முகாமையாளர் தனது முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளார்.

# கண்டி அரச வைத்தியசாலைகளில் கொவிட் பரிசோதனைகளுக்கு தட்டுப்பாடு

(கண்டி நிருபர்)

கண்டி அரச வைத்தியசாலைகளில் கொவிட் பரிசோதனைக்கான ரெபிட் என்டிஜன் பரிசோதனை உபகரணங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தனியார்துறையில் அதிக பணம் செலுத்தியே கொவிட் பரிசோதனைகளை மேற்கொள்வதாக கண்டி பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் அசேல ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொவிட் பரிசோதனைக்கான ரெபிட் என்டிஜன் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் போதிய நிதி ஒதுக்காமையே இதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கண்டி மாவட்டத்தில் 15 பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதுடன், அதில் 04 பேர் கண்டி மாநகர சபை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் என்றும் தெரிவித்தார்.

இக்காரணங்களால் கொவிட் பரிசோதனைக்கான பல்வேறு தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பஸ்களில் மீதிப் பணம் வழங்குவதில்லை; பெருந்தோட்ட மக்கள் குற்றச்சாட்டு

## உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை

(கினிகத்தேனை நிருபர்)

மலையகப் பகுதிகளில் பொதுபோக்கு வரத்தின் போது பயணிகளுக்கு மீதிப் பணம் வழங்குவதில்லை என்பதோடு, தனியார் பஸ்களில் டிக்கெட் வழங்குவதும் தற்போது குறைவடைந்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மலையகப் பகுதி போக்குவரத்துகளில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பஸ் சேவைகள் இடம் பெறுகின்றன. இருந்தபோதிலும், இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பஸ்களில் பஸ் டிக்கெட் வழங்கினாலும் தனியார் பஸ்களில் பஸ் டிக்கெட் வழங்குவதில்லை. அதேபோன்று, பொது போக்குவரத்தில் பயணிக்கும் பயணிகளுக்கு மீதிப் பணம் வழங்குவதில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அண்மையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பும் அதனை தொடர்ந்து பஸ் உரிமையாளர்களின் பஸ் கட்டண அதிகரிப்பு கோரிக்கைக்கு அமையவும் பஸ் கட்டணங்கள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அதிகரிக்கப்பட்டன. அவ்வாறான அதிகரிப்பு கூட பயணிகளுக்கு சாதகமாக இருக்கவில்லை. அவை பெரும்பாலும் நடத்துனர்களுக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றன.

ஒரு சில நடத்துனர்கள் மீதிப் பணத்தை வழங்கினாலும் பெரும்பாலான நடத்துனர்கள் மீதிப் பணம் வழங்குவதில் அசட்டையாகவே செயற்படுவதாக தெரிவிக்கின்றனர். ஒரு சில இடங்களில் பயணிகள் மீதிப் பணம் கேட்டாலும் அவை முரண்பாட்டில் முடிவடைவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பஸ்களில் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் உரிய மீதிப் பணத்தை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

# சுகாதார ஊழியர்களின் தொடர் வேலைநிறுத்தம்; நுவரெலியாவிலும் நோயாளிகள் பாதிப்பு




(டி.சந்ரு, செ.திவாகரன்)

சுகாதார அமைச்சருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததன் காரணமாக, பணிப்புறக்கணிப்பினை தொடரவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதற்கமைய, மூன்றாவது நாளாக நேற்றும் (09) போராட்டம் தொடர்ந்தது. இதனால், நாடளாவிய ரீதியில் நோயாளிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, நுவரெலியாவிலும் வைத்தியசாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன.

வேதன உயர்வு உள்ளிட்ட 07 முக்கிய கோரிக்கை களை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதனால், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் என்பன வழமைபோல் இடம்பெற்றது. எனினும், மருந்து வழங்கும் பகுதி மூடப்பட்டிருந்தமையினால் நோயாளிகள் மருந்துகளை பெற்றுக்கொள்ள பாரிய சிரமத்துக்கு முகம்கொடுத்தனர்.

வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேறு என்பன வழமைபோல் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. நுவரெலியா மாநகர சபையினால் மூன்றாவது கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டமும் பிற்போடப்பட்டுள்ளது.

# வணிக உலகம்
## Business world

# லங்கா அஷோக் லேலண்டின் வர்த்தக வாகனங்களுக்கு அசல் உபகரணமாக சியெட் டயர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன

### உள்ளூரில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆயிரம் அஷோக் லேலண்ட் கனரக ட்ரக் வாகனங்களுக்கு OEM உடன்படிக்கையின்கீழ் வருடாந்தம் சியெட் டயர்கள் பொருத்தப்படவுள்ளன



**சியெட் களனி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி (வலது) லங்கா அஷோக் லேலண்ட் பிரதம நிறைவேற்று அதிகாரி உமேஷ் கௌதம் ஆகியோர் OEM உடன்படிக்கை பிரதிகளைப் பரிமாறிக்கொள்வதைக் காணலாம்.**

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் புத்தாண்டில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளது, இந்தியாவின் அஷோக் லேலண்ட் நிறுவனத்துடன் கூட்டாண்மை அடிப்படையில் செயற்படும் லங்கா அஷோக் லேலண்ட் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (LAL) உள்ளூரில் ஒருங்கிணைக்கும் கனரக ட்ரக்குகள், ரிப்பர்கள் மற்றும் இலகு ரக வர்த்தக வாகனங்களுக்கு அசல் உபகரணங்கள் உற்பத்தி Original Equipment Manufacturer (OEM) உடன்படிக்கை மூலம் ரயர்களை விநியோகிப்பதற்கான நியமனத்தைப் பெற்றுள்ளது.

இந்த உடன்படிக்கையின்கீழ் ஒன்பது அளவுகளிலான சியெட் ரயர்கள் அஷோக் லேலண்டின் 1800 வாகனங்களில் பொருத்தப்படவுள்ளன. பனாகொடை மற்றும் ஹோமாகம ஆகிய இடங்களிலுள்ள அதிநவீன வசதிகளைக்கொண்ட உற்பத்தித் தளங்களில் வருடாந்தம் இவை பொருத்தப்படவுள்ளன. இவற்றுள் ஆயிரம் வாகனங்கள் கனரக ட்ரக் வாகனங்களாகும். இவை முதல் தெரிவாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதோடு, இலங்கைப் பொருளாதாரத்தின் உந்துசக்தியாகவும் அமையவுள்ளன.

LAL நிறுவனத்தின் ECOMET 1212 மினி ட்ரக்குகள், TAURUS 2518- 10 சக்கர ட்ரக், TAURUS 1618 ஆறு சக்கர ட்ரக்குகள், சகலவிதமான தட்டை படுக்கைகள் மற்றும் கொள்கலன் வாகனங்கள் ECOMET 1012 ரிப்பர்கள், DOST இலகு வர்த்தக வாகன வகைகள் என்பனவற்றுக்கே சியெட் ரயர்கள் பொருத்தப்படவுள்ளன. 8.25-20 XL சுப்பர், 8.25-20 HCL சுப்பர், Winmile AW 10.00 R20, 10.00-20 XL சுப்பர், 10.00-20 Brawo Orion, 8.25-16 FM, 8.25-16 Stamina, 185 R14 Rhino Plus மற்றும் 195 R15 Rhino Plus அளவிலான ரயர்களே இவ்வாறு பொருத்தப்படவுள்ளன.

இந்தப் புதிய OEM குறித்து கருத்து வெளியிட்ட சியெட் களனி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி "லங்கா அஷோக் லேலண்டுக்கான OEM வழங்குனர்களாக சியெட்டுக்கு கிடைத்துள்ள நியமனம் சரியான காலநேரத்தில் அமைந்துள்ளது. விசேடமாக வெளிநாட்டு நாணயத்தைப் பாதுகாத்து சேமிக்கும் தேசிய முயற்சி இடம்பெற்றுவரும் இவ்வேளை அமைந்துள்ளது. LAL நிறுவனத்தின் உள்ளூர் ஒருங்கிணைப்பு முயற்சிக்கு ஆதரவாக இருப்பதில் சியெட் மகிழ்ச்சியடைகின்றது. இலங்கையின் ரயர் தேவையை நிவர்த்திசெய்வதில் கணிசமான பங்களிப்பினை செய்துவரும் ஒரு வர்த்தக முத்திரை என்ற ரீதியில் இந்த மகிழ்ச்சி உள்ளது. எமது இந்த நியமனம் LAL எம்மீது வைத்துள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது. எமது துரித செயற்பாடு, நம்பகத்தன்மை, எமது ரயர்களின் பெறுமதிமிக்க நிலை, உள்ளூர் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் அவற்றின் இயல்பு என்பனவற்றுக்கான ஓர் அத்தாட்சியாகவும் இந்த நியமனம் அமைந்துள்ளது" என்று கூறினார்.

சியட்டால் LAL நிறுவனத்துக்கு அசல் உபகரணங்களாக வழங்கப்படவுள்ள ஒன்பது வகை ரயர்களில் அதிகூடிய மைல்கள் ஓடக்கூடிய தன்மை, உயர் நார் கட்டமைப்பு, சக்தி சேமிப்பு, இரட்டைப் படிமம், வெப்பத்தை தாங்கும் இயல்பு என்பன உட்பட இன்னும் பல விசேட தனித்தன்மை கொண்ட இயல்புகள் அமையப்பெற்றுள்ளன.

நீடித்த பாவனை, அதிகூடிய பாரத்தை தாங்கும் பண்பு, குறிப்பிடத்தக்க எரிபொருள் திறன், சீரான தேய்வு, திசைமாற்றும் திறன், கூடிய மைலேஜ் என்பன உட்பட இன்னும் பல்வேறு வகையான இயல்புகளைக் கருத்திற்கொண்டே இவை விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்று கம்பனி அறிவித்துள்ளது.

2021 நவம்பரில் சியெட் நிறுவனம் இலங்கையில் மகேந்திரா அன்ட் மகேந்திரா இந்தியா நிறுவனம் ஐடியல் மோட்டர்ஸுடன் இணைந்து ஒன்றிணைக்கும் பொலேரோ சிற்றி பிக்அப் வாகனத்துக்கான OEM உடன்படிக்கையிலும் இணைத்துக்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி ஜனவரி 2022 முதல் சியெட் நிறுவனம் மகேந்திரா ஐடியல் லங்கா கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் வாகனங்களுக்கு அதிகூடியது மாதத்துக்கு 144 வாகனங்களுக்கான 720 ரயர்களை வழங்க இணங்கியுள்ளது.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் இலங்கையில் ஒருங்கிணைக்கப்படும் மகேந்திரா KUV100 compact SUV ரக வாகனங்களுக்கு 2019 முதல் அசல் உபகரண அடிப்படையில் ரயர்களை வழங்கி வருகின்றது. உள்ளூரில் ஒருங்கிணைக்கப்படும் சகல KUV100 மகேந்திரா வாகனங்களும் சியெட் FUELSMARRT 185/60 R 15 ரயர்கள் பொருத்தப்பட்டவை.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் கடந்த ஆண்டு அதன் உற்பத்தி வளாகங்கள் முழுவதிலும் ஆற்றல் பயன்பாட்டை அதிகரித்துள்ளது. ட்ரக், பஸ், முச்சக்கரவண்டி, கார் மற்றும் வேன் டயர்களுக்கான அதிகரித்துள்ள தேவையை சமாளிக்கும் வகையில் இவை அமைந்துள்ளன. கடந்தாண்டு ஓகஸ்டில் பஸ் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துப் பிரிவு ரயர் தேவையை சமாளிக்கும் வகையில் 100 வீதம் ரயர்களை வழங்கியுள்ளது. உள்ளூர் உற்பத்திகள் மூலம் இந்தத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதால் ஒரு வருடத்துக்கு 11 பில்லியன் வெளிநாட்டு நாணயமாற்றும் மீதப்படுத்தப்பட்டுள்ளது.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் இலங்கை மற்றும் இந்திய கூட்டு முயற்சிகளில் ஒரு வெற்றிகரமான முயற்சியாக கருதப்படுகிறது. இலங்கையில் இந்த கூட்டு முயற்சியின் மீதான ஒட்டுமொத்த முதலீடு இன்றைய நிலையில் 8 பில்லியன்களாகும். இது உற்பத்தித் தொகுதிகளின் விரிவாக்கம், தொழில்நுட்பத் தரம் உயர்த்தல், புதிய உற்பத்தி அபிவிருத்தி என்பனவற்றுக்காக 2018 ஜனவரியில் செய்யப்பட்ட 3 பில்லியன்களையும் உள்ளடக்கியதாகும். இலங்கையிலுள்ள கம்பனியின் உற்பத்தி வளாகங்கள் ரேடியல் பிரிவில் வாயு மூல ரயர் உற்பத்தி (பயணிகள் கார்கள், வேன்கள் மற்றும் விளையாட்டுப் பிரிவு வாகனங்கள்) வர்த்தக (நைலோன் மற்றும் ரேடியல்) மோட்டார்சைக்கிள், முச்சக்கரவண்டி மற்றும் விவசாய வாகனப் பிரிவுகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

இலங்கை சந்தைத் தேவையில் ரேடியல் பிரிவில் 48 வீத பங்கினையும், ட்ரக் பிரிவில் 80 வீத பங்கினையும், இலகு ட்ரக் ரயர் பிரிவில் 84 வீத பங்கினையும், முச்சக்கரவண்டி பிரிவில் 51 வீத பங்கினையும், மோட்டார்சைக்கிள் பிரிவில் 36 வீத பங்கினையும், விவசாய வாகனப் பிரிவு டயர் தேவையில் 72 வீதத்தையும் சியெட் வர்த்தக முத்திரை பூர்த்திசெய்கின்றது. மேலும் சியெட் களனி அதன் உற்பத்திகளில் 20 வீதத்தை 16 தெற்காசிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தூரகிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

---

## இந்தியா வழங்கிய....

**பதில் -** இந்த முக்கியமான தருணத்தில் இந்தியாவின் ஆதரவு பெரியமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கடுமையாக இருந்த நெருக்கடிகளை சமாளிப்பதற்கு இது உதவியுள்ளது.

இந்தியாவின் ஆதரவில் பல கூறுகள் உள்ளன. அவற்றில் ஒன்று அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஒரு பில்லியன் டொலர் கடன். இந்த நேரத்தில் இது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

எண்ணெய் கொள்வனவுக்கும் இந்தியா ஆதரவளித்துள்ளது. இது முக்கியமானது.

மேலும், இந்தியா 500 மில்லியனை டொலரை வழங்கியுள்ளது. அது சுழலும் கடன். நாம் பயன்படுத்தும்போது அது நிரப்பப்பட்டு திருப்பிச் செலுத்தப்படும். செலுத்தும் இருப்பு நிலைமையைப் பொறுத்த வரையில் நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி சுமார் 515 மில்லியன் மதிப்புள்ள ஏசியன் கிளியரிங் ஹவுஸ், யூனியன் இந்திய ஆதரவு எங்களுக்கு நீண்ட தூரம் உதவியுள்ளது.

400 மில்லியன் அமெரிக்க டொலர்களின் மென்மையான நாணய பரிமாற்றம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மொத்தத்தில் இவை அனைத்தும் மிகவும் கணிசமான உதவியாகும். இதை நாங்கள் பாராட்டுகிறோம்.

எனது சகா நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ இங்கு விஜயம் மேற்கொண்டார். இந்த உடன்படிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக 16ஆம் திகதிக்கு பின்னர் அவர் இங்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பலதுறைகளில் இந்திய தனியார்துறையினரின் முதலீட்டை ஊக்குவிப்பது குறித்து இந்தியாவிடம் ஆர்வம் காணப்படுகின்றது.

**கேள்வி -** திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதற்கான காலஎல்லை என்ன?

**பதில் -** இந்தப் பயனுள்ள வசதியை 17 வருடங்களாக புறக்கணித்துள்ளமை பெரும் கவலைக்குரிய விடயம் என்பதை இரு தரப்பும் உணர்ந்துள்ளன. ஏனென்றால், இந்த சேமிப்புத்திறன் இலங்கைக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கும்.

எண்ணெய் விலை அடிக்கடி மாறும் உலகில் எண்ணெய்யை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து எங்களால் நீண்ட காலம் சேமித்து வைத்திருந்திருக்க முடியும் என்றால் அது எங்களுக்கு பெரும் உதவியாக அமைந்திருக்கும்.

ஆகவே, நீண்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர் எங்களால் இது குறித்த இணக்கப்பாட்டுக்கு வரமுடிந்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 24 குதங்கள் - இந்தியன் ஒயிலுக்கு 14.

ஏனைய 61 குதங்களும் கூட்டு இலங்கை இந்தியாவிற்கு இடையிலான கூட்டுமுயற்சியாக காணப்படப்போகின்றன, இலங்கைக்கு 51 வீதம் - இந்தியாவுக்கு 49 வீதம்.

இது குறித்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆவணத்தில் கைச்சாத்திடவேண்டியது மாத்திரமே எஞ்சியுள்ளது.

நடைமுறை விடயங்கள் சில உள்ளன. உதாரணத்துக்கு இந்திய எல்லை காவல் படையினரின், புகையிரத அதிகாரசபையின் அனுமதியை பெறவேண்டும். அவை அனைத்தும் இடம்பெறுகின்றன. இவை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். அதனால் பாரிய நன்மை ஏற்படும். அதேவேளை, இது பரிவர்த்தனை இல்லை என்பதை நான் வலியுறுத்த வேண்டும். எங்கள் மத்தியிலான உறவை பரிவர்த்தனை நிலையிலிருந்து அதனை விட மேலான மூலோபாய ஒத்துழைப்பு என்ற நிலைக்கு மாற்றுகின்றோம்.

எனவே, முக்கியமானது நம்பிக்கையின் நுழைவாயிலாகும். மேலும், திருகோணமலை அல்லது கொழும்புத்துறைமுக மேற்கு கொள்கலன் முனையத்தில் அதானி குழுமம் முதன்மையான நிறுவனமாக உள்ளது. எனவே, இவை அனைத்தும் கடந்த காலத்தில் நாம் காணாத நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

பொருளாதாரமாக இருந்தாலும் சரி கொவிட் ஆக இருந்தாலும் சரி அல்லது கடல்சார் எண்ணெய்க் கசிவாக இருந்தாலும் சரி இலங்கைக்குத் தேவைப்படும்போது இந்தியா எப்போதும் உதவமுன்வந்துள்ளது என்ற உணர்வை இது மிகவும் சிறப்பான உறவாகக் கொண்டு வந்துள்ளது.

**கேள்வி -** நம்பிக்கை என வரும்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சீனா என்ற கேள்வி ஓர் விவகாரமாக மாறிவிடுகின்றது. குறிப்பாக சீனாவுக்காக திட்டங்கள் இரத்துச் செய்யப்படும்போது, கடந்த மாதம் சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் இடம்பெற்றது?

**பதில்-** இது ஒரு பிரச்சினையில்லை, இலங்கையின் வெளிவிவகார கொள்கையில் எவரையும் விலக்கிவைத்தல் என்பது இல்லை. நாங்கள் அனைத்து நண்பர்களுடனும் சுமுகமான உறவை கொண்டுள்ளோம்.

ஆனால், இந்தியாவுடனான உறவு அனைத்து வகைகளிலும் மிகவும் விசேடமானது. அதற்கு ஓரளவுக்கு வரலாறு, புவியியல், பொருளாதாரம் தொடர்பான சூழ்நிலைகள் காரணமாகும்.

இருநாடுகளினதும் தலைவிதிகளும் பிரிக்க முடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளன. இது மனப்பூர்வமான தெரிவு சம்பந்தமான விடயமும் கூட. விதி எங்களை ஒன்றிணைக்கவில்லை.

மேலும், ஒருங்கிணைந்து செயற்படுதல் என்பது இருநாடுகளுக்கும் வெற்றிகரமானதாக அமையும் என்ற உணர்வு இருநாடுகளிலும் காணப்படுகின்றது.

கொவிட் எங்களை தாக்கியவேளை எங்கள் நாட்டுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் மூன்றில் ஒருவர் இந்தியாவை சேர்ந்தவர்கள். இந்தியாவே எங்களின் இரண்டாவது மிகப் பெரிய வர்த்தகப் பங்காளி. இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்யும் மூன்றாவது நாடு.

சீனாவுடன் எங்களுக்கு உறவுள்ளது. புதிய பட்டுப்பாதை திட்டத்தின் ஒரு பகுதியாக நாங்கள் காணப்படுகின்றோம். எங்களின் துறைமுகங்கள் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியில் சீனா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள் ளது. இதனை நாங்கள் பாராட்டுகின்றோம். ஆனால், இந்தியாவை விட்டுக்கொடுத்து அல்ல.

மேலும், இலங்கையின் எந்தப் பகுதியையும் இந்தியாவுக்கோ அல்லது எந்த நண்பர்களுக்கு எதிராகவோ பயன்படுத்துவதற்கு எந்த சூழ்நிலையிலும் அனுமதிக்கமாட்டோம் என்ற உத்தரவாதத்தை நாங்கள் மீண்டும் மீண்டும் வழங்கிவந்துள்ளோம்.

எனவே, உண்மையில் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. எந்த தர்க்க அடிப்படையும் இல்லாத அச்சம் இது.

---

## "அபாயா" விடயத்தில்...

இந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகோதர தமிழ் எம்.பிக்கள் மற்றும் தமிழ்த் தலைமைகளிடம் நான் இதனை வேண்டுகோளாக விடுக்கிறேன். கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் வடகிழக்கு இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தமிழ், முஸ்லிம் கட்சிகள் பல தடவைகள் பேசியிருந்தன. தமிழ் மக்களின் போராட்டத்துக்காக ஒன்றுடன் ஒன்றாக இணைந்து முஸ்லிம் தலைமைகள் தமிழ்த் தலைமைகளுடன் செயற்பட்டவற்றை மறந்துவிட முடியாது. இனப்பிரச்சினைக்கு தீர்வு வரும்போது நாம் ஒற்றுமையாக செயற்பட்டால் மட்டும்தான் அதை சாத்தியப்படுத்த முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் திருகோணமலை சண்முகா விவகாரம், கர்நாடக ஹிஜாப் விடயம், இஸ்லாம் பாடப்புத்தக மீளக்கோரல், கிழக்கின் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை போன்ற விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறியதாவது,

கிழக்கு மாகாணத்தில், புகழ்பெற்ற சண்முகா வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த விடயங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பேசப்பட்டு வருகின்றன. அந்த பாடசாலையில் சேவையாற்றும் பஹ்மிதா எனும் ஆசிரியை அவரது ஆடைக் கலாசாரத்தை நிலைநாட்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, நீதிமன்றம் ஆகியவற்றுக்கு சென்று நீதிமன்றம் அபாயா அணிந்து செல்லலாம் என்று கூறிய இணைக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் அபாயா அணிந்து கடமைக்கு சென்றபோது எதிர்பாராத கசப்பான சம்பவம் நடந்தேறியுள்ளது. இவ்விவகாரம் முஸ்லிம்கள் மத்தியில் பலத்த கவலையை தோற்றுவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களின் கலாசார, மத உரிமைகள் என்பது புரிந்துணர்வுடன் காலாகாலமாக இருந்துவரும் ஒன்றாகும். விடுதலை புலிகள் ஆயுதந்தாங்கி போராடிய காலங்களிலும், வன்முறைகள் கடுமையாக இருந்த காலத்திலும் கூட சில இஸ்லாமிய மாணவர்கள் தமிழ் பாடசாலைகளிலும், தமிழ் மாணவர்கள் இஸ்லாமிய பாடசாலைகளிலும் கல்விகற்றிருந்தனர். அதேபோன்றே ஆசிரியர்களும் ஒன்றாக இணைந்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அப்போது கூட இவ்வாறான கலாசார, மத உரிமைகளில் பிரச்சினைகள் வந்ததாக நான் கேள்வியுறவில்லை. யுத்தம் முடிந்து இரு சமூகங்களும் ஒற்றுமையாக வாழும் இந்த காலகட்டத்தில், இப்படியான சம்பவம் நடைபெற்று அந்த சம்பவத்தின் பின்னர் கூட காத்திரமான நடவடிக்கைகளை உரிய தரப்புகள் எடுக்கவில்லை. குறைந்தது மூத்த அரசியல்வாதி இரா. சம்பந்தன் உட்பட திருகோணமலை மாவட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள எம்.பிக்களாவது ஒன்றாக கூடி இவ்விடயம் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கலாம்.

வடக்கு, கிழக்கு மக்கள் அச்சப்படும் விடயமாக வெறுமனே ஒரு ஹிஜாப் இற்காக போராடும் நிலை உருவாகியுள்ள சூழ்நிலையில் எவ்வாறு அரசியல் உரிமைகள் விடயத்தில் நாங்கள் உடன்பாட்டுக்கு வரமுடியும். நில உரிமைகள், அரசியல் உரிமைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தாமல், கிழக்கிலுள்ள 45 சதவீத முஸ்லிம்களின் வாழ்வியல் தொடர்பில் அறிவிக்காமல் வடகிழக்கு இணைய வேண்டும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமுல்படுத்தப்படவேண்டும், 13 நடைமுறைக்கு வரவேண்டும் என்று கூறும் தமிழ்த் தலைமைகள் அபாயா பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்த நிலை மாறி தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்காக நாங்கள் பாடுபட வேண்டும்.

இது தொடர்பில் முஸ்லிம் இளைஞர்கள் கவலைப்பட்டு எழுதிக் கொண்டிருந்த சூழ்நிலையில், துரதிர்ஷ்டவசமாக இந்திய கர்நாடக மாநில கல்லூரியொன்றில் ஹிஜாப் பிரச்சினை தலைதூக்கி உக்கிரமடைந்துள்ளது. சர்வதேச கவனத்தினை ஈர்க்கும் வகையில் பிரச்சினை கடுமையாக்கப்பட்டுள்ளது. அந்த கல்லூரியில் கல்வி பயிலும் பீ.பி. முஸ்கான் எனும் மாணவி கல்லூரிக்கு வந்த சமயத்தில் இளைஞர்கள் அந்த மாணவியை சூழ்ந்து கூக்குரலிட்டனர். அப்போது தன்னுடைய உரிமைக்காக உரத்துக் குரலெழுப்பிய செய்தி சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதிலுள்ள ஆறுதலான விடயமாக இந்தியாவிலுள்ள முற்போக்கான தலைமைகளை நோக்கலாம். ராகுல் காந்தி, கர்நாடக முன்னாள் முதலமைச்சர் சீதாராமையா, தமிழக முதலமைச்சர் மு.கா. ஸ்டாலின், பாரத எம்.பி. தொல். திருமாவளவன், நடிகர் கமல்ஹாசன், இந்தியாவின் முன்னணி அரசியல் தலைமைகள், முக்கிய பிரமுகர்கள் இந்த விடயத்தை இந்திய அரசியலமைப்புக்கு எதிரான விடயமாக சுட்டிக்காட்டி அந்த சகோதரிக்கு நடந்த அநீதிக்கு தங்களின் கண்டனங்களை பதிவுசெய்து அரசியல் ஆதாயங்களுக்காகவும், தேர்தல்களை மையமாக கொண்டும் இந்த விடயத்தை சில அரசியல் கட்சிகள் கையிலெடுத்துள்ளதாக பகிரங்கமாகவே அந்த தலைவர்கள் அறிவித்துள்ளனர். கர்நாடக மாநில அரசின் தீர்மானத்தை அவர்கள் கண்டித்தும் பேசியுள்ளனர். இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பலவற்றை பா.ஜ.க. ஆண்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், கர்நாடகாவில் இந்த செயல் நடைபெற்றிருப்பது பலத்த அதிர்வலையையும் தெற்காசிய மாணவர்கள் மத்தியில் ஒரு குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று எமது நாட்டில் கசப்பான சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் நிதானமாகவும் அவதானமாகவும் இருந்துகொண்டிருக்கிறோம். முஸ்லிம்களுக்கு நடக்கும் விடயங்கள் தொடர்பில் பலரும் எங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். குறிப்பாக இஸ்லாம் பாடப்புத்தகங்களை திரும்பப்பெறுமாறு கல்வியமைச்சுடன் தொடர்பில்லாத பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள சிலர் அழுத்தங்கொடுத்ததாக அறிந்து அதிகாரிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் வினவினோம். இஸ்லாம் பாடப்புத்தகத்தில் சில மாற்றங்களை செய்யவேண்டும் என கல்வியமைச்சுடன் சம்பந்தப்படாத சில தரப்புகள் அழுத்தம் கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமான கல்வியமைச்சின் வெளியீட்டு பணிப்பாளர் நாயகம், ஜம்மியத்துல் உலமா பிரதிநிதிகளுடன் கல்வியமைச்சின் முஸ்லிம் அதிகாரிகள் சம்பந்தமாக பேசியிருக்கிறார். கல்வியமைச்சு செய்ய உள்ள மாற்றங்கள் தொடர்பில் உலமா சபைக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அவர்களின் விதப்புரைகள் மற்றும் ஆலோசனைகளை வேண்டி நிற்பதாக அமைச்சின் அதிகாரிகள் எங்களிடம் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் எம்.பிக்கள் எல்லோரும் கட்சி பேதங்கள் இல்லாது ஒருமித்து கல்வியமைச்சருடன் பேசி பாடப்புத்தக விடயத்தில் அநீதி நடக்காமல் பாதுகாக்க ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திகதி 08.02.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4672
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,039,120.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 8 2 0 6 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 40,402,850.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2967
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,166,500.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 02 36 56 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,156,003.20

Mega POWER மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 1020 மெகா அதிர்ஷ்ட இலக்கம் 12064
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,731,000.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 224,023,926.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
N 09 26 53 66 77

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 702
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,919,360.00
Z 02 56 74 79 ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,329,467.60

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0013
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,082,400.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 36 37 47 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,661,405.64

சேவன
சீட்டிழுப்பு இலக்கம் : 354
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,323,920.00
N 41 58 85 89 ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,306,040.80

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# மன்னார் – மடு முன்பள்ளி ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மற்றும் மடு வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று புதன்கிழமை (09) காலை 8.30 தொடக்கம் அடையாள கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

நிரந்தர நியமனம் மற்றும் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி மன்னார், நானாட்டான், மடு, முசலி, மாந்தை மேற்கு பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

25 வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்ற நிலையில், இதுவரை தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் முன்பள்ளிகளில் பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளுக்கு தங்களை பயன்படுத்துகின்றபோதும் தங்களுக்கு மாதம் வெறுமனே ஆறாயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே வழங்கப்படுவதாகவும் முன்பள்ளி ஆசிரியர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி, ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தங்கள் கோரிக்கைகளை மகஜர்களாகவும் நேரில் சந்தித்து தெரிவித்துள்ளபோதும் தங்களுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் விரைவில் தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், “கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், 06ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகை இன்று போதுமானதா, நிரந்தர நியமனம் வேண்டும், முன்பள்ளி கல்வி முக்கியம், முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கியம் இல்லையா” போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு முன்பள்ளி ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டதுடன், தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெலிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய பிரதி உயர்ஸ்தானிகருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சார்ள்ஸ் சந்திப்பு



(மன்னார் நகர் நிருபர்)

இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேக்கப்புக்கும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) மாலை கொழும்பிலுள்ள பிரதி உயர்ஸ்தானிகரின் வதிவிடத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, தமது வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதற்கும் மாதகல் மற்றும் வத்திராயன் பகுதியில் சடலங்களாக கரையொதுங்கிய மீனவர்களின் இறப்புக்கு நீதி கோரியும் வடமராட்சி, சுப்பர்மடம் பகுதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் நியாயமான கோரிக்கைக்கு கூர்நோக்குடனான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு மீனவர்களிடையே தொடர்ச்சியாக நிலவிவரும் இம்முரண்பாடுகள் ஈழத்தமிழர்களுக்கும், தாய்த்தமிழக உறவுகளுக்குமிடையே விரிசலை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாக, இலங்கை மீனவர்களின் கடல் எல்லைகளை வரையறை செய்வதற்கேனும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோள் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்தும், தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் அபிலாஷையான நிலையான அரசியல் தீர்வைப் பெறுவதில் ஏற்படுத்தப்படும் காலதாமதமானது, தமிழர்களின் நில உரித்துகளை வன்பறிப்புச் செய்து, தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும் சமநேரத்தில் இந்தியாவின் அரசியல், இராஜதந்திர நகர்வுகளிலும் தாக்கம் செலுத்தக்கூடும் என்பதால், தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வில் இந்தியாவின் வகிபாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் சிறப்பாகக் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழில் கொரோனா பரவல் அதிகரிப்பு; இது ஆரோக்கியமானதல்ல

## அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு



யாழ். மாவட்டத்தில் கொரோனா பரவல் அதிகரித்துச் செல்கின்றது. இது ஆரோக்கியமானதல்ல என அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் கொரோனா பரவலானது அதிகரித்துச் செல்கின்றது. ஜனவரி மாத முற்பகுதியிலிருந்து கொரோனா பரவல் அதிகரித்துச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது. இந்த அதிகரிப்பானது ஆரோக்கியமானதாக இல்லை.

தற்பொழுது அனைத்துச் செயற்பாடுகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், குறிப்பாக போக்குவரத்து, கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுவரும் நிலையில் கொரோனா தொற்றின் நிலை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளதாக சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளார்கள்.

எனவே, மக்கள் சுகாதார அமைச்சினால் இறுதியாக வெளியிடப்பட்ட சுகாதார நடவடிக்கைகளுக்கமைவாக தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன், கட்டாயமாக முகக்கவசம் அணியவேண்டும். ஒன்றுகூடல்களை பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக, தேவையற்ற பயணங்கள், நடமாட்டங்களை கட்டுப்படுத்த வேண்டும். தற்போதைய நிலையில் தடுப்பூசி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என்றார்.

அத்தோடு யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 62 வீதத்துக்கு மேற்பட்டோர் முதலாம் கட்ட தடுப்பூசியையும் அதற்கு குறைவானவர்கள் இரண்டாம் கட்ட தடுப்பூசியையும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்கள் சற்றுக் குறைவாக இருந்தபோதும் தற்பொழுது மக்கள் ஆர்வம் காட்டி இந்தத் தடுப்பூசியை பெற்று வருவது அவதானிக்கக்கூடியதாகவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனை யாழ். போதனாவில் இடைநிறுத்தம்!

(யாழ். நிருபர்)

வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்றுமுதல் மறு அறிவித்தல்வரை யாழ். போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதில் சிக்கல் காணப்படுவதால் மறு அறிவித்தல்வரை அவை இடைநிறுத்தப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

# பூநகரியில் 8 இந்திய றோலர்கள் ஏலத்தில் விற்பனை



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி பகுதியில் எட்டு இந்திய றோலர்கள் 94ஆயிரத்து 300ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

நேற்று (09) கிராஞ்சி கடற்படை முகாம் பகுதியில் வைத்து குறித்த றோலர் படகுகள் கொழும்பு மற்றும் கிளிநொச்சி கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் குழு ஏலத்தில் விற்பனைசெய்யும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. ஏலத்தில் விடப்பட்ட அனைத்து படகுகளும் மீளப் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் தற்போது 800 என்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கே என்டிஜன் பரிசோதனைக் கருவிகள் இருப்பதாகவும் இதனால் கடுமையான நோய் அறிகுறிகளுடன் வருகின்றவர்களை தவிர சாதாரண நோய் அறிகுறிகளுடன் வருகின்றவர்களை பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பரிசோதனை எண்ணிக்கையினை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாவட்ட சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி 800 பரிசோதனை கருவிகள் ஒருசில நாட்களில் முடிவடைந்துவிடும் என்றும் அதற்குப் பின்னர் கொழும்பிலிருந்து பரிசோதனைக் கருவிகள் கிடைக்கப்பெறுகின்றபோதே தொடர்ந்தும் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மீண்டும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கீரிமலை சிறாப்பர் மடத்தின் மீள் புனரமைப்புக்கான அடிக்கல் நடல்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - கீரிமலை சிறாப்பர் மடத்தின் மீள் புனரமைப்புக்கான இரண்டாம் கட்டப் பணிகளுக்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.


அண்மையில் சிறாப்பர் மடத்தின் முதலாம் கட்ட புனர்நிர்மாணப் பணிகளை சிறாப்பர்மட நிதியத்துடன் இணைந்து தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், சிறாப்பரின் நான்காவது வாரிசான பொன்னா விக்னராஜாவின் நினைவுதினமான நேற்று முன்தினம் விசேட பூஜை வழிபாடுகள் சிறாப்பர் மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்து யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட சிறாப்பர் மடத்தின் தெற்கு பகுதி வாசல் மற்றும் அதனுடன் இணைந்த பகுதியை சிறாப்பர் நிதியத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களம் இணைந்து மீள் புனரமைப்பு செய்வதற்கான அடிக்கல் நாட்டும் விழா ஆகம முறைப்படி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரிகளான பா.கபிலன், உஷாந்தி, தொல்லியல் திணைக்கள ஊழியர்கள், நகுலேஸ்வர ஆலய குமார சுவாமி குருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா புகையிரத நிலைய வீதியில் பழைமையான மரங்கள் அழிப்பு



வவுனியா புகையிரத நிலைய வீதியில் காணப்பட்ட பழைமையான நிழல் தரு மரங்கள் பல அழிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை சுதந்திர தினம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளின்போது தற்போது மரநடுகை அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், பதிலீடான எந்தவொரு மர நடுகையுமின்றி வவுனியா புகையிரத நிலைய வீதியில் இலங்கை வங்கி முன்பாக காணப்பட்ட பழைமையான மரங்கள் பல கடந்த சில நாட்களாக வெட்டப்பட்டு கொண்டுசெல்லப்படுகின்றன.

பயணிகளுக்கு பயன்பட்ட வீதியோர நிழல் மரங்களே இவ்வாறு வெட்டிச் செல்லப்படுகின்றன. வவுனியாவுக்கு அழகு சேர்ப்பதாகவும், அடையாளங்களாகவும் காணப்பட்ட பழைமையான மரங்களே அழிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள சிறப்பு வாய்ந்த ஆலயம் ஒன்றின் தேர் பாதையில் காணப்பட்ட மரம் ஒன்று வெட்டப்பட்டபோது வவுனியா பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலின்பேரில் ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். ஆனால், இங்கு வீதியோரமாக காணப்படும் பாரிய மரங்கள் வெட்டப்பட்டு கொண்டுசெல்லப்படுகின்றன. இது தொடர்பில் எந்தவொரு தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா நகரசபையினரை தொடர்புகொண்டு கேட்டபோது, தம்மால் இச்செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. குறித்த பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானது எனத் தெரிவித்தனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரை தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, பதில் வழங்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் எவரும் அலுவலகத்தில் இல்லை எனத் தெரிவித்தனர்.

வவுனியா பிரதேச செயலாளரை தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, அவர் தொலைபேசி அழைப்பிற்கு பதில் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் சிறுமி உட்பட மூவர் படுகாயம்

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்பிராய் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் (08) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 06 மணியளவில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தூர் வீதி ஊடாக பயணித்த இரண்டு மோட்டார்சைக்கிள்களில் ஒன்று மீசாலை-வேம்பிராய் பகுதியில் கிளை வீதி ஒன்றினுள் திருப்ப முற்பட்டவேளையில் பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதி இவ்விபத்து சம்பவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 08 வயது சிறுமி கால் முறிந்த நிலையிலும், 37வயதான அவரது தாய் தலையில் படுகாயமடைந்த நிலையிலும், மீசாலை வடக்கைச் சேர்ந்த 17 வயது இளைஞன் காலில் படுகாயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டில் டொலர் பிரச்சினை இருப்பதை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை

## எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



டொலருக்கு நிகரான அவற்றின் உத்தியோகபூர்வ மதிப்பு 210 ரூபா என்பதை மத்திய வங்கி தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், டொலர் 200 ரூபா என உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது. ஆனால், புறக்கோட்டைக்குச் செல்லும்போது 250 ரூபாவாகும். இந்த அனைத்து உண்மைகளிலும் எமது நாட்டில் டொலர் பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொள்ள மத்திய வங்கி தயாராக இல்லை - என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (09) அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இன்று பல நாளிதழ்களின் முதல் பக்கங்களைப் பார்த்தேன். டொலர்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என ஒரு பத்திரிகை பெரிதாக குறிப்பிடுகிறது. இது நிவார்ட் கப்ரால் கூறிய அறிக்கை. அதன்பின்னர் மற்றுமொரு நாளிதழ் 2,000 கொள்கலன்களை வாங்க 20 மில்லியன் டொலர்கள் தேவை என்று கூறுகிறது. ஏனெனில் அவை வெளியே எடுக்க முடியாத நிலையில் சிக்கியுள்ளன.

மருந்துகளுக்கு டொலர்கள் தடைப்படும் எனவும் அதனால் மருந்துகள் தேக்கமடைந்துள்ளதாகவும் இன்னுமொரு பத்திரிகை கூறுகிறது. பிரச்சினைக்குத் தீர்வாக மத்திய வங்கி தங்கள் கையிருப்புகளை மீள் விற்பனை செய்துள்ளதாக வேறொரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புத்திசாலிகள் செய்தித்தாள்களைப் படிக்கும்போதும், தொலைக்காட்சியில் செய்திகளை அல்லது எரிவாயு வரிசையில் பார்க்கும்போதும், இலங்கை டொலர் நெருக்கடியில் இருப்பதை அறிவார்கள்.

இன்று (நேற்று) பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி. இலங்கை மத்திய வங்கிக்கு சுமார் 70 மில்லியன் டொலர் கடனைத் தீர்க்கவுள்ளது. இலங்கை அபிவிருத்தி வங்கியானது இம்மாதம் 17ஆம் திகதி சுமார் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டியுள்ளது. நவம்பர் மாத இறுதியில் மத்திய வங்கி ஒன்றரை பில்லியன் டொலர் கையிருப்பை வெளியிட்டதை இரண்டு நாட்களுக்கு முன்னர் பார்த்தோம். டேட்டா சயின்ஸ் சீனாவிலிருந்து 10 பில்லியன் யுவான் வரை சேர்த்து அதன் மதிப்பு ஒன்றரை பில்லியன் என்று கூறுகிறது. அது ஜனவரி இறுதியில் 700 மில்லியன் டொலர்களாகும்.

அந்தப் பணம் இந்த செலவுகள் அனைத்தையும் ஈடுகட்ட பயன்படுத்தப்படுகிறது. பின்னர் மருந்து கொண்டுவர பணம் கேட்கிறார்கள், 2000 கொள்கலன்களை விடுவிக்க பணம் கேட்கிறார்கள் மற்றும் பிற தேவைகளுக்கு பணம் தேவை என்று கேட்கிறார்கள். ஆனால், டொலர்கள் இல்லை. இன்று ஒரு நாளிதழில், டொலர்கள் இருந்தால் அந்த டொலருக்கு 210 ரூபா கொடுங்கள் என்று கூறுகிறது. அதாவது, டொலருக்கு நிகரான அவற்றின் உத்தியோகபூர்வ மதிப்பு 210 ரூபா என்பதை மத்திய வங்கி தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. டொலர் 200 ரூபா என மத்திய வங்கி உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது. ஆனால், புறக்கோட்டைக்குச் செல்லும்போது 250 ரூபாவாகும். இந்த அனைத்து உண்மைகளிலும் எமது நாட்டில் டொலர் பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொள்ள மத்திய வங்கி தயாராக இல்லை.

ஆச்சரியமாக இருக்கிறது. இந்த நாட்டில் உள்ளவர்களுக்கு மூளை இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா என கப்ராலிடம் கேட்கிறோம். ஆடை அணிவதற்கும் ஒரு எல்லை உண்டு. தலைமை நிர்வாக அதிகாரி என்ற முறையில், சொந்த பணிப்பாளர் குழுவைக் குழப்பி, இப்படி ஒரு தனியார் நிறுவனத்தை வங்குரோத்தடையச் செய்ததில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

நாடுதான் வங்குரோத்தாகும். உங்களது தனியார் நிறுவனங்களை வங்குரோத்தாக்குவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என கப்ராலிடம் கூறும் அதேவேளை, இந்த நாடு வங்குரோத்தாகுவதை அனுமதிக்க முடியாது. இது பாவம். இந்த நாட்டை படுகுழியின் பக்கம் இழுக்கிறீர்கள் என்பதை இப்போது புரிந்து கொள்ளுங்கள். அதைச் செய்யாதீர்கள். மக்கள் பிரதிநிதி என்ற வகையில், மக்கள் எதிர்க்கட்சி என்ற வகையில், குறைந்தபட்சம் கலந்துரையாடலுக்கு வந்து, இந்தப் பிரச்சினையின் ஆழத்தையும் பரிமாணத்தையும் புரிந்துகொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் - என தெரிவித்தார்.

# யால வனப்பகுதியில் பாரிய கஞ்சா செய்கை ட்ரோன் மூலம் கண்காணித்து சுற்றிவளைப்பு

## ஒரு இலட்சத்து 50 ஆயிரம் செடிகள் அழிக்கப்பட்டன







(கெலும் குணதிலக்க)

இராணுவத்தினரின் உதவியுடன் கோனகங்ஹார பொலிஸாரினால் கடந்த 06ஆம் திகதி யால வனப் பகுதியில் ட்ரோன் கெமரா மூலம் கண்காணிக் கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட சுற்றவளைப்பு நடவடிக்கையின்போது ஒன்றரை ஏக்கர் பகுதியில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கஞ்சா தோட்டத்தின் உரிமையாளர்கள் தப்பிச்சென்றுள்ளதுடன், அங்கிருந்த கஞ்சா செடிகள் மற்றும் ஒரு இலட்சத்து 50ஆயிரம் வரையிலான செடிகளை முழுமையாக அழிப் பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த கஞ்சா செடிகளின் வெளிநாட்டுப் பெறுமதி 25 இலட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த கஞ்சா செடிகளில் ஒரு தொகுதியை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோனகங்ஹார பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.டீ. சதிஷ் குமாரவின் தலைமையிலான அதிகாரிகளினால் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜகான் செபகன் பிரதமருடன் சந்திப்பு





சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜகான் செபகன் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் (08) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தனர்.

உலகின் மிகப்பெரிய மனிதாபிமான சேவையாற்றும் அமைப்பான சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனம் 192 நாடுகளில் காணப்படுகின்றன.

கொவிட் தொற்று உள்ளிட்ட வரலாற்றில் இலங்கை மக்கள் முகங்கொடுத்த ஒவ்வொரு பேரிடரின்போதும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிய சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்திற்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் காணப்படும் உறுப்பு நாடுகளில் மிகவும் சுறுசுறுப்பாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படும் முன்னணி சங்கமாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் விளங்குவதாக சுட்டிக்காட்டிய சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜகான் செபகன், எதிர்கால நிவாரணப் பணிகளில் அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், இலங்கை மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நன்மைகளை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க முன்னெடுக்கும் பணிகளுக்கு அரசாங்கம் பூரண ஆதரவளிப்பதாக பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சம்மேளனத்தின் இந்திய பிராந்திய தலைமை பிரதிநிதி உதய ரெஜ்மி, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க, பணிப்பாளர் நாயகம் வைத்தியர் மஹேஷ் குணசேகர, பிரதி பணிப்பாளர் நாயகம் அருண லேகம்கே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.


# அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் பதுளையில் கைது

(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை, கந்தகெட்டிய கிமுல்லேவ பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் அனுமதிப் பத்திர அறிவுறுத்தல்களை மீறி லொறியினை ஆற்றினுள் செலுத்தி மணல் அகழ்வினை மேற்கொண்டுவந்த கும்பலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பதுளை மாவட்டத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைத்த இரகசிய தகவல்களுக்கமைய அவரின் பணிப்பின்கீழ் பதுளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பெண்ணொருவர் உட்பட மூவரை



கைதுசெய்து கந்தகெட்டிய பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

# அதிக விலைக்கு சீமெந்து விற்பனைசெய்த 100 பேர் கைது

அதிக விலைக்கு சீமெந்து விற்பனைசெய்த நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தகர்களை கைது செய்துள்ளதுடன், அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கூடுதலான விலைக்கு சீமெந்து விற்பனை செய்பவர்களை கைதுசெய்வதற்காக அதிகாரிகள் பலரை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருப்பதாக நுகர்வோர் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதேபோன்று அதிக விலைக்கு சீமெந்தை விற்பனைசெய்யும் வர்த்தகர்களின் விற்பனை முகவர் அனுமதியை இரத்துச்செய்யுமாறு சம்பந்தப்பட்ட சீமெந்து நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்ற ‘சார சங்ஹிதா’ புலமை இலக்கிய நூலின் இரண்டாவது பதிப்பு வெளியீடு







நாடாளுமன்ற ‘சார சங்ஹிதா’ புலமை இலக்கிய நூலின் இரண்டாவது பதிப்பு பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நேற்றுமுன்தினம் (08) நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது.

இந்நூலின் முதலாவது பிரதியை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவிடமிருந்து பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பெற்றுக்கொண்டார். அத்துடன், சபை முதல்வரும், கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோருக்கும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நாடாளுமன்ற ‘சார சங்ஹிதா’ புலமை இலக்கிய நூலின் பிரதிகளைக் கையளித்தார்.

நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவின் வழிகாட்டலின்கீழ் பல்வேறு பிரிவுகளில் கடந்த வருடம் நாடாளுமன்ற ‘சார சங்ஹிதா’ புலமை இலக்கிய நூலுக்கான கட்டுரைகள் கோரப்பட்டன.

சட்டவாக்க செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி, தேர்தல் முறைமை மற்றும் அதன் திருத்தங்கள், நாடாளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும், பொதுமக்கள் தொடர்பு மற்றும் இலங்கை பெண்கள் அரசியலில் புதிய போக்கு ஆகிய பல்வேறு தலைப்புகளில் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களின் கட்டுரைகள் இந்நூலில் உள்ளடங்கப்பட்டுள்ளன. இதன் மீளாய்வுக் குழுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரத்னசிறி அரங்கல, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி, களனி பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ஜீ.யோகராஜா, கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீ பாளி கல்லூரியின் கலாநிதி டியூடர் வீரசிங்க மற்றும் களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்



விஜயானந்த ரூபசிங்க ஆகியோர் காணப்படுகின்றனர்.

நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பதிப்பான ‘நாடாளுமன்ற சார சங்ஹிதா’ புலமை இலக்கிய நூல் நாட்டின் நூலகங்கள் மற்றும் தேவையானவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. மேலும், நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தை தொடர்புகொள்வதன் மூலம் தேவையானவர்கள் இந்த நூலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், நாடாளுமன்ற ‘சார சங்ஹிதா’ ஆய்வு புலமை இலக்கிய நூலின் மூன்றாவது பதிப்புக்கான ஆக்கங்கள் கோரல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும், தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா வெளியிட்டார்.

இதற்கமைய நேற்றுமுன்தினம்முதல் எதிர்வரும் ஏப்ரல் 24ஆம் திகதி வரை ‘உலகமயமாக்கல் மற்றும் உலக மயமாக்கலுக்கு எதிரான போக்குகளின் மத்தியில் நாடாளுமன்ற முறைமைகள்’ என்ற பிரதான தொனிப்பொருளின்கீழ், பதினொரு உப தலைப்புகளில் ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

அந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துறையைச்சார்ந்த பிரதிநிதிகள், ஏனைய துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள், நாடாளுமன்ற திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# கடற்றொழிலாளர் விவகாரத்தில் பொறுப்பற்ற முறையில் என்னால் கதையளக்க முடியாது

## நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் ஏனையோர் போன்று பொறுப்பற்ற முறையில் ஏனோ தானோ என்று தன்னால் கதையளக்க முடியாது என்று நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல், நான்கு திட்டங்களை முன்வைத்து உறுதியுடன் செயலாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன், கடந்த 27ஆம் திகதி பருத்தித்துறை வத்தராயனில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர்களுக்கு அஞ்சலியையும் தெரிவித்தார்.

மேலும், நீதிக்கான குரல்கள் ஒலிக்கட்டும் நியாயங்கள் வெல்லட்டும் என்று தான் கேட்டுக்கொண்டதற்கு அமைய, நீதிக்காக குரல் கொடுக்கும் கடற்றொழிலாளர்களின் கூடாரத்தில் அநீதியின் குழப்பக்காரர்கள் புகுந்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லைத்தாண்டிய சட்டவிரோதத் தொழில் முறைக்குஎதிராகநாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டங்கள் தொடர்பாக நேற்று (09) நாடாளுமன்றில் விசேட அறிக்கையினை சமர்ப்பித்து உரையாடற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது கடல் எல்லை, வளங்கள் யாவும் எமது மக்களுக்கே சொந்தம். கடல் எல்லைத் தாண்டி வந்து அத்துமீறுகின்ற செயல் இன்று நேற்றுள்ள பிரச்சினை அல்ல. அது, நீண்ட காலப் பிரச்சினையாகும்.

இதற்கு முடிவு கட்டிட நான் எடுத்து வருகின்ற முயற்சிகள் யாவும், வெறும் சுயலாப அரசியல் நோக்குடையவை அல்ல. இது என் உதிரத்திலும் உணர்விலும் ஒன்று கலந்துவிட்ட பிரச்சினைகளில் ஒன்றாகும்.

நான் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்பதற்கு முன்னரும் நேரில் சென்று, களத்தில் நின்று எமது கடற்றொழிலாளர்களின் விவகாரங்களை சரிவரக் கையாண்டிருக்கின்றேன். கச்சதீவில் இரு தரப்பு கடற்றொழிலாளர்களையும் வைத்து, பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமன்றி, இந்திய மத்திய, மாநில தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடனும் கலந்துரையாடி வருகின்றேன். ஆகவே, இது என் கடமை மட்டுமல்ல, என் உள்ளார்ந்த உணர்வும் கூட. இந்தப் பிரச்சினையில் இரு நாடுகளும் தொடர்புபடுவதால், இராஜதந்திர முறையிலான முன்னெடுப்புகள் ஒருபுறம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக, இழுவை வலைப் படகுகளின் மூலமான தொழில் முறை என்பது இரு நாட்டு கடல் வளங்களைச் சுரண்டுவதுடன், மீனின இனப் பெருக்கமும் அழிவுற்று வருகின்றன.

அதேநேரம், எமது கடற்றொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள், படகுகள் என்பனவும் பாதிக்கப்பட்டு, அழிவடைகின்றன.

எனவே, இது தொடர்பில் இருநாட்டு கடற்றொழிலாளர்களுக்கிடையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

அடுத்ததாக, எல்லைத் தாண்டி வருகின்ற இழுவை வலைப் படகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தல்.

அடுத்து, இவ்வாறு சட்ட நடவடிக்கைகளின் ஊடாக அரசுடமையாக்கப்படுகின்ற படகுகளை, அவற்றின் இழுவை வலை மடிகளை அகற்றி, எமது கடற்றொழிலாளர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுத்தல்.

இராட்சத படகுகளை எதிர்கொண்டு, சிறிய படகுகளில் தொழில் செய்ய இயலாத எமது கடற்றொழிலாளர்களுக்கு இது தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும், அவர்களது வாழ்வாதாரங்களை உயர்த்துவதாகவும் அமையும். இந்த திட்டங்களே நான் வகுத்திருக்கும் திட்டங்களாகும்.

நீதியான தீர்வு நோக்கிய எமது கடற்றொழிலாளர்களின் குரல் வளைகளை நெரிப்பதுபோல், நீதியின் கூடாரத்தினுள் ஒட்டகங்களும், குள்ள நரிகளும் நுழைந்தன. ஆனாலும், நீதியின் குரலாக நிமிர்ந்த எங்கள் கடற்றொழிலாளர்களின் தீர்வு நோக்கிய பயணத்தை திசை திருப்ப முயன்றவர்கள் தோற்றுப் போனார்கள்.

இதற்கு முன்னர் உள்ளூர் இழுவை வலைப் படகுகளிலிருந்து கடற்றொழில் அமைச்சர் ஒரு இரவுக்கு ஒரு படகிலிருந்து 05ஆயிரம் ரூபா வீதம் பெறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 22.10.2021 நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தியே அவர் இந்த அப்பட்டமான பொய்யான தகவலைத் தெரிவித்திருந்தார். அவரது அக்கூற்றில் உண்மை இருப்பதாக அவர் கருதினால், நீதிமன்றத்தின் ஊடாக அதை அவர் நிரூபிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு வெளியில் அவர் இக்கருத்தினை வெளியிட்டிருந்தால், நான் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் அவர் அறிவார்.

ஏற்கனவே இத்தகைய போலியான கருத்துகள் தொடர்பில் நான் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும், அவற்றில் நான் வெற்றிகண்டதும் அவர் அறியாமல் இல்லை. எனவே, அவர் இக்கூற்றினை நிரூபிக்க முன்வர வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

# கிக் குத்துச் சண்டையில் தங்கம் வென்ற இந்துகாதேவிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டு

## நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பவர்களாக இளைஞர்கள் திகழ்வதாகவும் தெரிவிப்பு





அண்மையில் நடைபெற்ற இலங்கை - பாகிஸ்தான் கிக் குத்துச்சண்டை போட்டித் தொடரில் 25 கிலோவுக்கு கீழ் 55 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று தாய்நாட்டுக்கு பெறுமையைத் தேடித்தந்த வீராங்கனை இந்துகாதேவி கணேஸ் நேற்றுமுன்தினம் (08) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்தார்.

முல்லைத்தீவின் புதிய நகரில் பிறந்து உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியின் பயணத்தின் விளைவாக பாராட்டத்தகு பெறுபேற்றினை பிறந்த தாய்நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தமைக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவருக்கு நிதியுதவியையும் இதன்போது வழங்கி வைத்தார்.

பல சந்தர்ப்பங்களில் இந் நாட்டுக்கு வெற்றியையும் புகழையும் பெற்றுத் தந்தது இளைய தலைமுறையினர்தான் என்றும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் இந்நாட்டை வெற்றிப் பெறச்செய்தனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எந்தவொரு நாட்டினதும் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக அந்நாட்டின் இளைஞர்கள் இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்த இளைஞர்களை சரியாக கையாள்வது மிகவும் அவசியம் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் சனத்தொகையில் இளைஞர்கள் கால் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேவேளை, விளையாட்டின் மூலம் உலகையே வென்ற பல மாவீரர்கள் நம்மிடம் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று கிக் குத்துச்சண்டை மூலம் இலங்கைக்கு புகழைக்கொண்டு வந்த இந்துகாதேவி கணேஸ், வவுனியாவில் பிறந்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்துகாதேவி இந்த தாய்நாட்டுக்கு மேலும் பல தங்கப்பதக்கங்களை கொண்டு வருவாள் என தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

முல்லைத்தீவின் புதிய நகரில் பிறந்து உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியின் பயணத்தின் விளைவாக பாராட்டத்தகு பெறுபேற்றினை பிறந்த தாய்நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தமைக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவருக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசினையும் இதன்போது வழங்கி வைத்தார்.

தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவருக்கு தேவையான முழு ஆதரவையும் வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது உறுதியளித்தார். ஐக்கிய மகளிர் சக்தியினால் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, அதன் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலீபதுல் குலபா மௌலவி ஜே. அப்துல் ஹமீத் ஆலிமின் பெயரிலான கத்தமுல் குர்ஆன் ஞாபகார்த்த சொற்பொழிவு பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்றது. பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் கலாநிதி மௌலவி அஹம்மத் அஸ்வர் அஸாயிதீன் (அல் -அஸ்ஹரி) உரையாற்றுவதையும் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஜ.எம்.ரபீக் (பஹ்ஜி) தலைமையில் கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்

(படங்கள்: பேருவளை செய்தியாளர்)





# கட்டுத்துவக்கு வெடித்து புத்தளத்தில் ஒருவர் பலி

*(ரஸீன் ரஸ்மின்)*

புத்தளம் - பல்லம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடுவா பகுதியில் நேற்று முன்தினம் (08) இரவு கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் ஆண்டிகம பெரியமடு பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரால் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள்

## சவால்களை எதிர்கொள்ளத் தயாராக வேண்டுமென பிரதிநிதி மொஹான் தெரிவிப்பு

கொவிட்-19 தொற்றுநோயின் கட்டுப்பாடுகள் காரணமாக, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகம் நியூயோர்க் ட்ரை-ஸ்டேட் பகுதியில் மெய்நிகர் ரீதியாக இலங்கையின் 74 ஆவது ஆண்டு சுதந்திர தின விழாவைக் கொண்டாடியது.

நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் மொஹான் பீரிஸ் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து தேசிய கீதம் மற்றும் ஜயமங்கல கீதம் இசைக்கப்பட்டு விழா ஆரம்பமானது.

நியூயோர்க் பௌத்த விகாரையின் பிரதமகுரு வணக்கத்துக்குரிய அலுத்கம தம்மஜோதி தேரர் பௌத்த ஆசீர்வாதங்களை வழங்கியமையைத் தொடர்ந்து நியூயோர்க்கில் உள்ள வட அமெரிக்காவின் இந்து ஆலய சங்கத்தின் சமய விவகாரப் பணிப்பாளர் ஸ்ரீரவி வைத்தியநாத சிவாச்சாரியார், வட அமெரிக்காவில் உள்ள இலங்கை முஸ்லிம் சமூகத்தின் முன்னாள் இமாம் முப்தி ஹிஷாம் நவாஸ் மற்றும் நியூ ஜேர்சியில் உள்ள செயின்ட் பெனடிக்ட் மடாலயத்தின் வணக்கத்திற்குரிய தந்தை சில்வெஸ்டர் ஜெயக்கொடி ஆகியோர் ஆசி வழங்கினர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுதந்திர தின உரையைத் தொடர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன.







இந்நிகழ்வில் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் உரையாற்றுகையில், நாம் எமது சொந்தக் கனவுகளைத் தொடரும் சுதந்திர தேசத்தின் மக்கள் என்றும், பல ஆண்டுகளாக ஊட்டப்பட்ட சுதந்திரமானது எதேச்சாதிகாரக் கட்டுப்பாடு மற்றும் சமூக சாசனம் இல்லாத எமது சொந்தத் தெரிவுகளை உருவாக்கியுள்ளது என்றும் தெரிவித்தார். சுதந்திரத்தின் புனிதமான கொள்கைகள் எமது அரசியலமைப்பின் அடித்தளத்தில் பொதிந்துள்ளன என்றும், வாய்ப்பின் தரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை உள்ளடக்கியது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். யாரையும் விட்டு வைக்காத தொற்றுநோய் அதிலிருந்து சிறந்த முறையில் மீண்டு, கட்டியெழுவதற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்பதை எடுத்துரைத்த அவர், ஒரு தேசமாக நாம் எதிர்கொள்ளவேண்டிய சவால்கள் எதுவாக இருந்தாலும், தலைகளை உயர்த்தி, கைகளை அகல விரித்து எதிர்கொள்ள வேண்டும் என இலங்கைப் பிரஜைகளிடம் கேட்டுக்கொண்டார்.

பங்களாதேஷ் மக்கள் குடியரசு, பூட்டான் இராச்சியம், இந்தியக் குடியரசு, மாலைதீவுக் குடியரசு, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு ஆகிய நாடுகளின் ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தரப் பிரதிநிதிகளால் அந்தந்த அரசாங்கங்கள் மற்றும் அவர்களது மக்கள் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவிக்கும் வகையில் செய்திகள் வழங்கப்பட்டன.

நியூயோர்க் ட்ரை ஸ்டேட் பகுதியில் வசிக்கும் புலம்பெயர் இலங்கையர்களின் செய்திகளும் இந்த விழாவில் உள்ளடக்கப்பட்டன. நியூயோர்க்கில் உள்ள சிங்கள சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கலாநிதி விஜே கொட்டஹச்சி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நியூயோர்க்கில் உள்ள தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலாநிதி கதிரவேல் ஈஸ்வரனும், முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அப்துல் ஷாகுல்ஹமீட்டும் உரையாற்றியதுடன், நியூயோர்க் இலங்கை சங்கத்தின் தலைவி திருமதி. ஷமிஸ்ரா நடராஜாவின் உரை இடம்பெற்றது.

# மட்டு. மாநகரசபை பாதீட்டில் கடந்த ஆண்டுகளுக்கான வேலைத்திட்டங்கள் ஒப்பந்த அடிப்படையில் வெளியாரிடம்

## வளங்கள் சூறையாடப்படுமென முதல்வர் சரவணபவன் குற்றச்சாட்டு




(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபையின் கட்டளை சட்டம் இலங்கை சோசலிச குடியரசின் சட்டம் மீறப்படுவது வெளிப்படையாகயிருந்தும் மாகாணசபை நிர்வாகம் இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்காக 2020ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி மூலமான வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டு வருகின்றன. இதன்கீழ் மட்டக்களப்பு விமான நிலைய பிரதான வீதியின் 01ஆம் மற்றும் 02ஆம் குறுக்கு வீதிகளின் புனரமைப்புப் பணிகள் நேற்று காலை ஆரம்பித்துவைக்கப்பட்டன.

வட்டார உறுப்பினர் அ.கிருரஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் கலந்துகொண்டு வீதி அபிவிருத்தி பணியை ஆரம்பித்துவைத்தார்.

மாநகரசபையின் 20 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் இந்த வீதிகள் புனரமைப்பு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர் துரைசிங்கம் மதன் உட்பட பிரதேச கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய மாநகர முதல்வர், இந்த வேலைத்திட்டங்கள் 2020ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டு மத்திய அரசு மற்றும் வேறு நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்ட பாரிய வேலைத்திட்டங்கள் இருந்த காரணத்தினால் டிசம்பர் மாதத்தில் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், 2020 டிசம்பரில் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இந்த வேலைகளை அமுல்படுத்துவதில் பாரிய தாமதங்கள் ஏற்பட்டன. இதேபோன்று 2021ஆம் ஆண்டு வேலைத்திட்டங்களும் தாமதப்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் மாற்று திட்டமாக மாநகரசபை நேரடியாக வேலைத்திட்டங்களை செய்யாது வெளியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் இதனை வழங்கி பூர்த்திசெய்வது என்று மாநகரசபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வெளியாருக்கு வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

அந்த அடிப்படையில் 2020, 21ஆம் ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்படாத வேலைகளை வெளியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி முடிக்கப்பட்டு வருகின்றது.

மாநகரசபையின் செயற்பாடுகளுக்கு தடையாக இருக்கும் அதிகாரி மாற்றப்படும் பட்சத்தில், மாநகரசபை நேரடியாக களத்திலிறங்கி பொதுமக்களுக்கு அதியுச்ச நன்மைகளை வழங்கக்கூடிய வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். வெளியாருக்கு ஒப்பந்தம் வழங்கும்போது சுமார் 40வீதமான வேலைகள் குறைவாக செய்யக்கூடிய நிர்ப்பந்தம் உள்ளது. மாநகரசபை வளங்களை பயன்படுத்தி நாங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது ஒதுக்கப்பட்ட நிதியானது, பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மட்டும் பயன்படுத்தப்படுவதனால் மதிப்பீட்டுக்கு அதிகமான வேலைகளை செய்யக்கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பு மாநகரசபையின் கட்டளைச் சட்டம், இலங்கை சோசலிச குடியரசின் சட்டம் மீறப்படுவது வெளிப்படையாக இருந்தும் மாகாணசபை நிர்வாகம் இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக ஆணைக்குழுக்களை நிறுவியிருந்ததுடன், அதன் ஊடாக மாநகரசபையின் கட்டளைச் சட்டம் மீறப்பட்டுள்ளமை தெளிவாகியிருந்தது. மாநகரசபையின் கட்டளைச் சட்டம் மீறப்பட்டுள்ள நிலையில், அதனை மீறிய அதிகாரிக்கு எதிராக எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் மாநகரசபையின் செயற்பாடுகளில் எந்தவித தடங்கல்களும் ஏற்பட்டிருக்காது.

# 12 மணி நேரத்தில் தந்தையும் மகளும் தற்கொலை; காதல் விவகாரத்தில் வந்த வாய்த்தர்க்கத்தால் வினை

## மட்டக்களப்பு கஞவங்கேணியில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கஞவங்கேணி பிரதேசத்தில் 17வயது யுவதி ஒருவர் நஞ்சருந்தி மாலையில் தற்கொலை செய்து கொண்டதையடுத்து யுவதியின் தந்தையார் காலையில் வீட்டின் கூரையில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட நிலையில் நேற்று (09) காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கஞவங்கேணி முதலாம் பிரிவு அக்கரைவீதியைச் சேர்ந்த 17 வயதுடைய கிருஷ்ணகுமார் கிறிஷ்கா என்ற யுவதி, அவருடைய தந்தையான 53 வயதுடைய முத்து கிருஷ்ணகுமார் என்பவர்களே இவ்வாறு தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த யுவதி ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வருவதாகவும் இளைஞன் ஒருவரை அவர் காதலித்துவரும் நிலையில், யுவதியின் தந்தை காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவதினமான நேற்று முன்தினம் (08) மாலை குறித்த 17 வயது யுவதி வீட்டில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து யுவதியின் தற்கொலைக்கு காரணம் தந்தையார் தான் என அந்தப் பகுதி அயலவர்கள் பேசத்தொடங்கியதையடுத்து, யுவதியின் தந்தையார் நேற்று (09) காலையில் வீட்டின் அறையின் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த இரு சடலங்களையும் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகனுக்கு எதிர்வரும் 23 வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனை எதிர்வரும் 23ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி நேற்று (09) காணொளி மூலம் உத்தரவிட்டார்.

இணையதளங்களில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் படங்களை பதிவேற்றியமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் 3ஆம் திகதி தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனை ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைக்கப்பட்ட நிலையில், பொலிஸ் நிலையத்தில் வைத்து ஏறாவூர் பொலிஸார் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கொரோனா காரணமாக நீதிமன்றத்துக்கு அழைத்துவரமுடியாத காரணத்தினால் காணொளி மூலம் அவரைத் தொடர்ந்து எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## போடியார் புலம்பல்!



அரசியல் கைதிகள விடுதல செய்தது தமது ஜனாதிபதி கோட்டாதானாம் எண்டு மட்டக்களப்பு ஊதுகுழல் ராஜாங்க மந்திரி வியாழேந்திரன் சொல்லுறாரு எலுவா ஏதோ எல்லா தமிழ் அரசியல் கைதிகளயும் உட்டது போல் தவில் அடிக்காரு.. சரிரா தம்பி நீ சோரம்போனாலும் சோக்காத்தான் பக்கவாத்தியம் பாடி புழைக்கிரா..!

# கல்முனை பிரதேசங்களில் பெனடோலுக்கு தட்டுப்பாடு

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பிரதேச தனியார் மருந்தகங்களில் சாதாரண வலிகள் மற்றும் காய்ச்சலுக்குப் பயன்படுத்துகின்ற பெனடோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை அடைந்து வருகின்றனர்.

இதேவேளை, பெனடோல் இல்லாத சமயங்களில் சாதாரண வலிகளுக்குப் பயன்படுத்துகின்ற பெனடின் குளிசைகளைக்கூட பெறமுடியாத சூழ்நிலைகளையும் எதிர்கொண்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் மழை ஓய்ந்து பகலில் கடும் வெயிலும் இரவில் கடும் குளிரும் நிலவுவதால் தடிமன், காய்ச்சல் போன்றவற்றுக்கு மேற்குறித்த குளிசைகளின் தேவை உணரப்பட்டுள்ளது.

# கனேடிய உயர்ஸ்தானிகராலய ஆலோசகர் – மட்டு. மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவரின் செயலாளர் சந்திப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்புக்கு விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் வர்த்தகத்துறைக்கான ஆலோசகர் டேனியல் ஹூட் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவர் அலுவலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவரின் செயலாளர் சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் கனேடிய அரசாங்கத்துடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

குறிப்பாக, கனேடிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள், சமூகங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள், மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களுக்கூடாக தனிநபர் வருமானத்தினை உயர்த்துவதற்கான திட்டங்களை கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

# கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டிவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்கான அடிக்கல் நேற்று (09) நாட்டிவைக்கப்பட்டது.



ஜனாதிபதியின் சுபீட்சத்தின்பால் நாட்டை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நாடளாவிய ரீதியில் தொகுதி ரீதியாக ஒரு விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்திசெய்யும் திட்டத்தின்கீழ் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா, பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளுக்காக அனைத்து வசதிகளுடனான மூன்று விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்கான விளையாட்டு மைதானமான மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவனேசத்துரை சந்திரகாந்தனின் முன்மொழிவுக்கு அமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதானத்துக்கான அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளருமான பூ.பிரசாந்தன் கலந்துகொண்டதுடன், 05 மில்லியன் முதற்கட்ட நிதியின் ஊடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள விளையாட்டு மைதானத்துக்கான அடிக்கல்லினையும் நாட்டிவைத்தார்.

மேலும் இந்நிகழ்வுக்கு, ஆன்மீக அதிதியாக கல்லடி வேலூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வாசுதேவன் குருக்கள், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதித் தலைவர் எஸ்.யோகவேல் மற்றும் கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராசா, மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சுதர்சன், மாநகர சபையின் உறுப்பினர்களான சி.சுபராஜ், மதன், ஜெயா, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மண்முனை வடக்குக்கான தலைவர் கே.காந்தராஜா ஆகியோர் உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர்கள், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், மாவட்டத்தில் பாரியதொரு விளையாட்டு மைதானமாக சகல வசதிகளுடனும் அமையப்பெறவுள்ள குறித்த விளையாட்டு மைதானத்துக்கான அடிக்கல்லினையும் நாட்டிவைத்தனர்.

# மட்டு. மாவட்ட செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாதாந்த மீளாய்வுக் கூட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான கடந்த மாதத்துக்கான மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்று 09ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த மீளாய்வு கூட்டத்துக்கு மாவட்ட செயலக சமுர்த்தி திணைக்களத்தின் கணக்காளர் எஸ்.எம்.பசீர், 14 பிரதேச செயலகங்களைச் சார்ந்த தலைமையக முகாமையாளர்கள், முகாமைத்துவ பணிப்பாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், மாவட்ட செயலகத்தின் ஏனைய பிரிவுகளின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் ரீதியாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுத்துள்ள, முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் அவற்றுக்கான முன்னேற்றங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டிருந்ததுடன், தொடர்ச்சியாக சமுர்த்தி திணைக்களத்தின் ஊடாக எமது வினைத்திறனான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தினை மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் இதன்போது சகல உத்தியோகத்தர்களும் புரிந்துகொள்ளும் வகையில் மிகவும் விரிவாக தெளிவுபடுத்தியிருந்தார்.

இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலில் எதிர்காலத்தில் எவ்வாறாக சமுர்த்தி பயனாளிகளுக்கு ஆக்கபூர்வமான சிறந்த சேவையினை வழங்குவது என்பது தொடர்பாகவும் மாவட்டத்தில் பிரதேச ரீதியாக சமுர்த்தித் திட்டங்களை செயற்படுத்துகின்றபோது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டிருந்தன. அதேவேளை, சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைவாகவும் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைவாகவும் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து மாதாந்தம் வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணப் பெறுமதியினை அதிகரித்து வழங்கவுள்ளமை தொடர்பாகவும் இதன்போது உத்தியோகத்தர்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை மொரவெவ பகுதியில் கிரவல் மண் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்






(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - மொரவெவ பிரிவுக்கு உட்பட்ட எத்தாபெந்திவெவ பகுதியில் கிரவல் அகழ்வுக்கு எதிராக நேற்று (09) எதிர்ப்பு போராட்டமொன்றினை மேற்கொண்டனர்.

ரொட்டவெவ - எத்தாபெந்திவெவ வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு புனரமைப்பு செய்யப்பட்டதாகவும் தற்போது அவ்வீதியி னூடாக கிரவல் ஏற்றிக்கொண்டு டிப்பர் வாகனங்கள் அதிகளவில் செல்வதாகவும் இதனால் வீதிகள் சேதமடைவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியை பாதுகாக்கும் நோக்கில் வீதியினூடாக டிப்பர் வாகனங்களை கிரவல் ஏற்றிக்கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டாம் எனவும் தொடர்ச்சியாக இவ்வீதியால் டிப்பர் வாகனங்கள் செல்வதால் பாடசாலை மாணவர்களை பகுதிநேர வகுப்பிற்குகூட அனுப்பமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அப்பகுதியிலுள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே, உடைந்து காணப்படுகின்ற வீதியை புனரமைத்த பின்னர் கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்குமாறும் அதுவரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். குறித்த சம்பவ இடத்துக்கு வருகைத்தந்த பொலிஸார், கிரவல் அகழ்வு தொடர்பில் அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்து சட்ட ரீதியாக தங்களது கடமைகளை செய்வதாகவும் மக்கள் தேவையற்ற விதத்தில்கூட வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்ததையடுத்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்துசென்றனர்.

# செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி




(மட்டக்களப்பு நிருபர்)

வரலாற்று பிரசித்திப் பெற்ற மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன நவ குண்டபட்ஷ மகா கும்பாபிஷேக திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழாவின் முதல் நாளான நேற்று (09) எண்ணெய்க்காப்பு நடைபெற்றது.

இதன்போது சுகாதார நடைமுறையை கடைப்பிடித்து ஆலயத்துக்கு எண்ணெய்க்காப்பு சாத்துதலுக்கு வருகைத் தந்த பக்தர்கள் இடம்பெற்ற யாகபூஜைகளில் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்போது விநாயகர் வழிபாடு, விசேட திரவிய யாகம் மற்றும் பிரசாதம் வழங்குதல் என்பன இடம்பெற்றன. ஆலயத்தின் நிர்வாக சபையினரால் சிறப்பான முறையில் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றதுடன், இதன்போதும் பெருமளவான பக்தர்கள் வருகைதந்து எண்ணெய்க்காப்பு சாத்தினர். இன்றும் (10) எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தின் சிவஸ்ரீ கயிலை வாமதேவ குருக்கள் தலைமையில் இடம்பெற்றுவரும் மகா கும்பாபிஷேக திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழாவின் மகா கும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலைக்கு 3 மில்லியன் பெறுமதியான கட்டில்கள் கையளிப்பு



(மாவடிப்பள்ளி நிருபர்)

சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலைக்கு 3 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன வசதிகளுடன் கூடிய ஒரு தொகுதி கட்டில்கள் சியபத நிதி நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். திட்டத்தின் மூலம் இவை அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இதற்கான நிகழ்வு அண்மையில் வைத்திய அதிகாரி டாக்டர் ஸனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம்.பிரிம்சாத் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டு இவற்றை வழங்கிவைத்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு உதயதேவி புகையிரதத்தில் மோதி 82 வயது மூதாட்டி உயிரிழப்பு



(ஏறாவூர் நிருபர்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த உதயதேவி புகையிரத விபத்தில் 82 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு - பாலயடித்தோணா பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. கணபதிப்பிள்ளை வேலாத்தா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மனநோயாளியான மற்றும் செவிப்புலனற்ற இவர், புகையிரத பாதையைக் கடக்க முற்பட்டபோது விபத்தில் சிக்கியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இவரது சடலம் ஏறாவூர் புகையிரத நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தவேளை திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸிர் அங்கு சென்று முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்தார்.

சந்திவெளி பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பி.சி.ஆர் மற்றும் பிரேத பரிசோதனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

# அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் கிரமமாக இடம்பெற்று வருகின்றது. நாட்டில் ஓமிக்ரொன் வைரஸ் பரவல் அதிகரித்துக் காணப்படும் நிலையில் டெங்கு பரவலும் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா மற்றும் டெங்கு நோய்களினைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் மேற்கொண்டுள்ளார்.

அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய பொது இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில், பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சிரமதான நடவடிக்கை மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று (09) இடம்பெற்றது.

இதன்போது பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள், இச்சிரமதான நடவடிக்கையில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு மாவட்ட செயலக வளாகத்தினை சுத்தம்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேலும், கொவிட் -19 சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றி நடப்பதுடன், டெங்கு நுளம்பு பரவலில் இருந்து அவதானமாக இருக்குமாறும் வலியுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் மொழிப்பயிற்சியை பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கல்





(கல்குடா நிருபர்)

அரசாங்கத்தினால் அரச உத்தியோகத்தர்களின் மொழித்துறையை விருத்திசெய்யும் நோக்கில் அரச மொழிகள் திணைக்களத்தினால் மொழிப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்களில் தமிழ் மொழிமூலம் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் சிங்கள மொழித்துறையை விருத்திசெய்யும் நோக்கில், அரச மொழிகள் திணைக்களத்தினால் சிங்கள பயிற்சியை பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஓட்டமாவடியில் இடம்பெற்றது.

மொழித்திணைக்களத்தின் போதனாசிரியர் எம்.எம்.ஜெயினுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.உமாசங்கர், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.லஸந்த பண்டார, மொழித் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய இணைப்பாளர் ஜே.பி.பல்லவி, பாடநெறியின் பிரதேச செயலக இணைப்பாளர் பி.எம்.எம்.றாஸித், மொழித் திணைக்களத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலகங்களை சேர்ந்த 48 உத்தியோகத்தர்கள் இப்பாடநெறியை பூர்த்திசெய்துள்ளதுடன், அவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றதுடன், அதிதிகளுக்கு ஏற்பாட்டாளர்களால் நினைவு சின்னமும் வழங்கப்பட்டது.

# மட்டு. – கட்டுநாயக்க இ.போ.ச. பஸ் சேவைக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரும் வரவேற்பு




(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து தினசரி காலை 05 மணி மற்றும் காலை 08 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள பஸ் சேவை வெளிநாடுகளில் இருந்து வரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பயணிகளுக்கு இலகுவானதும் விரைவானதுமான சேவையாகும்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் போக்குவரத்து சேவையில் மீண்டும் சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளதால் பஸ்களை தேடி சிரமப்பட வேண்டிய அவசியமில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, செங்கலடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பயணிகள் பணத்தை வீணாக்காமல், உரிய நேரத்திற்கு வீடு செல்வதற்கும் இச்சேவை மிகப்பெரும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# ஓட்டமாவடி பல்நோக்கு கூட்டுறவு சங்க கட்டடத்தில் புதிய கோப் பிரஸ் வர்த்தக நிலையம் திறந்துவைப்பு




(கல்குடா நிருபர்)

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கமைவாக நாடளாவிய ரீதியில் கிராமத்துக்கு கிராமம் வீட்டுக்கு வீடு எனும் விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய கோப் பிரஸ் (CO - OP FRESH) வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலில் வினைத்திறன் மிக்க கூட்டுறவு சங்கங்களை தெரிவுசெய்து இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

“கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவு அதன் தனித்துவமான பயணத்தை நோக்கி” எனும் தொனிப்பொருளில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைவாக ஓட்டமாவடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள புதிய கோப் பிரஸ் வர்த்தக நிலையம் மற்றும் கலாசார மண்டபம் ஆகியன திறந்துவைக்கப்பட்டன.

ஓட்டமாவடி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.எம்.ஜெஸ்லின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் எம்.அஸ்மி ஆதம்லெப்பை, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.வி.தங்கவேல், ஓட்டமாவடி பிரதேசத்திற்கான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.ஏ.ஹாதி, கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கூட்டுறவு முன்பள்ளி மாணவர்களினதும் மற்றும் பிரதேச கலைஞர்களினது கலை, கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டதுடன், அதிதிகளும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிராம மக்களுக்கு குறைந்த விலையில் அனைத்துப் பொருட்களையும் இலகுவான முறையில் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



திருகோணமலை கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம் அதன் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான கோரிக்கை மகஜரினை கந்தளாய் விதாதா வள நிலையத்தில் வைத்து தேசியக் கூட்டுறவு அபிவிருத்தி அறக்கட்டளையின் தலைவர் சுரங்க ராப சிங்கவிடம் கங்கத்தலாவ ஊடகவியலாளர்கள் இணைந்து நேற்று (09) கையளிப்பதை படத்தில் காணலாம்.

(படம்: கந்தளாய் நிருபர்)

# அக்கரைப்பற்றில் வீடுகளை உடைத்து கொள்ளையிட்டுவந்த இரு பௌத்த தேரர்கள் உட்பட 07 கொள்ளையர்கள் கைது

## 56.5 பவுண் தங்க ஆபரணங்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, அக்கரைப்பற்றில் நீதவான் ஒருவரின் வீடு உட்பட பல வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட கொள்ளை கோஷ்டியைச் சேர்ந்த இரு பௌத்த தேரர்கள் உட்பட 7 பேரை விசேட பொலிஸ் குழுவினர் கைதுசெய்துள்ளதுடன், நீதவான் வீட்டில் கொள்ளையிட்ட தாலிக்கொடி உட்பட 55.5 பவுண் தங்க ஆபரணங்கள மீட்டுள்ளதாகவும் தலைமறைவாகியுள்ள பிரதான சூத்திரதாரி பாதாள குழு உறுப்பினர் தெமட்டகொடை சமிந்தவின் உதவியாளர் குணா அல்லது சத்தியா என்று அழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த குணசீலன் என பொலிஸ் உயரதிகாரி ஒருவர் நேற்று (09) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 3 வீடுகளிலும் டிசம்பர் 18ஆம் திகதி நள்ளிரவு நீதவான் வீட்டிலுமாக ஒருமாதத்தில் 4 வீடுகளின் ஜன்னல்களை கழற்றி உள் நுழைந்த கொள்ளையர்கள் நித்திரையில இருந்த குடும்பப் பெண்களின் கழுத்தில் இருந்த சுமார் 30 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகளை திருடிச்சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

தொடர் கொள்ளையில் ஈடுபட்டுவந்த கொள்ளையர்கள் நீதவானை கூரிய ஆயுதத்தால் குத்தித் தாக்கிவிட்டு வீட்டில் கொள்ளையிட்டுச் சென்றனர். இக்கொள்ளையர்கள் அவர்களது எந்தவிதமான தடயங்களையும் விட்டுச் செல்லாமல் பொலிஸாரை திணறடிக்கச் செய்தனர்.

இதனையடுத்து இந்தக் கொள்ளையர் களை பிடிப்பதற்காக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எல்.கே.டபிள்யூ கமல் சில்வாவின் ஆலோசனையில் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் முதலில் 3 பொலிஸ் அதிகாரிகள் தலைமையில் 3 பொலிஸ் குழுக்களை அமைத்து தொடர் விசாரணையில் ஈடுபட்டு வந்த நிலையில், அந்த பொலிஸ் குழுவிற்கு தலைமை தாங்கிய மூன்று உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்களான அசீம், பி.பிரகலாதன், பகீரதன் மற்றும் பொலிஸ் சார்ஜன்கள் 6 பேர் உட்பட 9 பேர்கொண்ட 4ஆவது விசேட பொலிஸ் குழுவினை அமைத்தனர்.

அந்த விசேட பொலிஸ் குழுவின் விசாரணையில் கடந்த டிசம்பர் 30ஆம் திகதி முதலில் திருக்கோவில் 2ஆம் பிரிவு நல்லையா வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய சந்துரு என்றழைக்கப்படும் மருமமுத்து அருந்தரகுமாரை கைதுசெய்து, அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் இந்தக் கொள்ளையர்களின் பிரதான சூத்திரதாரியான சத்தியா மற்றும் அக்ரம் ஆகியோருடன் பௌத்த தேரர்கள் தொடர்புபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 31ஆம் திகதி இரவு பௌத்த தேரர்களைத் தேடி தமண பிரதேசத்திலுள்ள தாம்போதி விகாரைக்குச் சென்று விசாரணை மேற்கொண்டதில், கடந்த 12ஆம் திகதி கொழும்பிலிருந்து குறித்த இரு பௌத்த தேரர்களில் ஒருவர் வந்து தங்கியுள்ளதுடன், மற்றொருவர் 28ஆம் திகதி குறித்த விகாரைக்கு வந்து தங்கியிருந்துள்ளதாகவும் வெளியே காரில் சென்றதாக தெரியவந்ததையடுத்து அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான அநுராதபுரம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் பௌத்த தேரர் ஒருவரும் கொழும்பு விகாரை ஒன்றைச் சேர்ந்த தேரர் ஒருவருமாக இரு தேரர்களுக்கும் போதைப்பொருள் வியாபாரியான சத்தியாவுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இரு தேரர்களுக்கும் போதைப்பொருள் தேவை ஏற்படும்போது சத்தியா வழங்கி வந்துள்ளதுடன், சத்தியாவின் பாவனைக்கு போதைப்போருள் தேவை ஏற்படும்போது இரு தேரர்களும் சத்தியாவுக்கு போதைப்பொருளை வழங்கி வந்துள்ளனர். அவனுடன் சேர்ந்து இரு தேரர்களும் புதையல் தோண்டல் மற்றும் கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

இதன்போது குறித்த விகாரையில் கண்காணிப்பில் ஈடுபட்ட விசேட பொலிஸ் குழுவினர் முதலாம் திகதி இரவு தேரர்கள் இருவரும் காரில் வெளியேறிச் செல்வதை அவதானித்ததையடுத்து காரை பின் தொடர்ந்து சென்ற நிலையில், சம்மாந்துறை நகர்ப்பகுதியில் வைத்து பின்தொடர்ந்து வந்த பொலிஸாரின் கண்களில் மண்ணை தூவிவிட்டு அங்கிருந்து தேரர்களின் கார் அல்லிமுல்லை வீதியால் நிந்தவூர் பிரதான வீதிக்குச் சென்று அங்கிருந்து காரைதீவு வெட்டுவாய்க்கால் பகுதிக்குச் சென்று சத்தியாவுக்காக தேரர்கள் காத்திருந்தனர்.

அப்போது சத்தியாவும் அக்ரமும் மோட்டார்'சைக்கிளில் தேரர்கள் காத்திருக்கும் வெட்டுவாய்க்கால் பகுதிக்குச் சென்றுள்ள நிலையில், காரை பின்தொடர்ந்த விசேட பொலிஸ் குழுவிற்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்றபோது கொள்ளையர்கள் தேரர்களுடன் பேசிக்கொண்டிருப்பதை கண்ட பொலிஸார், கொள்ளைக்காரனான அக்ரத்தை முதலில் மடக்கிப்பிடிக்க முற்பட்டனர். பொலிஸார் மீது சத்தியா துப்பாகிப்பிரயோகம் மேற்கொண்டபோது குறி தவறி அக்ரம் மீது குண்டு பாய்ந்ததில் அக்ரம் படுகாயமடைந்ததையடுத்து அங்கிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சத்தியாவும் தேரர்களின் கார் சாரதியும் தப்பியோடியுள்ளனர்.

இதன்போது இரு பௌத்த தேரர்களையும் கைதுசெய்ததுடன், அவர்களின் காரிலிருந்து நீதவானை தாக்கிய சைக்கிளின் சொக்கட் பொல் மற்றும் போதைப்பொருட்களை மீட்டனர். அத்துடன், துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த கொள்ளையனான அக்ரத்தை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் அவனின் உடைமையிலிருந்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டனர்.

இந்தக் கொள்ளைகளின் பிரதான சூத்திராரியான இந்த சத்தியா யார்? மட்டக்களப்பு களுதாவளை முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த குணா அல்லது கராட்டி சத்தியா என்றழைக்கப்படும் முருகமூர்த்தி குணசீலன் (44 வயதுடைய) ஒரு பட்டதாரி. கராட்டி பயிற்சிபெற்ற இவன் முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து புனர்வாழ்வு பெற்று வெளியேவந்து, பாதாள குழுவைச் சேர்ந்த தெமட்டகொட சமிந்தவின் உதவியாளராக செயற்பட்டு வந்ததுடன், திருக்கோவில் மற்றும் கொழும்பு வத்தளையில் திருமணம் முடித்துள்ளார். இவர் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த வருடம் களுத்துறை சிறைச்சாலை வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடைய இவர், 2017 அவுஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்தல் தொடர்பாக 28 இலட்சம் ரூபாவுடன் மட்டக்களப்பில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் பிணையில் வெளிவந்துள்ளார்.

அதேவேளை, பல குற்றச்செயல்கள் தொடர்பாக இலங்கையில் பல பொலிஸ் நிலையங்களின் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்ற இவர், காலையில் இலங்கையில் நிற்பார். இரவில் கடல்வழியாக படகில் இந்தியாவில் நிற்பார். இவருக்கு மட்டக்களப்பில் சுமார் 65இற்கும் மேற்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளும் வழக்குகளும் உள்ளன.

இந்நிலையில், குற்றச்செயல் காரணமாக சத்தியா கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறையில் இருக்கும் 2014ஆம் ஆண்டு இரு மோட்டார்சைக்கிள் திருட்டு, சட்டவிரோத துப்பாக்கியான செட்கண் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பாக அம்பாறை வாங்காமத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட அக்ரம் என்பவனின் தந்தையான தச்சுத்தொழிலாளியான அக்கரைப்பற்று 6ஆம் குறிச்சியைச் சேர்ந்த தம்பி ஓடாவி என்றழைக்கப்படும் ஆதம்லெப்பை அப்துல் ரகீம் சிறையில் அடைக்கப்பட்டபோது சிறையில் தம்பி ஓடாவிக்கும் சத்தியாவுக்கும் இடையே நட்பு ஏற்பட்டது.

இருவரும் சிறையிலிருந்து பிணையில் வெளிவந்தபோது இருவரும் சேர்ந்து பல கொள்ளைச் சம்பவங்களிலும் போதைப்பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டுவந்த நிலையில், சத்தியாவின் கொள்ளை நடவடிக்கைக்காக தம்பி ஓடாவி கொழும்பில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்துவந்துள்ள தனது மகனான அக்ரத்தை வரவழைத்து, சத்தியாவுக்கு உதவிபுரியுமாறு மகனிடம் தெரிவித்து சத்தியாவை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் வீட்டின் மூடிய ஜன்னல்களை கழற்றி பின்னர் கிறில்களை கழற்றுவதில் திறமைவாய்ந்த அக்ரத்தை சத்தியா இணைத்துக்கொண்டு கொள்ளைகளில் ஈடுபட்டனர். கொள்ளையிடும் வீட்டின் ஜன்னல் மற்றும் கிறில்களை கழற்றுவதே அக்ரத்தின் பணி. ஒரு ஜன்னல் கிறிலை கழற்றுவதற்கு 60 ஆயிரம் ரூபா பணத்தை சத்தியா வழங்கி வந்துள்ளதுடன், கொள்ளையடிக்கப்படும் வீடுகளை அந்தந்தப் பகுதியிலுள்ள வேவுபார்ப்பதற்கான கொள்ளையர்கள் மூலம் வீட்டின் முழுத் தகவல்களை தெரிந்துகொண்டு சத்தியா கொள்ளையிட்டு வந்துள்ளான்.

அக்கரைப்பற்று நீதவான் வீடு உட்பட ஆலையடிவேம்பில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஒருவரின் வீடு, கோளாவில் பகுதியில் ஒரு வீடு உட்பட்ட வீடுகளை (தம்பி ஓடாவியார் தச்சுத்தொழிலாளியான அவர் குறித்த வீடுகளில் கதவு, ஜன்னல் பொருத்தியமைக்கமைய வீட்டின் உட்பகுதியை தொடர்பாக தெரிந்துவைத்து சத்தியாவுக்கு வேவுபார்த்து கொடுத்த நிலையில்) ஜன்னல் கிறில்களை கழற்றி அங்கு நித்திரையில் இருந்த பெண்களின் தாலிக் கொடிகளை வெட்டி கொள்ளையடித்து வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து காரைதீவு வெட்டுவாய்க்கால் பகுதியிலிருந்து தப்பியோடிய தேரர்களின் கார் சாரதியை 2ஆம் திகதி இரவு கைதுசெய்ததுடன், கைதுசெய்யப்பட்ட இரு தேரர்கள் மற்றும் படுகாயமடைந்த கொள்ளையன் அக்ரம் ஆகியோரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்துவந்த நிலையில், கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை வாங்கி விற்றுவந்தவரும் சத்தியாவுடன் நெருங்கிய தொடர்புடைய செங்கலடி நகைக்கடை ஒன்றில் தொழில் புரிந்துவந்த செங்கலடி ரமேஸ்புரத்தைச் சேர்ந்த கண்ணன் என்றழைக்கப்படும் யோகராஜா பரமலிங்கம் என்பவரை கைதுசெய்து, பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொள்ளையடிக்கப்பட்டு மட்டக்களப்பில் விற்கப்பட்ட 45 பவுண் தங்க ஆபரணங்களை மீட்டுள்ளதுடன், நீதவான் வீட்டில் கொள்ளையடித்த 11.5 பவுண் தாலிக்கொடியை கொழும்பு செட்டியார் தெருவில் இரு கடைகளில் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 56.5 பவுண் தங்க ஆபரணங்களை மீட்டுள்ளனர்

அதேவேளை, இந்த கொள்ளைக் குழுவுடன் தொடர்புடைய விநாயகபுரத்தைச் சேர்ந்த முன்னாள் போராளியான ராஜன் என்றழைக்கப்படும் இருதயராஜன் என்பவரை 6ஆம் திகதி கைதுசெய்ததையடுத்து இதுவரை இரு பௌத்த தேரர்கள் உட்பட 7 பேரை கைதுசெய்துள்ளதுடன், செங்கலடி ரமேஸ்புரத்தைச் சேர்ந்த கண்ணன் என்றழைக்கப்படும் யோகராஜா பரமலிங்கம், விநாயகபுரத்தைச் சேர்ந்த முன்னாள் போராளியான ராஜன் என்றழைக்கப்படும் இருதயராஜன் ஆகிய இருவரையும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் ஏனைய 5 பேரையும் அக்கரைப்பற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தலைமறைவாகியுள்ள பிரதான சூத்திரதாரியான சத்தியா மற்றும் தம்பி ஓடாவியார் ஆகிய இருவரையும் பொலிஸார் வலைவீசி தேடிவருகின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 87 கலைஞர்களுக்கு சுவதம் விருது வழங்கி கௌரவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட செயலகம் அனைத்து பிரதேச செயலகங்களோடு இணைந்து ஏற்பாடு செய்திருந்த மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபரை வரவேற்றல், கலைஞர்கள் ஒன்றுகூடல் மற்றும் சுவதம் கலைஞர் விருது வழங்கி கௌரவிப்பு - 2021 நிகழ்வு என்பன அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தலைமையில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்சான் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

பாரம்பரிய இஸ்லாமிய பொல்லடி மற்றும் மேள - தாளங்களுடன் அதிதிகள் மண்டபத்தை நோக்கி அழைத்துச்செல்லப்பட்டு இறைவணக்கம், மங்கள விளக்கேற்றல் நிகழ்வுகளோடு மண்டப நிகழ்வுகள் ஆரம்பம் செய்யப்பட்டன.

வருடந்தோறும் நடைபெற்றுவரும் “சுவதம்” கலைஞர் விருது வழங்கும் நிகழ்வுக்கு ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்படும் பத்து கலைஞர்களை கௌரவிப்பது வழமையாகும். இம்முறை நாட்டில் ஏற்பட்டிருந்த Covid -19 கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் இருந்தும் 06 கலைஞர்களை கௌரவிப்பதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை வழங்கப்பட்டிருந்தன. மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூலமான 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 87 கலைஞர்கள் இங்கு கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு நினைவுச் சின்னம், சான்றிதழ், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பெயர் பொறிக்கப்பட்ட லெப்டொப் பேக் என்பன சிறப்புப் பரிசாக வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் தற்போதைய நிந்தவூர் பிரதேச செயலாளருமான சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் ஆகியோர்



கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன், இணைந்து சேவையாற்றியமையை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்செய்க் ரி.எம்.எம்.அன்சார், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எம்.ஹனீபா, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன், திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன், இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நசீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர்.

பிரதேச செயலாளர்கள் சார்பான உரையினை காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் நிகழ்த்தினார். கலைஞர்கள் சார்பாக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இலக்கியத்துறைக்கான சுவதம் விருதினை பெற்றுக்கொள்கின்ற அப்துல் சமத் அஹமட் கியாஸ் உரையாற்றினார்.

நிகழ்வின்போது ஆலையடிவேம்பு நர்த்தன சிவாலய கலை மன்ற மாணவி கோபிகா வரவேற்பு நடனத்தை வழங்கியதுடன், கலைஞர் ஏ.பி.எம்.றியால், எம்.ஐ.முராத் ஆகியோர் பாடல் பாடி மகிழ்விக்க மௌலவி அப்துல் சுக்கூர் கலைஞர்களையும் அதிதிகளையும் வரவேற்று நாட்டார் பாடலை பாடினார். அட்டாளைச்சேனை ஹாஜா நிஜாமுத்தீன் பாவா, நசுருதீன் பாவா ஆகியோரது றபான் பைத் பாடல் விழாவுக்கு அணிசேர்த்திருந்தன.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் திருமதி எம்.எஸ்.றஜாயா (அட்டாளைச்சேனை), திருமதி நவப்பிரியா பிரசாந் (அக்கறைப்பற்று), கே.சுதர்சன் (நிந்தவூர்), திருமதி.எம்.வை.நௌஸானா (சம்மாந்துறை), சி.கோகுலதாஸ் (ஆலையடிவேம்பு), திருமதி.வி.தயாஜினி (கல்முனை வடக்கு), ஏ.எல்.எம்.ஷினாஸ் (நாவிதன்வெளி), திருமதி.எம்.எச்.பௌசுல் ஹிபானா (கல்முனை), திருமதி ஏ.எச்.ஷபீகா (சாய்ந்தமருது) வி.விக்னேஸ்வரன் (காரைதீவு), திருமதி பி.சங்கரி (பொத்துவில்), திருமதி நிரோஜினி நவநீதன் (திருக்கோவில்) திருமதி.ஏ.எல்.பரீனா, திருமதி எம்.ஏ.நௌபீஸா (இறக்காமம்) ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

விழா இறுதி நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸுக்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர். இதன்போது ஆலையடிவேம்பு பிரதேச கலைஞர் பெருமாள் சாந்தி குறித்த நிகழ்வின்போது மண்டபத்திலேயே கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி தயாரித்த அலங்காரம் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக அன்னமலை ஓவியக் கலைஞர் என்.பிருந்தா வரைந்த முன்னாள் அரசாங்க அதிபர் டி.எம்.எல்பண்டாரநாயக்க, தற்போதைய அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் ஆகியோரது ஓவியமும் கையளிக்கப்பட்டன.

விழாவின் நன்றி உரையினை நாவிதன்வெளி பிரதேச செயலகக் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நிகழ்த்த, நிகழ்வுகள் அனைத்தையும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கலைஞர் அறிவிப்பாளர் ஏ.சி.நௌஷாத் தொகுத்து வழங்கினார்.

## கர்நாடகா 'ஹிஜாப்' விவகாரம்

# ஆடையை காரணம்காட்டி கல்வி கற்பதைத் தடுக்கக்கூடாது

## – மலாலா இந்தியாவிடம் கோரிக்கை



இந்திய செய்திகள்

**• கடலோர கர்நாடகாவில் பதற்றம்; 144 தடை உத்தரவு பிறப்பிப்பு**

''ஹிஜாப்' விவகாரத்தில் பெண்கள் கல்வி கற்பதைத் தடுக்க வேண்டாம்'' என நோபல் விருது பெற்ற மலாலா யூசுப் இந்தியாவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து மலாலா மேலும் தெரிவித்துள்ளதாவது,

''பெண்கள் உடையை முன் வைத்து அவர்களை கல்வி கற்க விடாமல் தடுப்பது அச்சுறுத்துவதாக இருக்கிறது. பெண்களின் ஆடை குறைந்தாலோ கூடினாலோ அது பிரச்சினையாகி விடுகிறது.

முஸ்லிம் பெண்களை விளிம்புக்குத் தள்ள வேண்டாம் என்றும் இந்திய தலைவர்களுக்கு மலாலா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை ஹிஜாப் விவகாரம் குறித்து காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா வெளியிட்ட அறிக்கையில்,

''பிகினியோ, முக்காடோ, ஜீன்சோ, பர்தாவோ எதுவாக இருந்தாலும் அதை அணியும் உரிமை பெண்களுக்கு உண்டு. இது, இந்திய அரசியலமைப்பு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பெண்களை துன்புறுத்துவதை நிறுத்துங்கள்'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் தெரிவிக்கையில், ''கர்நாடகாவில் நடப்பது கலக்கத்தைத் தூண்டுகிறது. கள்ளமில்லா மாணவர்கள் மத்தியில் மதவாத விஷச் சுவர் எழுப்பப்படுகிறது. ஒற்றைச் சுவர் தாண்டியிருக்கும் பக்கத்து மாநிலத்தில் நடப்பது தமிழகத்துக்கும் வந்துவிடக் கூடாது. முற்போக்கு சக்திகள் மேலும் கவனமாக இருக்க வேண்டிய காலம் இது'' எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஹிஜாப் விவகாரம் குறித்து பல்வேறு தரப்பினரும் தமது கருத்துகளை தெரிவித்துள்ளனர்.

**கடலோர கர்நாடகாவில் பதற்றம்**

கர்நாடகாவில் ஹிஜாப் விவகாரத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. நிலைமையை கட்டுப்படுத்த அடுத்த 3 நாட்களுக்கு பாடசாலைகள், கல்லூரிகளுக்கு 3 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் உடுப்பி அரசு பி.யூ.கல்லூரியில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் (முக்காடு), பர்தா (முகத்திரை), புர்கா (முழு நீள உடை) அணிந்து வருவதற்கு இந்துத்துவா அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து அங்கு ஹிஜாப் அணிய தடை விதிக்கப்பட்டதால், 06 முஸ்லிம் மாணவிகள் தொடர் போராட்டத்தில் இறங்கினர்.

கடந்த வாரத்தில் மங்களூரு, குந்தாப்பூர், ஷிமோகா, பத்ராவதி, சிக்கமகளூரு உள்ளிட்ட இடங்களிலும் ஹிஜாப் அணிந்து வந்த மாணவிகள் கல்லூரிக்கு வெளியே நிறுத்தப்பட்டனர். இதனால் மாணவிகள் 06ஆவது நாளாகவும் நேற்றுமுன்தினம் வீதியில் அமர்ந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதை கண்டித்து ஏ.பி.வி.பி. மாணவ அமைப்பினர் காவி துண்டு அணிந்து ஜெய்ராம் என முழக்கம் எழுப்பினர். இதனை கண்டித்து பாபா சாகேப் அம்பேத்கர் மாணவர் அமைப்பினர் நீல துண்டு அணிந்து ஜெய் பீம் என முழக்கம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

கடலோர கர்நாடகாவில் தொடங்கிய இந்த போராட்டம் நேற்றுமுன்தினம் பாகல்கோட்டை, ஹாசன், மண்டியா, கோலார் ஆகிய மாவட்டங்களிலும் பரவியது. ஷிமோகாவிலுள்ள பாபுஜி நகரில் ஏ.பி.வி.பி. மாணவ அமைப்பினர் முஸ்லிம் மாணவிகளை சுற்றிவளைத்து ஜெய் ராம் என முழக்கம் எழுப்பினர். மேலும் தேசிய கொடி கட்டும் கம்பத்தில் ஏறி, காவிக் கொடியை கட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது.

மாணவ அமைப்பினர் கல்வீச்சிலும் ஈடுபட்டதால் கல்லூரி நிர்வாகம் கட்டுப்படுத்த முடியாமல் திணறியது. இதனையடுத்து பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர். அங்கு பதற்றம் நிலவுவதால் அங்கு 24 மணி நேரத்துக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**தனியாளாக முழக்கம்**

ஹாசன் அரசு கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் ஹிஜாப் அணிந்துவந்த மாணவியை காவி உடை அணிந்த ஏ.பி.வி.பி. அமைப்பினர், சூழ்ந்து கொண்டு ஜெய்ஶ்ரீராம் என முழக்கம் எழுப்பினர். அந்த கூட்டத்துக்கு அஞ்சாமல் மாணவி தனியாளாக 'அல்லாஹூ அக்பர்' என முழக்கம் எழுப்பிய காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இதற்கிடையே ஹிஜாப் விவகாரத்தில் பதற்றம் அதிகரித்ததைத் தொடர்ந்து, கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை, அம்மாநில கல்லூரிகளுக்கும் உயர்நிலைப் பாடசாலைகளுக்கும் 3 நாட்கள் விடுமுறை அளித்து உத்தரவிட்டார். இந்நிலையில் பெங்களூரிலுள்ள பாடசாலைகள், பல்கலை முன் கல்லூரிகள், பட்டயக் கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களின் வாயிலிலிருந்து 200 மீற்றர் சுற்றளவிற்குள் அனைத்து வகையான கூட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் கர்நாடக பொலிஸ் தடை விதித்துள்ளது.

இந்தச் சூழலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுப்பி மாவட்டத்தின் குந்தாப்பூர் பல்கலைக்கழக முன் கல்லூரியில், கொடிய ஆயுதங்கள் கொண்டுவந்ததற்காக இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் அங்கு கத்தியை காட்டி மிரட்டிய மூவர் தப்பியோடினர். இந்நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் மாணவர்கள் இல்லை என கர்நாடக உள்துறை அமைச்சர் அரக ஞானேந்திரா தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் முழுவதும் போராட்டங்கள் நடக்கும் நிலையில், பெங்களூருவில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்த 02 வாரத்துக்கு தடை விதித்து பெங்களூரு பொலிஸ் ஆணையர் ஆணையிட்டுள்ளார்.

# இந்தியாவில் அனைவருக்கும் சம உரிமை உண்டு; அவரவர் கலாசாரத்தை பின்பற்ற அனுமதிக்கவேண்டும்

**மாணவி முஸ்கான் செவ்வி**





''அவர்கள் 'ஜெய்ஶ்ரீராம்' எனக் கூறியதால் நான் 'அல்லாஹூ அக்பர்' என்றேன்

''ஒன்றிணைந்த இந்திய நாட்டில் அவரவர் கலாசாரத்தை பின்பற்ற அனுமதிக்க வேண்டும்'' என கர்நாடகாவின் மாண்டியாவில் 'அல்லாஹு அக்பர்' என முழங்கிய மாணவி முஸ்கான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், ''இந்தியாவில் அனைவருக்கும் சம உரிமையுள்ளது. இது ஒன்றிணைந்த நாடு என தெரிவித்தார். அவர்கள் அவர்களது கலாசாரத்தை பின்பற்றட்டும், நாங்கள் எங்கள் கலாசாரத்தை பின்பற்றுகிறோம். எங்கள் கலாசாரத்தை பின்பற்ற அனுமதிக்கவேண்டும்.

நாங்கள் அவர்கள் பற்றி கேள்வி எழுப்பாத நிலையில், எங்களைப் பார்த்தும் கேள்வி எழுப்ப வேண்டாம். அவர்கள் 'ஜெய்ஶ்ரீராம்' என முழக்கமிட்டதாலேயே நான் எனது முழக்கத்தை பதிவு செய்தேன். யார் மீதும் தவறு கிடையாது. எதற்காக பயப்படவேண்டும். எனக்கு முன் எனது 4 நண்பர்கள் கல்லூரிக்குள் அழுதுகொண்டே சென்றனர்.

''நீதிமன்றம் வேண்டாம் என்றால் என்ன செய்வீர்கள்?'' என்ற செய்தியாளரின் கேள்விக்கு, இதை தவிர்க்க முடியாது. இது எங்களுக்கு முக்கியம். என்ன தீர்ப்பு எவ்வாறு வருகிறது என பார்ப்போம்'' என முஸ்கான் பதிலளித்துள்ளார்.

கர்நாடகா மாநிலம் மாண்டியா மாவட்டத்திலுள்ள கல்லூரியில் ஹிஜாப் அணிந்து கல்லூரிக்கு வந்த மாணவிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்.எஸ்.எஸ் ஐ சேர்ந்தவர்கள் ஜெய்ஶ்ரீராம் என கோஷம் எழுப்பினர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் தீயாய் பரவி வருகிறது. தலைவர்கள் பலரும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட காவி உடையணிந்து கோஷம் எழுப்பிய மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பந்தபட்ட்ட மாணவி முஸ்கான் வழங்கியுள்ள செவ்வியில்,

''நான் என்னுடைய எசைன்மெண்டை சமர்ப்பிப்பதற்காக கல்லூரிக்குச் சென்றேன். நான் புர்கா அணிந்திருந்த காரணத்தால், எங்கிருந்தோ வந்த சிலர் என்னை கல்லூரிக்குள் அனுமதிக்க மறுத்தனர். புர்காவை கழற்றிவிட்டு கல்லூரிக்குள் செல்லுமாறு அதிகாரத்துடன் கூறினர். நான் கல்லூரிக்குள் நுழைந்தபோது, அவர்கள் ஜெய்ஶ்ரீராம் என முழக்கமிட்டனர்.

தொடர்ந்து அங்கு கூடிய பலரும் என்னை துரத்தினர். அப்போது என்னுடைய கல்லூரி முதல்வரும், ஆசிரியரும் எனக்கு ஆதரவாக நின்றனர். அவர்கள் தொடர்ந்து ஜெய்ஶ்ரீராம் என முழங்கியதால் நான் அல்லாஹூ அக்பர் என முழக்கமிட்டேன். அவர்களில் சிலர் விரல்களை உயர்த்தி காட்டினர். நான் கவலைப் படவில்லை'' எனக்கு சிறிது பயம் ஏற்பட்டது. பின்னர் என் கல்லூரி ஆசிரியர்களை பார்த்ததும் ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்'' - என்றார்.

**மாணவிக்கு ரூ.05 இலட்சம் பரிசு அறிவிப்பு!**

இதேவேளை, ஹிஜாப் அணிந்து கல்லூரிக்கு வந்த மாணவியை கோஷம் எழுப்பியவாறு முற்றுகையிட முயன்ற மாணவர்களுக்கு முன் பதில் கோஷம் எழுப்பிய மாணவி முஸ்கானுக்கு 05 இலட்சம் ரூபாவை பரிசாக முஸ்லிம் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

# கர்நாடக அரசின் ஒரே சீருடை திட்டத்துக்கு இடைக்கால தடைவிதிக்க முடியாது!

## கர்நாடக உயர்நீதிமன்றம் மறுப்பு





கர்நாடக அரசின் ஒரே சீருடை திட்டத்துக்கு இடைக்கால தடைவிதிக்க முடியாது என்று கர்நாடக உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் உடுப்பி அரசு மகளிர் பி.யூ. கல்லூரியில் டிசம்பர் மாதம் ஹிஜாப் அணிந்து வந்த 6 முஸ்லிம் மாணவிகளுக்கு வகுப்பறையில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் அவர்கள் கல்லூரியில் தனியாக அமரவைக்கப்பட்டார்கள். இதனால், கல்லூரி நிர்வாகத்தைக் கண்டித்து 6 மாணவிகளும் ஹிஜாப் அணிந்து தர்ணாவில் ஈடுபட்டனர். கல்லூரி நிர்வாகம் தங்களது உடை விவகாரத்தில் தலையிடுவதாக கர்நாடக உயர்நீதிமன்றத்திலும் தேசிய மனித உரிமை ஆணையத்திலும் அவர்கள் முறையிட்டனர்.

மனுத்தாக்கல் செய்வதற்கு முன்பாக கர்நாடக அரசு ஒரே சீருடை என்ற சட்டத்தை, மாநிலம் தழுவிய அளவில் அமுல்படுத்துவதாக தெரிவித்திருந்தது. அதாவது கல்லூரிகள் தங்களுக்கு ஏற்றாற்போல் இந்த சட்டத்தை அமுல்படுத்திக் கொள்ளலாம் என்றும் கர்நாடக அரசு தெரிவித்திருந்தது. இதனையடுத்து பல கல்லூரிகளில் ஹிஜாப் அணிந்து சென்ற மாணவிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தொடர்ந்து போராட்டம் வெடித்தது. இத்தகைய பரபரப்பான சூழலில் ஹிஜாப் பிரச்சினை தொடர்பான வழக்கு கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நீதிபதி கிருஷ்ணா தீட்சித் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி, இந்த சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரிக்கவேண்டும் என்று வாதிட்டார்.

மனுதாரர் தரப்பிலோ, மாணவர்களுக்கான சீருடை குறித்து எந்த வழிகாட்டுதலும் கர்நாடக கல்விச் சட்டத்தில் இல்லை. ஹிஜாப் அணிந்த மாணவிகளை வகுப்புகளுக்கு அனுமதிக்காததால் அவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. சீருடையை பொறுத்தவரை மாநில அரசு மாற்றி மாற்றி பேசுவதாக குற்றம்சாட்டப்பட்டது. தற்போது, இறுதி பரீட்சைக்கு இன்னும் 2 மாதங்களே உள்ளன. எனவே ஒரே சீருடை சட்டத்துக்கு குறைந்தது 2 மாதங்கள் தடை விதிக்கவேண்டும் எனவும் மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனை கேட்ட நீதிபதி, கர்நாடக அரசின் ஒரே சீருடை திட்டத்துக்கு இடைக்கால தடைவிதிக்க முடியாது என்றும் ஹிஜாப் அணிவது தொடர்பான பிரச்சினையை உயர்நீதிமன்றத்தின் விரிவான அமர்வு விசாரிக்கும் எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை இந்த வழக்கு உயர் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடக மாநிலம் முழுவதும் போராட்டங்கள் நடக்கும் நிலையில், பெங்களூருவில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்த 2 வாரத்துக்கு தடை விதித்து பெங்களூர் பொலிஸ் ஆணையர் ஆணையிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்கள் 11பேரையும் விடுவிக்கக்கோரி இராமேஸ்வரத்தில் காலவரையற்ற வேலைநிறுத்தம்

இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட 11 மீனவர்களையும் விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தமிழக மீனவர்களின் மீது இலங்கை கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்துவதுடன் சமீப காலமாக கைது நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், திங்கட்கிழமை (07ஆம் திகதி) தமிழக மீனவர்கள் 11 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

இதனால், அம்மீனவர்களை விடுதலை செய்யக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால் 800இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்குச் செல்லவில்லை.





தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் நேற்றுமுன்தினம் (08ஆம் திகதி) கடிதம் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மீனவ சங்கப் பிரதிநிதிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் வெள்ளிக்கிழமை ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டுப்படகு மீனவ சங்கத் தலைவர் ராயப்பன் தலைமையில் இராமேஸ்வரம் மீனவர்கள் சிறைபிடிப்பு மற்றும் தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதைக் கண்டித்து பாம்பன் கடற்கரையில் நேற்றுமுன்தினம் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

**ஒமிக்ரொன் கண்டறியப்பட்டதுமுதல் இதுவரை...**

# 13 கோடி பேருக்கு தொற்று; 5 இலட்சம் பேர் உயிரிழப்பு




**உலக சுகாதார ஸ்தாபனம்**

ஒமிக்ரொன் மாறுபாடு கண்டறியப்பட்டதுமுதல் இதுவரை 5 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாத இறுதியில் ஒமிக்ரொன் வேறுபாடு குறித்து அறிவிக்கப்பட்டதுமுதல் இதுவரை 13 கோடி பேருக்கு தொற்று உறுதி செய்யபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்ட்டா மாறுபாட்டை விட ஒமிக்ரொன் வீரியம் குறைந்து காணப்படுவதாகவும், ஒமிக்ரொன் பரவலை கட்டுப்படுத்தும் திறன் தடுப்பூசிக்கு இருப்பதாகவும் கூறப்பட்ட நிலையில் 5 இலட்சம் பேர் உயிரிழந்திருப்பது சோகத்திற்கு அப்பாற்பட்டதென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் ஒமிக்ரொன் பரவலின் நடுப்பகுதியில் இருப்பதாகவும் இறுதிக்கட்டத்தை நெருங்க அதிக பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

# 135 பேருக்கு கொரோனா தொற்று; பெய்ஸ் நகருக்கு சீல் வைத்த சீனா



கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த, சீனாவின் பெய்ஸ் நகரில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு பொது போக்குவரத்துச் சேவை துண்டிக்கப்பட்டு, கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. உணவகங்களில் பார்சல் சேவைக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற பயணங்களை தவிர்த்து வீடுகளிலேயே இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சீனா பூஜ்ஜிய கொவிட் அணுகுமுறையை பின்பற்றிவரும் நிலையில், நேற்றுமுன்தினம் பெய்ஸ் நகரில் புதிதாக 135 பேருக்கு கொரோனா உறுதியானதால் சுமார் 42 இலட்சம் மக்கள் வசிக்கும் அந்நகரில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு சீன புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குப் பின்னர் கொரோனா பாதிப்புகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**கழுத்தில் சிக்கிய ரயருடன் ஆறு ஆண்டுகளாக அவதி**

# விடுதலையானது முதலை



இந்தோனேஷியாவில் கழுத்தில் சிக்கிக்கொண்ட ரயருடன் 6 ஆண்டுகளாக அவதிப்பட்டுவந்த முதலை மீட்கப்பட்டு ரயர் அகற்றப்பட்டுள்ளது.

பலூ நகரத்திலுள்ள ஆற்றில் முதலையொன்று இருசக்கர வாகனத்தின் ரயர் கழுத்தில் சிக்கி அவதிப்பட்டு வந்தது. கடந்த 6 ஆண்டுகளாக சிக்கியிருந்த அந்த ரயரை அகற்ற எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளும் தோல்வியடைந்தன.

ரயரை அகற்றுபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என பலூ நகர நிர்வாகம் அறிவித்திருந்தது. இந்நிலையில், டிலி என்பவர் 3 வாரங்கள் முயற்சிசெய்த பின் முதலையைப் பிடித்து அதன் கழுத்திலிருந்த ரயரை வெற்றிகரமாக அகற்றியுள்ளார்.

# கொலம்பியாவில் கடும் மண்சரிவு: 14 பேர் பலி; 35 பேர் படுகாயம்

கொலம்பியாவின் மத்திய பகுதியில் ஏற்பட்ட கடும் மண்சரிவில் சிக்கி பல வீடுகள் இடிந்து வீழ்ந்த சம்பவத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன், 35இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, காயமடைந்தவர்கள் மீட்ட மீட்புக்குழுவினர் சிகிச்சைக்காக அருகிலிருந்த வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். Dosquebradas பகுதியில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கோப்பி பயிர் விளையக்கூடிய இந்தப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக



மண்சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும் அங்கு Otun ஆற்றில் வெள்ளம் அதிகளவில் பாய்வதால் கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# ஈரானில் தஞ்சம்கோரிய ஆப்கானியர்களை ஈவிரக்கமின்றி சுட்டுக்கொன்ற இராணுவம்



ஈரானில் தஞ்சம் கோரி நுழைய முயன்ற ஆப்கான் மக்களை அந்நாட்டு இராணுவம் இரக்கமின்றி சுட்டுக் கொன்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

தலிபான் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி ஈரானை நோக்கி சென்றவர்களில் நூறு பேரை அந்நாட்டு இராணுவப் படை சுட்டுக் கொன்று உடலை திருப்பி அனுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 400இற்கும் மேற்பட்டோரை கடுமையாகத் தாக்கி விரட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது. புலம்பெயர்ந்து பல்வேறு பணிகளுக்காக வந்த இளைஞர்கள் உட்பட பலர் அடித்து துன்புறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைபிடிக்கப்பட்ட 29 தமிழக மீனவர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குக!

**பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்**



இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட 29 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து, பிரதமருக்கு மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில்,

இலங்கைக் கடற்படையினரால் கடந்த சில வாரங்களுக்குள் அப்பாவி இந்திய மீனவர்கள் மூன்றாவது முறையாகக் கைது செய்யப்பட்டிருப்பதை தங்களது தனிப்பட்ட கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.
கடந்த 7ஆம் திகதியன்று மூன்று மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 11 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து, அந்த நாட்டின் மயிலிட்டி கடற்படைத் தளத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த அப்பாவி மீனவர்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்று கைதுசெய்யப்படுவது குறித்து பலமுறை மத்திய அரசிடம் முறையிட்டு வருகிறோம்.

இப்போது கைதுசெய்யப்பட்ட 11 மீனவர்களையும் சேர்த்து, இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 மீனவர்கள் இலங்கைக் காவலில் உள்ளனர். 79 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் வசம் உள்ளன. இந்தச் சம்பவத்தால் இரு நாட்டு மீனவர்களிடையே பதற்றமான சூழல் நிலவுகிறது.

மேலும், இலங்கை அரசால் தமிழக மீன்பிடிப் படகுகளை ஒருதலைப்பட்சமாக ஏலம் விடுவது, இலங்கையைச் சேர்ந்த சிலரால் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது போன்ற விடயங்கள் குறித்து ஏற்கனவே தங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன்.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடல் பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு ஏற்ற நல்ல சூழல் நான் விடுத்த தொடர்ச்சியான கோரிக்கைகள் மூலம் ஏற்படும் என நம்பினேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படும் நடவடிக்கைகள் இதுவரை குறைவதற்கான அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை. எனவே, இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண தூதரக அளவில் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்படும் எண்ணற்ற நிகழ்வுகளைத் தடுத்திட இந்திய அரசின் உயர்நிலை அளவில் உறுதியான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். தமிழக மீனவர்கள் அடிக்கடி துன்புறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும், பாக். வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கும் அவர்களது பாரம்பரிய உரிமையைப் பறிப்பதாகும். கடலில் தமிழக மீனவர்களின் உயிருக்குத் தொடர்ச்சியான அச்சுறுத்தலுடன் பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிக்கும் உரிமைக்கும் சவால் விடுவது போன்றதாகும்.

அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் இதுபோன்ற நிகழ்வுகள், சமூக மற்றும் அரசியல் நிலைகளில் மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன. எனவே, மீனவர்கள் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வுகாண தூதரக முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் பிரதமர் உடனடியாகத் தலையிட்டு இலங்கை அரசால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 29 மீனவர்களையும், அவர்களது 79 மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

- இவ்வாறு அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் விலக்கு மசோதா; ஆளுநர் மாளிகையில் ஒப்படைப்பு

நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு கோரும் மசோதாவை தமிழக அரசு நேற்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தது. பின்னர், நீட் விலக்கு மசோதா மீதான விவாதத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்று, தங்கள் தரப்பு கருத்துகளை தெரிவித்தனர்.

அதன் தொடர்ச்சியாக தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் நீட் விலக்கு மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்று விரிவாகப் பேசினர்.

நீட் விலக்கு மசோதாவுக்கு பா.ஜ.கவைத் தவிர்த்து, தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், இடதுசாரிகள், ம.தி.மு.க., பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, புரட்சி பாரதம் உள்ளிட்ட கட்சிகள் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தன.

இதைத் தொடர்ந்து, நீட் தேர்விலிருந்து விலக்கு பெற வகைசெய்யும் மசோதா சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் ஒருமனதாக மீண்டும் நிறைவேற்றப்பட்டதாக சட்டமன்றத்தின் சபாநாயகர் அப்பாவு அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

இந்நிலையில், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா, கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்மீது ஆளுநர் எப்போது நடவடிக்கை எடுப்பார் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

**மசோதாவை உடனடியாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவையுங்கள்!**

நீட் விலக்கு மசோதாவை உடனடியாக குடியரசுத்



தலைவருக்கு அனுப்பிவைக்க தமிழ்நாடு ஆளுநரை முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

மாநில அரசின் உரிமைகளை நீட் தேர்வு பறிக்கிறது என்று சுட்டிக்காட்டிய சிதம்பரம், மாநில அரசின் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தெரிவுசெய்து அனுமதிப்பது மாநில அரசின் உரிமை. நம் மாநிலம், நமது அரச கல்லூரிகள், நமது மாணவர்கள், இவர்களில் யாரைத் தெரிவுசெய்து அனுமதிப்பதென்பது நம்முடைய அதிகாரம் அல்லவா?. நீட் தேர்விலுள்ள குறைகளையும், பாகுபாட்டையும் பல முறை எடுத்துச் சொல்லியாகி விட்டது. இதில் மத்திய அரசு ஏன் தலையிட வேண்டும்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# தொடரும் ஆழ்துளை கிணறு சோகம்: 2 குழந்தைகள் உயிரிழந்த பரிதாபம்



எத்தனையோ அறிவியல் முன்னேற்றங்கள் வந்த பின்னரும் கூட ஆழ்துளை கிணற்றில் விழும் குழந்தைகளை உயிருடன் மீட்பதென்பது இன்னும் சவாலாகத்தான் இருக்கிறது. இதனால்தான் எத்தனையோ விழிப்புணர்வுகள் செய்தாலும் எத்தனையோ போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினாலும் எத்தனையோ கடும் கட்டுப்பாடுகள் கொண்டுவந்தாலும் ஆழ்துளை கிணற்றில் வீழ்ந்து குழந்தைகள் உயிரிழக்கும் பரிதாபம் தொடர்கதையாகத்தான் இருக்கிறது.

மணப்பாறை சிறுவன் சுதீர் மரணத்திற்கு பிறகு ஆழ்துளை கிணறு சம்பந்தமாக பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டு பெரும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஆனாலும் தொடர்கின்றன ஆழ்துளை கிணறு மரணங்கள்.

புதுச்சேரி அருகே ஆழ்துளை கிணற்றில் வீழ்ந்து 2 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் கரம்பை கிராமத்தைச் சேர்ந்தவர் ராமு - இனிதா தம்பதிக்கு லிவிங் (4வயது) மகனும் ரோகித் என்கிற மூன்று வயது மகனும் இருந்துள்ளனர்.

ராமுவின் பக்கத்து வீட்டில் இரண்டு தினங்களுக்கு முன் ஆழ்துளை கிணறொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆழ்துளை கிணற்றின் அருகே பக்கவாட்டில் 5 அடிக்கு குழி தோண்டியுள்ளனர். அதன் வழியாக ஆழ்துளை கிணறு தோண்டும்போது வெளியேறிய சகதி கலந்த கழிவுநீர் விடப்பட்டுள்ளது. ஆழ்துளை கிணறு தோண்டி முடித்தபின்னர் அதை மூடிவைத்துவிட்டு தொழிலாளர்கள் சென்றுள்ளனர்.
ஆனால், ஆழ்துளை கிணறு பக்கவாட்டில் தோண்டப்பட்ட 5 அடி ஆழமுள்ள குழியை மூடாமல் விட்டுவிட்டுள்ளனர்.

இந்நிலையில், அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த லெனின் மற்றும் ரோகித் ஆகிய இருவரும் எதிர்பாராதவிதமாக அந்த குழிக்குள் தவறி வீழ்ந்துள்ளனர். அப்போது அந்த பகுதியில் யாரும் இல்லாததால் சேறும் சகதியுமாக கிடந்த அந்த குழிக்குள் குழந்தைகள் விழுந்ததை யாரும் கவனிக்கவில்லை.

விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் நீண்டநேரமாகியும் வீட்டுக்கு வராததால் இனிதா அவர்களை தேடியுள்ளார். பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியாக அந்த ஆழ்துளை கிணறு உள்ள பகுதி வழியாக சென்ற பெண்ணொருவர், குழந்தைகளின் கால்கள் வெளியே தெரிவதை கண்டு அதிர்ச்சி கூச்சலிட்டு அக்கம்பக்கத்தினரை அழைத்துள்ளார். குழிக்குள் வீழ்ந்த குழந்தைகள் தலைகுப்புற சகதிக்குள் சிக்கி உயிரிழந்து கிடப்பது தெரியவந்திருக்கிறது. அங்கிருந்தவர்கள் குழந்தைகளை மீட்டு மேலே கொண்டுவந்ததும் தாய் இனிதாவின் கையில் கொடுத்துள்ளனர். குழந்தைகளை மடியில் போட்டு தாய் இனிதா கதறி அழுத காட்சி பார்ப்போரை கண்கலங்க வைத்துள்ளது. இதனையடுத்து உயிரிழந்த 2 குழந்தைகளின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக கதிர்காமம் அரச மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.



## சீன வீராங்கனைக்கு எதிராக சீனாவில் குற்றச்சாட்டு

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் சீனாவுக்காக போட்டியிடுவதற்காக அமெரிக்க குடியுரிமையை கைவிட்ட அமெரிக்காவில் பிறந்த ஃபிகர் ஸ்கேட்டர் ஜூ யி, குழு நிகழ்வில் சுவரில் மோதி போட்டியிலிருந்து வெளியேறிய பின்னர் சீன சமூக ஊடகங்களில் அவதூறுகளை எதிர்கொண்டார்.

அவர் சீன பெற்றோருக்கு கலிபோர்னியாவில் பிறந்தவர். பெவர்லி ஜூ என்ற அமெரிக்க தேசிய புதிய பட்டத்தை வென்றார். அவர் கீழே விழுந்ததற்காக சமூக ஊடகங்கள் அவரை கேலி செய்தன, சீன மொழியில் சரளமாக பேசவில்லை என்று விமர்சனம் செய்தன. விளையாட்டு விசுவாசத்தை மாற்றியதால் அமெரிக்காவிலுள்ள பழைமைவாத அரசியல் பிரமுகர்களின் விமர்சனத்தையும் எதிர்கொண்டார்.

திங்கட்கிழமை போட்டியிட்ட பிறகு, "நான் நிம்மதியாக இருக்கிறேன், ஏனெனில், (அங்கே) நிறைய அழுத்தம் உள்ளது. மற்றும் மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள்'' என்று ஜூ கூறினார். "நேர்மையாக, நான் மிகவும் கடினமாக பயிற்சி பெற்றுள்ளேன், முக்கிய விடயம் மனதளவில் சமாளிப்பது என்று நினைக்கிறேன்'' என்றார்.

சீனாவின் அதிகாரபூர்வ சின்ஹூவா செய்தி நிறுவனம் ஒரு ட்வீட்டில் தனது ஆதரவை வழங்கியது, "சீனாவின் இளம் ஸ்கேட்டர்களுக்கு, எதிர்காலத்தில் சிறப்பாக விளையாட அவர்களுக்கு நேரமும் சகிப்புத்தன்மையும் தேவை. அழாதே, ஜூ யி. நாங்கள் உன்னுடன் இருக்கிறோம்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

## ஐந்தாவது தங்கம் வென்ற உஸ்ட்



24ஆவது பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பீஜிங்கில் நடைபெற்றுவரும் நிலையில், 1500 மீற்றர் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் 5ஆவது தங்கப் பதக்கத்தை வென்றார் நெதர்லாந்து வீராங்கனை ஐரீன் உஸ்ட்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்பீட் ஸ்கேட்டிங் பிரிவு 1500 மீற்றர் பந்தயத்தில் ஐரீன் உஸ்ட் தங்கப் பதக்கம் வென்றார். நெதர்லாந்தின் 35 வயதான ஐரீன் தனிநபர் பிரிவில் 5 ஒலிம்பிக் போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். மேலும் அவர் ஒட்டுமொத்தமாக ஒலிம்பிக்கில் 12 பதக்கங்களை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவால் 32 வீரர்கள் தனிமைப்படுத்தலில்



பீஜிங் ஒலிம்பிக்கில் விளையாடுவதற்காக சீனாவுக்குச் சென்ற 32 வீரர்கள் கொரோனா தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

32 விளையாட்டு வீரர்கள் கொரோனா வைரஸுக்கு நேர்மறை சோதனை செய்த பின்னர் தனிமைப்படுத்தப்பட்ட வசதிகளில் உள்ளனர். மேலும் அவர்கள் சராசரியாக ஏழு நாட்கள் தனிமையில் செலவிடுகிறார்கள் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீஜிங் விளையாட்டுகளுக்கான நிபுணர் மருத்துவக் குழுவின் தலைவரான பிரையன் மெக்லோஸ்கி இது தொடர்பாக அறிக்கையில், "முடிந்தவரை பலர் தனிமைப்படுத்தப்படுவார்கள், ஆனால், அது பாதுகாப்பாக இருக்கும்போது மட்டுமே. 50 விளையாட்டு வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட பெரும்பாலான விளையாட்டு வீரர்கள் நலமாக இருக்கின்றனர். அவர்களுக்கு எந்த மருத்துவ சிகிச்சையும் தேவையில்லை'' என்று தெரிவித்தார்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## வடக்கு – கிழக்கு மாகாண அணிகள் இன்று நேருக்கு நேர் மோதல்

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வருகின்ற சுதந்திர கிண்ண மாகாண அணிகளுக்கிடையிலான உதைபந்து தொடரில் இன்றைய தினம் இரண்டு விறுவிறுப்பான போட்டிகள் நடைபெறுகின்றன.

இதில் நாவலப்பிட்டியில் மாலை 3 மணிக்கு நடைபெறுகின்ற போட்டியில் வடக்கு மாகாண அணியும், கிழக்கு மாகாண அணியும் முதல் தடவையாக நேருக்கு நேர் மோதுகின்றன. இது வரையில் நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலின் முதலிடத்தில் காணப்படுகின்ற வடக்கு மாகாண அணி ஒரு போட்டியிலும் தோல்வியை தழுவாத நிலையில், அதே நிலையில் தோல்வி இல்லாமல் புள்ளிப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் காணப்படுகின்ற கிழக்கு மாகாண அணியை எதிர்கொள்கிறது. இந்த போட்டி மிகவும் விறுவிறுப்பான போட்டியாக அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

இதேவேளை, இன்று போகம்பரவில் மாலை 3 மணிக்கு நடைபெறுகின்ற மற்றுமொரு போட்டியில் ரஜரட்ட மாகாண அணியும், சப்ரகமுவ மாகாண அணியும் நேருக்கு நேர் மோதிக்கொள்கின்றன. இதுவரையில் ஒவ்வொரு அணியும் தலா நான்கு போட்டிகளில் விளையாடியிருக்கும் நிலையில், புள்ளிப்பட்டியலின் முதலிடத்தில் வடக்கு மாகாண அணி 3 வெற்றிகளுடன் 10 புள்ளிகளை பெற்று காணப்படுகிறது. இரண்டாவது இடத்தில் 8 புள்ளிகளுடன் சப்ரக முவ மாகாண அணி காணப்படும் அதேவேளை, கிழக்கு மாகாண அணி 6 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும், ரஜரட்ட மாகாண அணி 4 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

INDEPENDENCE TROPHY - CEYLON PROVINCIALS LEAGUE
2022 POINTS TABLE

| TEAM | P | W | D | L | GF | GA | GD | PTS |
|---|---|---|---|---|---|---|---|---|
| NORTHERN | 4 | 3 | 1 | 0 | 6 | 1 | 5 | 10 |
| SABARAGAMUWA | 4 | 2 | 2 | 0 | 3 | 1 | 2 | 8 |
| EASTERN | 4 | 1 | 3 | 0 | 2 | 1 | 1 | 6 |
| WAYAMBA RAJARATA | 4 | 1 | 1 | 2 | 5 | 6 | -1 | 4 |
| WESTERN | 4 | 1 | 1 | 2 | 7 | 5 | 2 | 4 |
| SOUTHERN | 4 | 1 | 1 | 2 | 4 | 4 | 0 | 4 |
| CENTRAL | 4 | 1 | 1 | 2 | 2 | 5 | -3 | 4 |
| UVA | 4 | 1 | 0 | 3 | 2 | 5 | -3 | 3 |








மெர்கன்டைல் கிரிக்கெட் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற சி.பி.எல். மஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடரில் நவலோக வைத்தியசாலை பி.எல்.சி. சம்பியன் பட்டம் வென்றது. பிரதம அதிதியாக பங்கேற்ற சி.பி.எல். மஞ்சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ரொமேஸ் ஜயதிலக்க சம்பியன் கிண்ணத்தை வழங்குவதை படத்தில் காணலாம்.

## புதிய மைல்கல்லை எட்டிய ரொனால்டோ




உதைபந்து உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ, சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் அதிக ஃபாலோவர்களை பெற்ற முதல் நபர் என்ற புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். சுமார் 400 மில்லியன் பேர் அவரை இன்ஸ்டாவில் பின்தொடர்ந்து வருகின்றனர்.

கடந்த 2020 ஜனவரியில் அவர் 200 மில்லியன் ஃபாலோவர்களை இன்ஸ்டா தளத்தில் பெற்றிருந்த நிலையில், அடுத்த இரு வருடங்களில் மேலும் 200 மில்லியன் ஃபாலோவர்களை பெற்று சாதனை படைத்துள்ளார் ரொனால்டோ.

## "மாலிங்கவின் ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக அமையும்''

### அணித்தலைவர் தசுன்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக செயற்படுவது தமது அணிக்கு கூடுதல் பலம் என இலங்கை அணியின் தலைவர் தசுன் சானக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியானது 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையிலான முதல் போட்டி ஆரம்பமாகும் நிலையில், இணைய தொழிநுட்ப வாயிலாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இலங்கை அணியின் தலைவர் தசுன் சானக்க இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் எமது அணியினர் சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவார்கள் என நம்புகிறேன். லசித் மாலிங்க போன்ற அனுபமிக்க வீரரின் ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக அமையும் என தெரிவித்தார்.

## ஏறாவூரில் கிரிக்கெட் சீருடை அறிமுக விழா

(றம்ஸீன் முஹம்மட்)





ஏறாவூர் லக்கிஸ்டார் விளையாட்டு கழகத்தின் உத்தியோகபூர்வமான சீருடை அறிமுக விழா அண்மையில் டாக்டர் அஹமட் பரீட் விளையாட்டு மைதானத்தில் லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாக தலைவர் ஏ.ஸி.ஏ.சலாம் தலைமையில் இடம்பெற்றது.

லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கான உத்தியோகபூர்வ சீருடைக்கு ஏறாவூர் நகர சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். றியாழ் தனது சொந்த நிதியில் அனுசரணை வழங்கினார். சீருடை அறிமுக விழாவை முன்னிட்டு ஏறாவூர் யங் ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்குமான சினேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் செய்யத் அலிஸாஹிர் மௌலானாவும், கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ்.நழீம், நகரசபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். றியாழ் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஆர். ஹர்ஷ டி சில்வா, சியப்பத்தா எல்.எல்.சி. நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம்.பிரிம்ஷாத் ஆகியோரும் அதிதிகளாக ஏறாவூர் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.எம்.ஆஷிக், செயலாளர் ஏ.எம்.அஸ்மி மற்றும் பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7